
தமிழரசு
செப்டம்பர் 2003



| | | |
|---|---|---|
| *முதல் பக்க அட்டை* | : | திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா |
| *இரண்டாம் பக்க அட்டை* | : | பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்துக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார் |
| *நான்காம் அட்டை* | : | நீலகிரி மாவட்ட அரசு விழா |


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034
ஆவணி – புரட்டாசி
செப்டம்பர் 2003
மலர் : 35 இதழ் : 3
விலை ரூ.10


## இந்த இதழில்...


- திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா பல்கலைக்கழகத் தகுதியுரை ....... 2
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 20ஆவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை ....... 5
- சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை ....... 12
- நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை ....... 24
- தந்தை பெரியாரைப் பற்றி தமிழகப் பெருமக்கள் ....... 35
- பெருந்தகையாளர்கள் போற்றிய பேரறிஞர் அண்ணா ....... 36
- உலகத் தமிழ் இணைய மாநாடு 2003 ....... 37
- நடமாடும் காவல் நிலையம் ....... 42
- காய்கறிக் கழிவினைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் புதிய திட்டம் ....... 44
- புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை ....... 45
- மக்களின் நலனுக்கு ஏற்ற வகையில் அரசியலமைப்பு செயல்பாடு ....... 57
- ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம் ....... 64
- தமிழ்ப்பொறி என்னும் புதிய கணினி மென்பொருள் ....... 65
- குடிசைவாழ் மக்களுக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகள் ....... 66
- கூட்டுறவுத்துறை இணையதளம் ....... 68
- கோ–ஆப்டெக்ஸ் மூலம் புதிய வடிவமைப்பில் பட்டு, பருத்தி சேலைகள் ....... 69
- ஒட்டப்பிடாரத்தில் மகளிர் கல்லூரி ....... 70
- திடக்கழிவு மேலாண்மை மற்றும் துப்புரவுப் பணி தனியார் மயமாக்கும் திட்டம் ....... 71
- இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் ஜரிகையின் தரத்தினைக் கண்டறியும் புதிய கருவி ....... 74
- தமிழ்நாடு தழைக்க தன்னிகரற்ற முதலமைச்சர் தந்த விரிவான தரிசு நிலத்திட்டம் ....... 75



*ஆசிரியரும் வெளியிடுபவரும்* : **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

# நிருவாகம் - சமூக முன்னேற்றம் - கிராமப்புற வளர்ச்சி ஆகிய துறைகளில் முதல்வர் அவர்களின் அரிய சாதனைகளுக்குப் பாராட்டு

– பாரதிதாசன் பல்கலைக்கழகத் தகுதியுரை



மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு "பெருமைதரு முதுமுனைவர்" (Doctor of Letters - Honoris Causa) பட்டத்தை வழங்குவதற்கான விளக்கத்தை சமர்ப்பிப்பதில் பெருமை அடைகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1948–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ஆம் நாள் மைசூரில் பிறந்தார். சென்னையிலுள்ள சர்ச்பார்க் கான்வென்டில் மெட்ரிகுலேஷன் கல்வி பயின்றார். கல்விச் சிறப்பு, கலைத்திறமை, பேச்சாற்றல் காரணமாக அவர் தலைசிறந்த மாணவியாகத் திகழ்ந்தார்.

அவரது கலைத்துறைத் திறமையினை பாராட்டும் வகையில், 1972ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு அவருக்கு "கலைமாமணி" விருதை வழங்கி பெருமைப்படுத்தியது.

நுண்கலை, எழுத்து, பேச்சு ஆகியவற்றில் அவருக்குள்ள அசாதாரணமான திறமையினை அங்கீகரிக்கும் வகையில், 1991ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்தது.

1992ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், அவருக்கு "டாக்டர் ஆப் சயின்ஸ்" (Doctor of Science) பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து, கடந்த 1993ஆம் ஆண்டு மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் "டாக்டர் ஆப் லெட்டர்ஸ்" (Doctor of Letters) பட்டத்தை வழங்கி சிறப்பித்தது.

கடந்த ஜூன் திங்களில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் "டாக்டர் ஆப் சயின்ஸ்" (Doctor of Science) பட்டத்தை வழங்கியுள்ளது.

1984 முதல் 1989ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக பொறுப்பு வகித்த அவர், நாட்டின் வளர்ச்சிக்காக சிறப்பாக செயலாற்றி, தேசியத் தலைவர்களின் பாராட்டு மற்றும் அங்கீகாரத்தையும், தமிழ்நாட்டு மக்களின் அன்பையும் பாசத்தையும் பெற்றார்.

1989ஆம் ஆண்டு போடிநாயக்கனூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவர் என்ற சிறப்பைப் பெற்றார்.

மக்களின் மகத்தான ஆதரவுடன், 1991 சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலம் பெற்ற அவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆனார். 24–6–1991 முதல் 12–5–1996 வரை அவர் முதலமைச்சராக பொறுப்பு வகித்தார்.

14–5–2001 முதல் 21–9–2001 வரை மீண்டும் அவர் முதலமைச்சராகத் திகழ்ந்தார்.

ஆண்டிபட்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் வெற்றி கண்ட அவர், 2–3–2003 முதல் தமிழ்நாட்டின் முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்.

தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று, நாட்டில் முதன்மை மாநிலமாக உருவாக்கப்பட வேண்டும் என்பதனை இலட்சியமாகக் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செயலாற்றி வருகிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம் இந்த இலக்கினை அடைவதற்கான வரைபடமாக அமைந்துள்ளது. உண்மையாகச் சொல்லவேண்டுமானால் அவரது ஆற்றல்மிக்க தலைமையில், நிருவாகத்திலும், ஆட்சித் துறையிலும் மகத்தான சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டு, பிற மாநில அரசுகள் பின்பற்றக் கூடிய உன்னதநிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மின்சாரம், போக்குவரத்து, குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு, மக்கள் நல்வாழ்வு, நிதி உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் சீர்திருத்தங்களை அவர் அறிமுகப்படுத்தியுள்ளார்.

பிரச்சனைகள் குறித்த அவரது அறிவியல் அணுகுமுறை மற்றும் அறிவாற்றல், முக்கியமான பொதுப் பிரச்சனைகளுக்கு, நடைமுறை சாத்தியமான தீர்வுகள் ஏற்பட வழிவகுத்துள்ளன.

நீர் ஆதாரம் மற்றும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவரும் சூழலில், மழைநீர் சேகரிப்பு இயக்கத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அளித்துள்ள முக்கியத்துவம் இதற்கு உரிய எடுத்துக்காட்டாக உள்ளது.

மத்திய திட்டக்குழு, அவர் மேற்கொண்டுள்ள சீர்திருத்த நடவடிக்கைகளை வெளிப்படையாகப் பாராட்டியதுடன், அவரது சீர்திருத்தக் கொள்கைகளை ஏற்று, 2003–2004ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடாக ரூ.7ஆயிரம் கோடி வழங்க நிர்ணயித்துள்ளது.

ஒரு நவீன தமிழகத்தை உருவாக்கவேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் விருப்பம், தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு நிருவாகத்தை பெருமளவில் பயன்படுத்த வழிவகுத்துள்ளது.

ஊரகத் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவிடும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மற்றொரு புதுமையான திட்டமாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆண்–பெண் சமத்துவத்திற்காக அயராது பாடுபட்டு வருகிறார். ஆதரவற்ற குழந்தைகள், குறிப்பாக பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அவர் தொட்டில் குழந்தை திட்டத்தைக் கொண்டு வந்ததோடு, பெண்களுக்கு அதிகாரம் வழங்கக்கூடிய மகளிர் சுயஉதவிக் குழுக்களை மாநிலம் தழுவிய பொருளாதார இயக்கமாக மாற்றியமைத்துள்ளார்.

பல்வேறுத் திட்டங்களின் மூலம், பெண்கள் தொழில் முனைவோருக்கான திறமையினை பெற்றிட வழிவகுத்துள்ளார். மேலும் வீர, தீர செயல்கள் புரியும் பெண்களை ஊக்குவிப்பதற்காக "கல்பனா சாவ்லா" விருதினை ஏற்படுத்தியுள்ளார்.




இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் பெண் போலீஸ் கமாண்டோ படையினை உருவாக்கியிருப்பது, பெண்கள் எந்தவொரு வீரசெயலையும் செய்வதற்கும் திறமை வாய்ந்தவர்கள் என்பதில் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையினை வெளிப் படுத்துகின்றது.

இந்திய கலாச்சாரம், பாரம்பரியச் சிறப்பு, அறநெறிகள் ஆகியவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் என்ற வகையில், ஆலய திருப்பணி மற்றும் அன்னதானத் திட்டங்களை அவர் அறிமுகப் படுத்தியுள்ளார். தர்காகளுக்கும், அன்னதானத் திட்டத்தினை விரிவுபடுத்தியதன் மூலம் அனைத்து மதங்களையும் மதிக்கும் அவரது பரந்த மனப்பான்மையை அறிய முடிகிறது.

அவரது தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமையின் கீழ், அடிப்படைக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியை அனைவரும் கற்கவேண்டும் என்பதற்காக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும், எல்.கே.ஜி. முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை அறிவியல் தமிழை அறிமுகப்படுத்திய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும்.

தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக ஆக்குவதில் செல்வி டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்களுக்குள்ள ஆழ்ந்த ஈடுபாடு, நலிந்த பிரிவினர் குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகள் வாழ்வு மேம்பாட்டிற்கான அவரது தொடர் முயற்சி ஆகியவற்றை அங்கீகரிக்கும் வகையில் செல்வி டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் நிருவாகம், சமூக மேம்பாடு மற்றும் கிராமப்புற வளர்ச்சி ஆகிய துறைகளில் படைத்துள்ள மகத்தான சாதனையினை பாரதிதாசன் பல்கலைக்கழகம் பதிவு செய்வதை பெருமையாக கருதுகிறது.

பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவின் பரிந்துரையின் பேரில், பல்கலைக் கழகத்தின் வேந்தரான மேதகு தமிழக ஆளுநரின் ஒப்புதலுடன் செல்வி டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு பெருமைதரு முதுமுனைவர் (Doctor of Letters - Honoris Causa) பட்டம் வழங்க பரிந்துரைப்பதை பெருமையாகவும், சிறப்பாகவும் கருதுகிறேன்".

*2-9-2003 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி* ***ஜெ ஜெயலலிதா*** *அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டபோது பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களால் படிக்கப்பட்ட தகுதியுரை.*

* * *




# புதிய சவால்களைச் சந்திக்க மகத்தான பொருளாதார மாற்றம்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 20ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உங்களுடன் சேர்த்து என்னையும் கௌரவப்படுத்துவதையும் உங்களிடையே பட்டமளிப்பு விழா சிறப்புரையாற்றுவதற்கும் கிடைத்த இந்த அரிய வாய்ப்பிற்கு உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன்.

### இறுதி மூச்சு இருக்கும் வரை மக்களுக்காகப் பணியாற்றுவேன்

தமிழ்நாட்டில் பொதுசேவைத் துறையில் நான் செய்த பல்வேறுத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு என்னை “டாக்டர் ஆப் லெட்டர்ஸ்” (Doctor of Letters - Honoris Causa) என்ற டாக்டர் பட்டத்திற்கு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றக் குழு என்னைத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த நேரத்தில், கடந்த ஆகஸ்ட் 15ஆம் தேதி புனிதஜார்ஜ் கோட்டை கொத்தளத்திலிருந்து சுதந்திர தினத்தன்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து ஒன்றை இங்கு கோடிட்டுக் காட்ட விழைகின்றேன். நான் அந்த உரையில் “பொது மக்கள் தான் தெய்வம் அந்த தெய்வத்துக்கு வழிபாடு செய்ய வந்திருப்பவர்கள் தான் நாம் எல்லோரும்? நம்முடைய கடமையைச் செய்வதே நாம் அந்த தெய்வத்துக்குச் செய்கின்ற வழிபாடு” என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்த அடிப்படையில் எந்தவித இடர்ப்பாடுகளும் இன்றி நான் நேசிக்கும் தமிழக மக்களுக்கு என்னுடைய வாழ்நாள் முழுவதும் பணியாற்றவே விரும்புகின்றேன். இதன் மூலம் எவ்வித எதிர்பார்ப்புகளையும் அல்லது பிரதிபலன்களையும் நான் எதிர்பார்க்கவில்லை. மாறாக தொடர்ந்து எனக்கு வாய்ப்புகள் தந்தால் எனது ஆயுட்காலம் முழுவதும்--வாய்ப்பளிக்கும் மக்களுக்காகப் பணியாற்றவும் சித்தமாக உள்ளேன். கல்விக் கோயிலான இந்த பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் மிகவும் அரிதாக வழங்கப்படும் இந்த “பெருமைதரு முதுமுனைவர்” என்னும் சிறப்பு டாக்டர் பட்டத்தை உள்ளன்போடு ஏற்றுக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

### இந்தியாவிலேயே உயர்ந்த தகுதி பெற்ற பல்கலைக்கழகம்

மிகக் குறுகிய காலத்தில் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டு 21 ஆண்டுகளேயான நிலையில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் தனது கல்விப் பணியில் சிறப்பான முத்திரை பதித்துள்ளது. இப்பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட 104 பயிற்சி நிறுவனங்கள் உள்ள நிலையில் இப்பல்கலைக்கழகத்தின் தெற்குப் பகுதியில் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் பள்ளி ஒன்றை நிறுவியுள்ளது.




இப்பல்கலைக்கழகத்தின் இந்தப் பள்ளியில் பயின்ற பல்வேறு அறிவியல் மாணவர்கள் தற்போது பிரபலமாகி வரும் புதிய துறைகளான நான்லீனியர் டைனமிக்ஸ் மையம் (Centre for Non-Linear Dynamics) மற்றும் கடலியல் உயிரினங்களை மேம்படுத்துவதுக் குறித்து ஆராய்ச்சிப் படிப்புகள் (National Facility for Marine Cyanobacteria). உயர் கல்வி வழங்கும் நிறுவனங்களை மதிப்பீடு மற்றும் அங்கீகாரம் அளிக்கும் நாக் கமிட்டி (National Assessment and Accreditation Council) பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் கல்வியின் தரத்தை ஆய்வு செய்து இப்பல்கலைக் கழகத்திற்கு 86.5 சதவீதம் மதிப்பெண்கள் வழங்கி “A” கிரேட் தகுதிக்கு உயர்த்தியுள்ளது. இதற்கு முன் இந்தியாவிலேயே அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் எதற்கும் இந்த அளவிற்கு உயர்ந்த தகுதிச் சான்று வழங்கப்பட்டிருக்காது என்றே நான் நினைக்கின்றேன்.

இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் முத்தையா மாரியப்பன் மற்றும் அவரது குழுவினர் மற்றும் அனைத்து துறைகளின் பேராசிரியர்களையும், இந்தச் சாதனையை எட்டுவதற்கு முழு மனதுடன் பணியாற்றிய அனைவரையும் நான் வாழ்த்துகின்றேன்.

பாரதிதாசன் பல்கலைக்கழக நிர்வாக மேலாண் பயிற்சி மையம் நாட்டில் உள்ள வர்த்தக பள்ளிகளில் முன்னணியில் உயர்ந்த இடத்தில் இருப்பதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இதற்குக் காரணம் நிர்வாகப் பள்ளி மற்றும் தொழிற்சாலைகள் மற்றும் பாரதிதாசன் நிர்வாகப் பள்ளிக்கும், பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிட்., இடையேயான இணைந்து பணியாற்றும் தன்மையும் ஆகும். பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிட், இந்தப் பல்கலைக்கழகத்தின் சிறப்பான தன்மைக்கு மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருவதும் ஒரு காரணமாகும்.

### பொருளாதாரத்தை முன்னோக்கிய தலையாய பணி

உலகமயமாக்கல் என்ற புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு இந்தியப் பொருளாதாரம் தாராளமய மாக்கப்பட்டுள்ளது. மிகவும் கண்காணிக்கப்படுகின்ற இப்பொருளாதார தத்துவங்கள் தற்போது ஒருபக்கமாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. புதிய எண்ணங்கள், போட்டிகள், கண்டுபிடிப்புகள் மற்றும் மாற்றங்கள் ஆகியவை இன்றைய சூழ்நிலையில் தவிர்க்க முடியாத அம்சங்களாகும். தற்போது உள்ள சூழ்நிலையில் புதியச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் மறுவடிவமைப்பு செய்து முன்னோக்கி எடுத்துச் செல்ல வேண்டிய தலையாயப் பணியில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் நிர்வாக மேலாண் பயிற்சி நிறுவனம் முன்னணியில் இருந்து இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் நிர்வாக மேலாண் பயிற்சி நிறுவனத்தின் முன்னாள் மாணவர்கள் பலர் பல்வேறு புகழ்பெற்ற நிறுவனங்களில் பல்வேறு நிலைகளில் இன்று உயர்பதவியில் இருக்கின்றனர் என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் நிர்வாக மேலாண் பயிற்சி நிறுவனத்தின் திறனை மேம்படுத்துவதற்காக தொழிற்சாலைகளின் தலைவர் களுடன் இப்பல்கலைக் கழகம் இருவழி முறையைப் பயன்படுத்தி வருகின்றது.




தொழிற்சாலை மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு இந்த வர்த்தகப் பள்ளிகளில் ஆலோசனை செய்து அதற்குத் தீர்வு காணப்படுகின்றன என்பது நல்ல செய்தி. புதிய சிந்தனைகள் உள்ளவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். பாரம்பரிய சித்தாந்தங்கள் வளர்ச்சிக்கு உதவாது. தொழில் வளர்ச்சிக்கு தேவையான அல்லது தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக உள்ள பிரச்சனைகளுக்கு முனைப்புடன் தீர்வு கண்டு அதன் மூலம் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு மேலும் சிறப்பாக – ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும் என்பது எப்போதும் என்னுடைய ஆலோசனையாகும்.

**உயரிய தலைவர்களை உருவாக்க வேண்டும்**

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் நிர்வாக மேலாண் பயிற்சி நிறுவனம் இந்த புதிய மாற்றங்களுக்கு மக்களை கட்டாயப்படுத்தாத வகையில் – அதே நேரத்தில் புதிய சூழலில் கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி – விரைவான வளர்ச்சியை அடையத் தேவையான வாய்ப்புகளை உருவாக்கித் தருவதோடு – மனித சமுதாயத்திற்கு உரிய மதிப்பைப் பெற்றுத் தரும் தலைவர்களை உருவாக்கித் தர வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**பாரதிதாசன் பல்கலைக்கழகம் முன்மாதிரியாக திகழ வேண்டும்**

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் நிர்வாக மேலாண் பயிற்சி நிறுவனம் தன்னுடைய பாடத்திட்டத்தோடு கிராமப்புறங்களை தொழில் மையமாக்குதல் என்ற பணியையும் சேர்த்து செய்ய வேண்டும் என்பதை இங்குக் கூற விழைகின்றேன். என்னுடைய தலைமையிலான அரசு – புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை உருவாக்கியுள்ளது. இதன் கீழ் 385 ஒன்றியங்களிலும் குறைந்த பட்சம் ரூ.1 கோடி முதலீட்டில் அந்தந்தப் பகுதியில் உள்ள வேளாண் பொருட்கள் சார்ந்த சிறு தொழிற் சாலைகளை நிறுவ முடிவு செய்துள்ளது. இதனைச் செயல் படுத்துவதற்கு உள்ள மிகப்பெரிய இடையூறு ஒன்றே ஒன்று தான். நல்ல திட்டங்கள் குறித்த திட்ட வரைவுகள் இன்மை மற்றும் வாய்ப்புகளை வர்த்தகமயமாக்குவதற்கு உண்டான வசதிகள் இல்லாதது தான்.



ஆகவே, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் நிர்வாக மேலாண் பயிற்சி நிறுவனம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு ஒன்றியங்களிலும் இந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டம் வெற்றிபெற புதிய திட்டங்களுடன் தேவையான ஆலோசனைகளை வழங்குவதுடன்

பாரதிதாசன் நிர்வாக மேலாண் பயிற்சி நிறுவனம் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வித ஈடுபாடும் செயலும் மற்ற பிற மாவட்டங்களிலும் கிராமப்புறங்களில் தொழில் தொடங்க ஒரு முன்மாதிரியாக அமையும் என்று உறுதியாக நம்புகிறேன்.



**முக்கியத் துறைகளில் ஆராய்ச்சியை விரிவுபடுத்த வேண்டும்**

அதே நேரத்தில் நம்மைப் போன்று பல்வேறு பிரச்சனைகளை உள்ளடக்கிய வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாட்டில் அடிப்படையான ஆராய்ச்சி மற்றும் கல்வியை தவிர்க்க முடியாது. அப்படி தவிர்த்தோமானால் அது பல்வேறு பிரச்சினைகளுக்கான முனைப்பான தீர்வுகளை நம்மால் எட்ட இயலாமல் போய்விடும். எனவே, ஆராய்ச்சியில் தலை சிறந்து விளங்கும் இப்பல்கலைக் கழகம் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு சில முக்கியத் துறைகளில் தனது ஆராய்ச்சியை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக அளவுக்கு அதிகமாக நமக்கு கிடைக்கும் சூரிய ஒளி சக்தி மற்றும் அளப்பரிய செல்வங்கள் அடங்கி உள்ள கடல்களின் ஆதாரங்களை பயன்படுத்துவது, உப்பு தன்மையை அகற்றும் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கடல் நீரை இயன்ற அளவு பயன்படுத்துவது, எரிபொருளுக்கு மாற்று ஏற்பாடுகளை இனம் கண்டறிந்து அதனைப் பிரித்தெடுக்கும் முறைகளை மேம்படுத்துவது, இயற்கை எரிபொருள்களை பயன்படுத்துவது ஆகிய துறைகளில் இன்னும் அதிக அளவில் நாம் ஆராய்ச்சி செய்ய வாய்ப்புகள் உள்ளன.

ஒவ்வொரு பல்கலைக்கழகமும் தனக்கென்று ஆராய்ச்சிக்காக ஒரு சில துறைகளை தேர்ந்தெடுத்து அதனை செயல்படுத்துவதற்குச் 'தேவையான ஆதாரங்களையும் மனித சக்திகளையும் முதலீடு செய்வர். தற்போதைய உலகில் விரைவான வேகமான புதிய கண்டுபிடிப்புகள் கூட வாழ்க்கைக் காலம் குறைந்த அளவே உள்ளது. இந்தச் சூழ்நிலையில் நாம் இன்னும் இருந்த இடத்திலேயே இருக்கின்றோம். ஆனால், பாரதிதாசன் பல்கலைக்கழகம் தனக்கென்று சிறப்பான ஒரு முத்திரையைப் பெற்றுள்ளது. ஆகவே தமிழ்நாட்டில் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் தேவையான முக்கியமான துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு– பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஈடுபட வேண்டும் என பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சித் துறையை கேட்டுக் கொள்கிறேன்.

**புது மறுமலர்ச்சியை உருவாக்க முடியும்**

வளரும் பொருளாதாரத்தின் முன்னுள்ள மிகப்பெரிய சவால் என்னவென்றால் அடிப்படை துறையான வேளாண்மை துறையை அதிகப்படியான மக்கள் நம்பி இருப்பது தான். என்னுடைய பார்வையில் இது ஒன்றும் மிகப்பெரிய அளவில் பொருளாதாரத்தை பொறுத்த மட்டில் இழப்பு அல்ல. மாறாக நம்முடைய உயர்கல்வி நிறுவனங்களில் மற்றும் மையங்களில் பயிற்சி பெறும் நம்முடைய இளங்கலை மற்றும் முதுகலை மாணவ– மாணவிகளின் எண்ணங்களை மாற்றி அமைத்தால் காலனி ஆதிக்கக்கால கல்வி முறையை நாம் பெறும் கல்லூரி பட்டங்கள் கிளார்க் வேலைக்கு தான் போதுமானதாக உள்ளது. அந்த முறையை முற்றிலும் அழித்தொழிக்க வேண்டும்.

நம்முடைய இளங்கலைப் பட்டதாரிகளும் மற்றும் முதுகலைப் பட்டதாரிகளும் கிராமங்களிலேயே தங்கி வேளாண் சார்ந்த தொழில்களை வெற்றிகரமாக செயல்படுத்த வேண்டிய காலம் வெகு தொலைவில் இல்லை. அதனை நீண்ட நாட்களுக்கு தள்ளிப்போடவும் முடியாது. தோட்டக்கலை மற்றும் மலர் ஏற்றுமதி துறைகளில் மதிப்பிட முடியாத நிலையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இந்த வாய்ப்புகளை நாம் முழுமையாக கிராமப்புறங்களில் செயல் படுத்துவோமேயானால் கிராமப்புற படித்த விவசாயிகளின் வாழ்க்கையில் ஒரு புதிய மறுமலர்ச்சியை உருவாக்க முடியும்.




## ஜாதி-மொழியின பாகுபாடுகளை களைய வேண்டும்

உயர்கல்வி கற்பதற்கான செலவினங்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்ற நிலையில், மாநில அரசு கல்விக்காக நிதி ஒதுக்குவதில் குறிப்பிட்ட வரையறை இருப்பதாலும் அந்த நிதியைக் கொண்டே ஆரம்பப் பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி வகுப்புகளுக்குத் தேவையானவற்றை எதிர்கொள்ள முடியாமல், கல்வி தேவைப்படும் பல்வேறு மாணவ மாணவிகளுக்கு இன்னும் கல்வி வழங்க முடியாத மிகப்பெரிய பிரச்சனை நிலவி வருகிறது.

வயது வித்தியாசம், சாதி மற்றும் சமூக வேறுபாடுகள், மொழி வேறுபாடு ஆகியவற்றினால் உருவாகும் இடைவெளியை சமப்படுத்த திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் மூலமாகத் தான் முடியும் என்று நான் உணர்கின்றேன்.

இந்த அடிப்படையில் தான் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகம் சட்டப்படி உருவாக்கப்பட்டது. இதன் மூலம் குறைந்த செலவில் உயர்கல்வி பெறுவதுடன் அதேநேரத்தில் செலவு அதிகமான உயர்கல்விக்கு மாற்று ஏற்பாடாகவும் இது அமையும். இந்த திறந்தவெளி கல்வி முறையானது சமூக, ஜாதி மற்றும் மொழி இனப் பாகுபாடுகளை களைந்து கல்வி இன்னும் கிடைக்கப்பெறாத மாணவ மாணவிகளையும் சென்று அடைவதற்கு உதவும் என்று நான் நம்புகின்றேன்.

உயர்கல்வி மக்கள்தொகையில் ஒரு பெரும் பகுதிக்கு குறிப்பாக பாதிக்கப்பட்ட இனத்தைச் சார்ந்த மக்கள் கிராமப்புறங்களில் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் குடும்ப பெண்கள், உடல் ஊனமுற்றோர் மற்றும் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மக்கள் உள்ள இனத்தைச் சார்ந்தவர்களுக்கும் உயர்கல்வி இதன் மூலம் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

## அனைவருக்கும் கல்வி திட்டத்திற்கு ரூ.1,649 கோடி ஒதுக்கீடு

என்னுடைய தலைமையிலான அரசு அனைவருக்கும் கல்வி என்கிற திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு வகையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. பத்தாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் அடிப்படைக் கல்வியை அனைவருக்கும் வழங்கும் வகையில் பணிகளைச் செயல்படுத்துவதற்காக ரூ.1,649 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 756 புதிய ஆரம்பப் பள்ளிகளும், 676 நடுநிலைப் பள்ளிகளும், 260 உயர்நிலைப்பள்ளிகளும் மற்றும் 300 மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டு உள்ளன.

இந்தப் புதிய பள்ளிகள் மற்றும் இந்தப் பள்ளிகளுக்கு தேவையான ஆசிரியர்கள் நியமனம் மற்றும் கட்டடங்களுக்கு இதுவரை ரூ.225 கோடி செலவிடப்பட்டுள்ளது.

மேலும் நபார்டு வங்கி உதவியுடன் ரூ.99 கோடி செலவில் குடிதண்ணீர் வசதி, கழிப்பறைகள் வசதி, வகுப்பறைகள் மற்றும் சோதனைக்கூடங்கள் அமைக்கப் பட்டுள்ளது. 867 கிராமப்புற நூலகங்கள் உருவாக்கப்பட்டு அவற்றிற்கு புத்தகங்கள் வாங்குவதற்காக ரூ.15 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை உருவாக்கியுள்ளோம். பல்கலைக்கழகத்துக்கு உட்பட்டு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை ஆண்டிபட்டி மற்றும் சாத்தான்குளத்தில் தொடங்கியுள்ளோம்.



இந்த இரண்டு கல்லூரிகளும் மாநிலத்தின் மிகவும் பின்தங்கியப் பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### 1ஆம் வகுப்பு முதல் ஆங்கிலக் கல்வி

மேலும் மாநில அளவில் வேலைவாய்ப்புக்கான இடங்களை இனம் கண்டறியவும் வேலைவாய்ப்புகள் பற்றிய தகவல்களை நம்முடைய பட்டதாரிகள் தெரிந்து கொள்ள வேலைவாய்ப்பு மையம் ஒன்று அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் துவங்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் கல்வித்துறைக்கு என்னுடைய தலைமையிலான அரசு எடுத்து வரும் பல்வேறு புதிய முயற்சிகள் ஒரு சிலவற்றை உங்களுக்கு உதாரணத்திற்குத் தெரிவித்தேன்.

உலகமயமாக்கலைத் தொடர்ந்து நாம் எதிர் நோக்கியுள்ள சவால்களைச் சமாளிக்கும் பொருட்டு ஆங்கிலத்தை 1ஆம் வகுப்பு முதல் அறிமுகப் படுத்தியுள்ளோம். இதன் மூலம் குழந்தைகள், மாறிவரும் உலகச்சந்தைக்கு ஏற்றவாறு அதில் கிடைக்கும் புதிய வாய்ப்புகள் மூலம் பயனடையும் வகையில் இதனைச் செயல்படுத்தியுள்ளோம்.

தமிழகத்திலுள்ள பள்ளிகளிலிருந்து வெளியேறும் மாணவ–மாணவிகள் யாரும் தமிழை கற்றுக்கொள்ளாமல் வெளியே செல்லாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனுடைய ஒரு பகுதியாக 2003–04ம் கல்வி ஆண்டு முதல் அறிவியல் தமிழை அனைத்துப் பள்ளிகளிலும் 1ம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை கற்றுத்தர உத்தரவிட்டுள்ளேன்.

இதன் முக்கியமான நோக்கம் மற்றும் திட்டமென்னவென்றால் அறிவியல் தமிழை நம்முடைய குழந்தைகளுக்குப் பயிற்றுவிப்பதன் மூலம் தற்போது தேவைப்படும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவர்களைத் தயார்படுத்துவதுதான்.

எனவே, நான் கடந்த ஆகஸ்ட் 15ம் தேதி அறிவியல் தமிழை எல்.கே.ஜி. முதல் 12ம் வகுப்பு வரை தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் இந்த கல்வியாண்டு முதல் பயிற்றுவிக்க வேண்டும் என்று அறிவித்துள்ளேன்.

### ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் கல்வி

என்னுடைய வாழ்நாள் முழுவதும் நான் பல்வேறு சூழ்நிலைகளில் இன வேறுபாட்டினை கண்கூடாகப் பார்த்துள்ளேன். எனவே, உண்மையிலேயே பெண்கள் சொந்தக்காலில் நிற்பதற்கு அவர்களுக்கு பொருளாதாரச் சுதந்திரம் தேவைப்படுகிறது. மேலும் பொருளாதாரத்திற்காக ஆண்களை பெண்கள் சார்ந்திருப்பதில் இருந்தும் சுதந்திரம் அடைய வேண்டியது அவசியமாகிறது. இதனைச் செயல்படுத்துவதற்கு ஒரேவழி கல்வி மற்றும் தொழில்முனைவதில் இருபாலருக்கும் சரிநிகர் சமமான வாய்ப்புகள் வழங்குவதன் மூலம் தான் இதனைச் செயல்படுத்த முடியும்.

எனவே, என்னுடைய தலைமையிலான அரசு நடைமுறை உண்மைகள் குறித்து மிகவும் தெளிவாக தெரிந்து வைத்துள்ளது.

மேலும் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் கல்வி வழங்க வேண்டும் என்பதிலும் மிகவும் தீவிரமாக உள்ளேன்.

பெண்களை உயர்கல்வி கற்க அனுப்புவது என்பது சலுகையல்ல. மாறாக அது அவர்களது அடிப்படை

உரிமையாகும். முறையற்ற வருமானம் சாதி பாகுபாடு மற்றும் இனவேறுபாடுகள் இருக்கக்கூடாது. நம்முடைய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் மாணவ–மாணவிகளில், மாணவிகள் பெரும்பாலானோர் ஆராய்ச்சி மற்றும் உயர் பதவிகளுக்குச் செல்வதில்லை. அவ்வாறு செல்பவர்கள் மிகவும் குறைந்த அளவே உள்ளனர். இந்த வேறுபாட்டை சமன்செய்ய வேண்டும். அதற்கு நம்முடைய எண்ணத்தில்– அடிப்படையில்– மாற்றம் வேண்டும்.

நமது மாநிலத்தில் வரலாற்றில் முதன்முறையாக பள்ளிகளில் சேர்க்கும் குழந்தைகளுக்கு தாயின் பெயரை இனிஷியலாக போடுவதற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். இதன் மூலம் தாய்மார்களுக்கும், பெண் இனத்திற்கும் மிகப்பெரிய மதிப்பு உருவாகியுள்ளது. மேலும் குடிமகள் என்ற வார்த்தையை தமிழ் மொழியில் இணைக்கவும் உத்தரவிட்டுள்ளேன். இந்த வார்த்தை ஆண்களை குறிக்கும் குடிமகன் என்ற சொல்லுக்கு இணையாக பெண்களை குடிமகள் என்று அழைப்பதற்கு வசதியாக இருக்கும்.

## இன பாகுபாடுகளை வேரறுக்க

குடிமகள் என்ற வார்த்தை ஆங்கிலத்தில் சிட்டிசன் என்று அழைக்கப்படுகின்றது. இதன் மூலம் அரசியல் மற்றும் சமூகத்தில் பெண்களுக்கு என்று தமிழ்மொழியில் முதன்முறையாக ஓர் இடம் அளிக்கப்பட்டுள்ளது. இது இனப் பாகுபாடுகளை வேரறுப்பதோடு பெண்கள் தன்னிறைவு அடையவும் ஒரு முயற்சியாகும். பெண்களுக்கு உயர்கல்வி வழங்க வேண்டும் என்பதற்காக என்னுடைய தலைமையிலான அரசு 111 ஏக்கர் நிலப்பரப்பில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தை உருவாக்க உத்தரவிட்டுள்ளது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மகளிர் கல்லூரியில் சோதனைக் கூட வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பெண்களுக்கென்றே தனியாக உயிரிதொழில்நுட்பப் பூங்கா

பெண்களுடைய வளர்ச்சிக்கு உதவும் வகையில் பல்வேறு திட்டங்களை மாற்றியமைத்துள்ளேன். கல்வி மற்றும் தொழில்முனையும் திறன் ஆகியவை பெண்களை புதிய தொழில் பகுதிகளான உயிரி தொழில்நுட்பம் மரபணுவியல் போன்ற துறைகளில் தைரியமாக அடியெடுத்து வைக்க உதவுகின்றது.

ஆகவே கேளம்பாக்கத்தில் பெண்களுக்கு என்றே தனியாக உயிரி தொழில்நுட்பப் பூங்கா ஒன்றையும், நிலக்கோட்டையில் மருத்துவச் செடிகள் பூங்கா ஒன்றையும் முழுவதும் பெண்களின் பங்களிப்புடன் உருவாக்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தப் பல்கலைக்கழகம் பெண்களுடைய வளர்ச்சிக்கு உதவும் வகையில் முற்றிலும் புதிய பாடத்திட்டங்களையும் தொழில் துவங்குவது தொடர்பான பயிற்சி வகுப்புகளையும் உருவாக்கி தரும் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

பாவேந்தர் பாரதிதாசனின் பெயரைக் கொண்டு விளங்கும் இப்பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பாவேந்தர் சொல்லும் நீதியை, அவர் எழுதிய ‘குடும்ப விளக்கு’ காப்பியத்திலிருந்து சில வரிகளை இங்குக் கூற விழைகின்றேன்.

“பெண்கட்குக் கல்வி வேண்டும்,
குடித்தனம் பேணுதற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்,
மக்களைப் பேணுதற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்,
உலகினைப் பேணுதற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்,
கல்வியைப் பேணுதற்கே!”

பல்கலைக்கழகத்தின் வேந்தர், துணைவேந்தர் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் இந்தப் பட்டமளிப்பு விழா உரையாற்ற வாய்ப்புத் தந்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இளம் பட்டதாரிகள் முதுநிலை பட்டதாரிகள் ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் தங்களுடைய பட்டங்களை பெற்றவர்கள் மேலும் தங்களுடைய வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு மட்டுமல்லாது இந்த ஒட்டு மொத்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இப்பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெறும் அத்தனை மாணவ–மாணவிகளையும் நான் வாழ்த்துகிறேன்.

## பெண்களாலும் சாதிக்க முடியும்

எனக்கு இன்று வழங்கப்பட்டுள்ள இந்த கௌரவத்தை எனக்கு மட்டும் வழங்கப்பட்ட கௌரவமாக நான் எடுத்துக்கொள்ளவில்லை. ஆண்களுக்கு நிகராக பெண்களாலும் சாதிக்க முடியும் என்ற எண்ணத்தில் கடுமையாக முயற்சி செய்து பணியாற்றி கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பெண்களுக்கு இது ஒரு உந்துதலாக இருக்கும் என்ற வகையில் நான் இதனைப் பார்க்கின்றேன்.

இந்த கௌரவ டாக்டர் பட்டம் தமிழ்நாட்டிலுள்ள ஏழைகளுக்கும், சமூகத்தின் அடித்தட்டில் உள்ள மக்களுக்கும், பாதிப்புக்குள்ளான நிலையில் உள்ள மக்களுக்கும் மற்றும் அனைத்து தரப் பினருக்கும் என்னுடைய இறுதி மூச்சு இருக்கும் வரை பணியாற்ற எனக்கு புதிய சக்தியை வழங்கியுள்ளது.

நன்றி !

*– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 20ஆவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று “பெருமைதரு முதுமுனைவர்” பட்டத்தைப் பெற்று 2–9–2003 அன்று ஆற்றிய உரை.*

* * *

# சுற்றி நிற்கும் பகைகளைத் தூள் தூளாக்கி வெற்றிப் பயணத்தைத் தொடருவோம்!

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



என் அன்புக்குரிய சேலம் மாவட்ட மக்களாகிய உங்களைக் காண ஆர்வத்துடன் வந்திருக்கிறேன். ஓராண்டுக்கு முன் உங்களைச் சேலம் நகரத்தில் நடைபெற்ற மாவட்ட விழாவில் சந்தித்தேன். 13 மாதங்களுக்குப் பிறகு, இன்று ஆத்தூரில் சந்திக்கிறேன். ஓராண்டு மட்டுமே முடிவடைந்த நிலையில் இரண்டாம் முறையாக மாவட்ட விழாவிற்கு நான் சேலம் வந்திருக்கிறேன் என்றால் உங்களைச் சந்திப்பதில் நான் மிகவும் ஆர்வமாக இருக்கிறேன் என்று தானே அர்த்தம்!

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் நான் உங்களைக் காண வந்த போது 231 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களையும் உதவிகளையும் கைகளில் ஏந்தி வந்தேன்.

இதோ இன்று, அதை விட அதிகமாக 386 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களையும் உதவிகளையும் கைகளில் ஏந்தி உங்களைக் காண வந்திருக்கிறேன்.

கடந்த முறை வந்த போது மாவட்ட விழாவில் நான் சொன்ன வார்த்தைகள் உங்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன். அன்று சொன்ன வாசகத்தை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"உள்ள தொகுதிகள் அனைத்தும் உங்களுக்காகவே" என்று உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கே நீங்கள் அளித்தீர்கள். என் மீது நீங்கள் வைத்த நம்பிக்கை தானே அதற்குக் காரணம்!

"என்னிடம் உங்கள் அன்பு நூறு சதவீதம்! என்னிடம் உங்கள் பாசம் நூறு சதவீதம்! என்னிடம் உங்கள் நம்பிக்கை நூறு சதவீதம்! அதனால் நான் உங்களுக்குத் தெரிவிக்க வந்த நன்றியும் நூறு சதவீதம்" என்று அன்று நான் சொன்னேன்!

இதோ இன்றும் நூறு சதவீதம் நன்றியை நான் தெரிவிக்க வந்திருக்கிறேன்.

நூறும் நூறும், இருநூறு ஆயிற்று! ஆகவே 100 சதவீதம் என்னிடம் நம்பிக்கை வைத்தால் நான் 200 சதவீதம் நன்றியைக் காட்டுவேன் என்பதை

உங்களுக்கு மட்டுமல்ல உங்கள் மூலமாக அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகாபாரதத்தில் ஒரு நிகழ்ச்சி. ஒரு முறை தர்மர், 'கிருஷ்ணா நான் செய்த பாவங்கள் முழுவதையும் உனக்கே தத்தம் செய்கிறேன்' என்று சொன்னாராம். உடனே பக்கத்தில் இருந்த பீமன், 'அண்ணா, அப்படிச் செய்யாதே, கிருஷ்ணனிடம் எது கொடுத்தாலும், அது பல மடங்காகத் திரும்பி வரும். எச்சரிக்கை!' என்று சொன்னானாம்.

அது போலத் தான் என்னிடமும்! யாராவது அன்பு காட்டினால் அந்த அன்பு பல மடங்காகத் திரும்பி வரும். தீங்கு செய்தால்.........? தீங்கு செய்தால் திருப்பி கொடுக்க முடியும் என்றாலும், அதைப் பற்றி நினைப்பதற்கே எனக்கு நேரம் இல்லை. தமிழகத்தை எந்த வகையில் எல்லாம் மேம்படுத்தலாம் என்பது எனது முழு நேரச் சிந்தனையாக இருப்பதால், இல்லாத மக்களுக்கு என்ன செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற எனக்கு – சில பொல்லாத மனிதர்கள் செய்த தீமைகளைப் பற்றி நினைப்பதற்கு நேரமே இல்லை!

சேலம் மாவட்டம் இந்தியாவிலேயே பழமை வாய்ந்த மாவட்டம் என்று வரலாறு கூறுகிறது. Kindersley என்ற ஆங்கிலேயர் 30.11.1790 அன்று சேலம் மாவட்டத்தின் முதல் மாவட்ட ஆட்சியராகப் பொறுப்பேற்றார் என்பதை அறிகின்ற போது 213 ஆண்டுகள் பழமையான மாவட்டம் சேலம் மாவட்டம் என்பது புலனாகிறது. அதனை நினைத்து நாம் பெருமைப்படுகிறோம்.

சேர்வராயன் மலையில் அமைந்துள்ள ஏற்காடு சுற்றுலாத் தலமாக அனைவரையும் கவர்ந்திழுக்க பழமை வாய்ந்த ஆலயங்களால் பக்தி மணம் கமழ்ந்து கொண்டிருக்கிறது சேலம் மாவட்டம். சேலம் ராஜகணபதி ஆலயம், சுகவனேஸ்வரர் கோயில், கோட்டை மாரியம்மன் திருக்கோயில், அழகிரிநாத சுவாமி திருக்கோயில், உத்தம சோழபுரம் கரபுரநாதர் சுவாமி திருக்கோயில், ஜாகீர் அம்மா பாளையம் வெண்ணங் கொடி முனியப்பன் திருக்கோயில், ஏற்காடு சேர்வராயப் பெருமாள் சுவாமி திருக்கோயில், குமரகிரி தண்டபாணி சுவாமி திருக்கோயில், மேச்சேரி பத்ரகாளியம்மன் திருக்கோயில், உலகப் புகழ் பெற்ற சிற்பங்களைக் கொண்ட தாரமங்கலம் கைலாசநாத சுவாமி திருக்கோயில், சின்ன திருப்பதி என்று அழைக்கப்படும் காருவள்ளி பிரசன்ன வெங்கடரமண சுவாமி திருக்கோயில், பேளூர் தான்தோன்றீசுவரர் திருக்கோயில், வடசென்னிமலை பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், ஒருக்காமலை வரதராஜப் பெருமாள் திருக்கோயில், இளம்பிள்ளை மாரியம்மன் திருக்கோயில் என்று ஏராளமான திருக்கோயில்களைக் கொண்ட அருள்மிகு மாவட்டம் சேலம் மாவட்டம்!

இது கனிகள் நிறைந்த பூமி! கனிமங்கள் நிறைந்த பூமி!

வரலாற்றுச் சிறப்பு மிக்க மேட்டூர் அணையைத் தாங்கியிருக்கும் மண், சேலம் மண். தஞ்சைப் பாசனத்துக்காகத் தங்கள் மாவட்டத்தில் அணை அமைத்த பெருமக்கள் நீங்கள்.

இந்த விழா நடைபெறும் ஆத்தூர் தனக்கென்று ஒரு வரலாறு படைத்த ஊர். 1,100 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த ஆத்தூர் மீலாட்டு ஆத்தூர், மலையமான் ஆத்தூர், ஆத்தூர் அனந்தகிரி என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்ட சிறப்பை உடையது. ஆத்தூர் பச்சை மலையும், வசிஷ்டா நதியும், ஆத்தூருக்கு அழகு சேர்க்கின்றன. ஆத்தூரில் கோயில் கொண்டுள்ள காய நிர்மல ஈஸ்வரர் கருணையினால் சேலம் மாவட்ட மக்கள் எல்லாத் துறையிலும் சிறப்படைய, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் வாழ்த்துகிறேன்.

வாழ்த்துகளோடு நின்று விடாமல் 248 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, 122 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 15 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை இன்று வழங்குகின்றேன்.

**முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தல்**

சீர்மிகு இவ்விழாவில் இன்றைய தினம் சேலம் மாவட்ட மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் மொத்தம் 248 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 10,905 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் 53 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு கட்டடங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை நான் இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன்.

தொகுப்பு வீடுகள், பக்கா வீடுகள், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம், சுயஉதவிக் குழுக்கள் கட்டடம், ஒருங்கிணைந்த மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார வளாகம், பொது விநியோகக் கடை, உயர்நிலைப் பள்ளிக் கட்டடம், தொடக்கப் பள்ளிக் கட்டடம், பள்ளிக்

கழிப்பிடம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கக் கட்டடம், சமையலறைக் கட்டடம், பேருந்து நிழற் கூடம், சமுதாயக் கூடம், சத்துணவு மையக் கட்டடம், பள்ளி சுகாதார வளாகம், தொலைக்காட்சி அறைக் கட்டடம் உட்பட, 2,824 கட்டடங்கள், 12 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு, இன்று அந்தக் கட்டடங்கள் அனைத்தையும் திறந்து வைத்ததில் அக மிக மகிழ்கின்றேன். மேலும், கதிரடிக்கும் களம், குளம், குட்டை, குட்டை தூர்வாருதல், கான்கிரீட் சாலை, மண் சாலை, கப்பிச் சாலைகள், கல் சாலைகள், தார்ச் சாலைகள், மயானப் பாதை, வடிகால், குடிநீர் குழாய் விஸ்தரிப்புப் பணி, ஆழ்துளைக் கிணறுகள், மேல்நிலை தொட்டிகள், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், புதிய கிணறுகள், கைப்பம்பு, கிராமச் சந்தைகள், தடுப்புச் சுவர், சுற்றுச் சுவர், பாலங்கள், தடுப்பணை, சிறு பாலங்கள், பண்ணைக் குட்டை அமைத்தல் ஆகிய 44,188 பணிகள் 40 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பில் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டின் முதுகெலும்பாக உள்ள கிராமங்களின் வளர்ச்சி எந்த அளவுக்கு முக்கியமானவை என்பதை உணர்ந்து உள்ளது எங்களது அரசு என்பதை இதன் மூலம் நீங்கள் அறிவீர்கள்.

மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு எனது அரசு எப்போதும் முன்னுரிமை தந்து வருகிறது. நிலத்தடி நீரில் அளவுக்கு அதிகமாக புளோரைடு கலந்திருக்கும் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக கடந்த ஆண்டு இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு நான் அடிக்கல் நாட்டினேன். அத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இன்று இந்த விழாவில் என்னால் திறந்து வைக்கப்பட்டு உள்ளன.

இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 237 புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 55 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் முடிக்கப்பட்டு இன்று தொடங்கப்பட்டுள்ளது. இன்று தொடங்கப் பட்டுள்ள இந்தத் திட்டத்தின் மூலம், 2 இலட்சத்து 24 ஆயிரம் மக்கள் பயன் அடைய உள்ளார்கள்.

காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் புளோரைடால் பாதிக்கப்பட்ட 118 குடியிருப்பு களுக்கு காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 50 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பில் திட்டம் முடிக்கப்பட்டு இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் 1 இலட்சத்து 38 ஆயிரம் பேர் பயன் அடைய உள்ளார்கள்.



புளோரைடால் பாதிக்கப்படாத வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்காக இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 602 ஊரக குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க 37 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வகுக்கப்பட்ட திட்டம் முடிக்கப்பட்டு அதனை இன்று தொடங்கி வைத்துள்ளேன். இந்தத் திட்டத்தின் மூலம் 5 இலட்சத்து 69 ஆயிரம் மக்கள் பயன் அடைவார்கள்.

அதே போன்று, காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 281 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க, 23 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட திட்டம் முடிக்கப்பட்டு அதனை இன்று நான் தொடங்கி வைத்துள்ளேன். இந்தத் திட்டத்தின் மூலம் 3 இலட்சத்து 29 ஆயிரம் மக்கள் பயன் அடைவார்கள்.

இவை தவிர, 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பில் தனி மின் இறைப்பான் திட்டங்கள், சிறு மின் விசைத் திட்டங்கள், மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் முதலிய 685 திட்டங்களையும் இன்று நான் தொடங்கி வைத்துள்ளேன் என்பதையும் இவை மூலமாக ஒரு இலட்சத்து 36 ஆயிரம் மக்கள் பயன் அடைவார்கள் என்பதையும் மிகவும் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையின் கீழ், நான்கு சாலைப் பணிகள், 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில் 1 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள காவலர் குடியிருப்புகள் மற்றும் காவல் நிலையக் கட்டடங்களையும், பொதுப் பணித் துறையின் மூலம் 2 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 6 கட்டடங்களையும், தாட்கோ மூலம் 96 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று மாணவர் விடுதிகளையும், சேலம் மாநகராட்சியில் 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 சுகாதார வளாகங்களையும், ஆத்தூர் நகராட்சியில் 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 சுகாதார வளாகங்களையும், எடப்பாடி நகராட்சியில் 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 சுகாதார வளாகங்களையும், பிற்பட்டோர் நலத் துறை சார்பில் 22 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சாலை, தெரு விளக்கு மற்றும் வடிகால் ஆகியவற்றையும் இன்று திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

சேலம் கருப்பூரில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு, 1 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பில், 5 புதிய குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வனத்துறை திட்டத்தின் கீழ், 6 பணிகள் 22 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும் கல்வித் துறையின் சார்பில், அனைவருக்கும் கல்வி இயக்கம் என்னும் திட்டத்தின் கீழ், 1,450 பணிகள் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் மூலம் தாரமங்கலத்தில் 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய பேருந்து பணிமனை கட்டி முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. பேரூராட்சித் துறை சார்பாக 28 பேரூராட்சிகளில் 1 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மகளிருக்கான 39 சுகாதார வளாகங்களை இன்று திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேலம் மண்டல புதிய அலுவலகம் 21 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக பனமரத்துப்பட்டி, நங்கவள்ளி மற்றும் எடங்கணசாலை ஆகிய பேரூராட்சிகளில் 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 60 குடியிருப்புகள் இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சேலம் மாநகரம், மகாத்மா காந்தி விளையாட்டு அரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கைப்பந்து ஆடு தளம் மற்றும் கூடைப் பந்து ஆடு தளம் ஆகியவற்றையும் இன்று நான் திறந்து வைத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள இந்தத் திட்டங்களால் சேலம் மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு புதுப் பொலிவு கிடைக்கும் என்று நம்புகிறேன்.

சேலம் மாவட்டத்தின் சிறப்புகள் ஒன்றல்ல, இரண்டல்ல. மிகப் பழங்காலத்திலேயே, இரும்புத் தொழில் இங்கே சிறப்பாக நடைபெற்றிருக்கிறது.

கிரேக்க மன்னன் அலெக்ஸாண்டருக்கு, போரஸ் என்று அழைக்கப்பட்ட மன்னன் புருஷோத்தமன், ஒரு வாளைப் பரிசாகத் தந்தான். அந்த வாள், சேலத்து இரும்பில் செய்யப்பட்டது என்கிறது வரலாறு.

இப்படிப்பட்ட பெருமை படைத்த மாவட்டத்தில், பெண் சிசுக் கொலை என்னும் பெருங்கொடுமை நிலவி வந்தது. 1992–ல், நான் கொண்டு வந்த தொட்டில் குழந்தைத் திட்டத்தால் இந்தச் சமூகக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதனை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்கள் பலவீனமானவர்களா ? இல்லை! எந்தக் காலத்திலும் இல்லை!

ஆற்றலுக்கு "சக்தி" என்று பெயர். சக்தி பெண் தானே ? பெண்கள், சாதனை படைக்கப் பிறந்தவர்கள் அல்லவா!

சேலம் மாவட்டப் பெருமக்களே! நீங்கள் இளம் பிள்ளையில் திருக்கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு மாரியம்மனைப் பற்றி என்ன சொல்கிறீர்கள் ?

'தொட்டியத்து மாரி. பச்சைத் தண்ணீரில் விளக்கெரித்த பராசக்தி' என்று தானே மாரியம்மனின் மகிமையைப் பற்றிப் பேசுகிறீர்கள் ?

பெண்களின் ஆற்றலைத் தானே இந்தப் பழமொழி விளக்குகிறது? அப்படி இருக்கும் போது, பொருளாதாரத்துக்காக ஆண்களையே சார்ந்திருக்க வேண்டிய அவசியம் என்ன ?

**மகளிர் சுயஉதவிக் குழுக்கள்**

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால் அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று, தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும். அத்தகைய இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத் தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களை முதன் முதலாக 1992 ஆம் ஆண்டில் நான் தொடங்கிய போது, ஆரம்பத்தில் அந்தக் குழுக்களில் உள்ள மகளிருக்கு கடன் வழங்க வங்கிகள் பெரிதும் தயக்கம் காட்டின. ஆனால், இன்றைய தினம் இந்தச் சூழ்நிலை தலைகீழாக மாறியுள்ளது. தமிழகம் எங்கும் உள்ள இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களிடம் பல கோடி ரூபாய் சேமிப்பு நிதியாக இருப்பதை பார்த்து இன்றைக்கு வங்கிகளே தங்களிடம் அந்த சேமிப்பு நிதியை வைப்பு நிதியாகச் செலுத்திவைக்குமாறு கோருவதற்காக இந்த மகளிரைத் தேடிச் செல்லும் நிலைமை உருவாகி உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இயக்கத்தில், தற்போது 1 இலட்சத்து 36 ஆயிரத்து 832 குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்களில் மொத்தம் 23 இலட்சத்து 27 ஆயிரத்து 751 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுக்களின் மொத்த சேமிப்பு படிப்படியாக வளர்ந்து தற்போது 332 கோடி ரூபாய் என்கிற பெரிய அளவுக்கு உயர்ந்துள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள 385 ஊராட்சிகளிலும், 34 பேரூராட்சிகளிலும், மூன்று நகராட்சிகளிலும் மற்றும் சேலம் மாநகராட்சியிலும், மொத்தம் 5,292 சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. இந்த 5,292 சுய உதவிக் குழுக்களில் 89,453 பெண்கள் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவர்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பெண்கள் 26,940 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்களின் மொத்த சேமிப்பு 13 கோடியே 57 இலட்சம் ரூபாய் ஆகும். இவர்கள் 46 கோடியே 68 இலட்சம் ரூபாய் அளவுக்கு கடன் பெற்றுள்ளனர். இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இயக்கம் மென்மேலும் வளர வேண்டும் என்பது தான் எனது பேரவா. இன்னும் சொல்லப் போனால், தமிழ்நாட்டில் இதுவரையில் இந்த இயக்கத்தில் சேராத அனைத்துப் பெண்களும் இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினராகச் சேர முன் வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மழை நீர் சேகரிப்பில் இந்தியாவில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக, வழி காட்டியாக தமிழ்நாடு விளங்குகிறது. மழை நீர் சேகரிப்பு இன்று மாபெரும் மக்கள் இயக்கமாக ஆகியுள்ளது. பெரியோர்கள், தாய்மார்கள், மாணவர்கள் ஆகிய



எல்லோரிடமும் மழை நீர் சேகரிக்க வேண்டும் என்ற மாபெரும் விழிப்புணர்வு இப்போது ஏற்பட்டுள்ளது. கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஆகஸ்டு 31–க்குள் ஏற்படுத்த வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் பெருமளவில் அமைக்கப்பட்டு வருவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சேலம் மாவட்டத்தில் இந்த மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை அமைக்கும் பணி 98 சதவிகிதம் நிறைவேறி உள்ளது என்ற நல்ல செய்தியை எனக்கு இப்போது தெரிவித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், சேலம் மாவட்ட மக்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைக்கப்படாத கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உள்ளாட்சி அமைப்புகளே நிறுவும். அதாவது, ஏற்கெனவே அரசு ஒரு அறிவிப்பினை வெளியிட்டது. எல்லா கட்டடங்களிலும் இம்மாத இறுதிக்குள், அதாவது ஆகஸ்டு 31 ஆம் தேதிக்குள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை அமைத்தாக வேண்டும் என்று அரசு ஏற்கெனவே அறிவித்தது. இந்தத் திட்டத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பல பேர் இந்தக் காலக்கெடுவை நீட்டித்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். காலக் கெடுவை நீட்டித்து தர வேண்டிய அவசியம் இல்லை. இதனை நான் உங்களுக்கு விளக்கிக் கூற விரும்புகிறேன். நீங்களாக உங்கள் இல்லங்களில் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைப்பதானால் அதற்கு கடைசி தேதி ஆகஸ்டு 31. ஆகஸ்டு 31–க்குள் உங்களால் அதைச் செய்ய முடியவில்லை என்றால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளே செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் அதை உங்களுக்கு அமைத்துக் கொடுக்கும். உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகளே உங்கள் இல்லங்களை கட்டடங்களைத் தேடி வருவார்கள். இந்த மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை அமைக்க அவர்கள் வருகின்றபோது அவர்களுக்கு நீங்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும். அமைத்த பிறகு அந்தக் கட்டணத்தை உங்களிடம் வசூல் செய்வார்கள். அதற்கும் நீங்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது மழை நீர் சேகரிப்பு முயற்சியை கட்டடங்களுக்கு மட்டும் அல்லாமல் திறந்த வெளிகள், வனப் பகுதிகள், பண்ணைக் குட்டைகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஊரணிகள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், ஊரகச் சாலைகள், புற வழிச் சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், சாலை ஓரங்கள் மற்றும் கோயில் குளங்கள் ஆகியவற்றிற்கு நான் விரிவுபடுத்தியுள்ளேன். இந்தப் பணி 30.9.2003–க்குள், அதாவது செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும். இந்த முயற்சியால் நீர் வளமே இல்லாத, பொட்டல் வெளியாக உள்ள பகுதிகள் கூட வளம் கொழிக்கும் நிலங்களாக மாறி விடும். இதற்கு உதாரணமாக, இராமநாதபுரம்

மாவட்டம் விளங்குகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் எப்பொழுதும் குறைந்த அளவே மழை பெய்யும். இதனால் போதுமான பாசன வசதி அங்கு கிடையாது. விவசாயம் செய்ய வழியின்றி இராமநாதபுரம் மாவட்ட மக்கள் பஞ்சம் பிழைப்பதற்காக வேறு ஊர்களுக்குச் செல்வது இதுவரை வழக்கமாய் இருந்து வந்தது. தற்போது அந்த நிலைமை மாறியுள்ளது. இராமநாதபுரம் மாவட்ட மக்கள் அந்த நிலைமையை மாற்றியிருக்கிறார்கள். கடந்த இரண்டாண்டுகளாக இராமநாதபுரம் மாவட்டத்தில், ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றைத் தூர்வாரி, மேம்படுத்தி, மழை நீரை சேகரித்த காரணத்தால், வரலாற்றில் இதுவரை இல்லாத அளவில் அங்கு விவசாயப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதனால் இராமநாதபுரம் மாவட்ட மக்கள் பஞ்சம் பிழைக்க வேறு மாவட்டங்களுக்கு தற்போது செல்வது இல்லை. செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. இதனை தமிழ்நாட்டிலுள்ள பிற மாவட்டங்களும் பின்பற்றினால் தமிழ்நாடே வளம் கொழிக்கும் மாநிலமாக மாறும் என்பதில் ஐயம் இல்லை. எனவே திறந்த வெளிகள், வனப் பகுதிகள், பண்ணைக் குட்டைகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஊரணிகள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், ஊரகச் சாலைகள், புறவழிச் சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், சாலை ஓரங்கள் மற்றும் கோயில் குளங்கள் ஆகியவற்றில் ஒவ்வொரு துளி மழை நீரையும் சேகரித்து, தேக்கி வைத்து, நிலத்தடி நீரை மேம்படுத்தி, பயனடையுமாறு விவசாயப் பெருமக்களை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த முயற்சி ஒரு மக்கள் இயக்கமாக ஆக்கப்பட வேண்டும். அப்போது தான் தண்ணீர்ப் பற்றாக்குறை என்ற பேச்சுக்கே தமிழ்நாட்டில் இடமிருக்காது. இந்தப் பணிகள் அனைத்தையும் செப்டம்பர் 30–க்குள் செய்து முடித்தால் தான், வர இருக்கும் வடகிழக்குப் பருவமழை மூலம் கிடைக்கும் தண்ணீரை நாம் தேக்கி வைத்து முழுப் பயன் அடைய முடியும்.

மழைநீர் சேகரிப்பு என்பது நாம் அனைவரும் அவசியமாகச் செய்ய வேண்டிய பணி. தமிழ்நாட்டில் உள்ள அனைவரும் இந்தப் பணியில் முழு ஈடுபாட்டுடன் பங்கெடுத்துக் கொண்டு, இதனை ஒரு வெற்றிகரமான மக்கள் இயக்கமாக ஆக்க வேண்டும் என்று அன்புடன் உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தின் நலன் கருதி நான் பல்வேறு திட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் கொண்டு வருகிறேன். அவற்றின் சிறப்பை எண்ணிப் பாராமல் குறை கூறுவதையே தொழிலாகக் கொண்ட குறுமதியாளர்கள் தமிழகத்தில் உண்டு.

நீதிபதி முன்னால் ஒருவரைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். இந்த ஆள் என்ன குற்றம் செய்தான் என்று நீதிபதி காவலரைப் பார்த்துக் கேட்டார். "ஐயா, இவன் அடுத்தவர் தோட்டத்தில் "திருட்டுத்தனமாக முள்ளங்கி பறித்துக் கொண்டு இருந்தான்,'' என்று காவலர்கள் பதில் சொன்னார்கள். நீதிபதி அந்தத் திருடனைப் பார்த்துக் கேட்டார், 'நீ முள்ளங்கி திருடியது உண்மை தானா?' இவ்வாறு நீதிபதி கேட்டதும் 'எஜமான், நான் முள்ளங்கி திருடவில்லை' என்றான்! 'அப்படியானால் அங்கே நீ போனதற்கு என்ன காரணம்?' என்று நீதிபதி கேட்டார். 'நானாகப் போகவில்லை எஜமான், காற்று வேகமாக தள்ளியதால் நான் அங்கே போய் விழுந்து விட்டேன்' என்று திருடன் பதில் சொன்னான். 'அப்படியானால் உன் கையில் முள்ளங்கி எப்படி வந்தது?' என்று நீதிபதி கேட்டார். 'அதுவா, வேகமாக வீசுகின்ற காற்று என்னைத் தூக்கிக் கொண்டு போய்விடக் கூடாது என்று தான் முள்ளங்கியை நான் இறுகப் பிடித்துக் கொண்டேன்', என்று திருடன் பதில் சொன்னான். "அப்படியானால் கோணிப்பை உன்னிடம் எப்படி வந்தது?'' என்று நீதிபதி கேட்டார். அதற்கு அந்தத் திருடன் பதில் சொன்னானாம், "அது தான் எஜமான், எனக்கே தெரியவில்லை, எனக்கே புரியவில்லை'' என்று சொன்னானாம். எப்படிப்பட்ட சாமர்த்தியமான திருடன்!

இந்தத் திருடனைப் போல், வெறும் வாய்ஜாலத்தாலேயே எதையும் மறைத்து விடலாம் என்று நினைக்கின்ற அரசியல் பேர்வழிகளும் தமிழ்நாட்டில் இருக்கத் தான் செய்கிறார்கள். எதையாவது சொல்லி மக்களை ஏமாற்றிவிடலாம் என்பது தான் அந்த ஆசாமிகளின் எண்ணம். ஆனால் நமது மக்கள் புத்திசாலிகள்; ஏமாறமாட்டார்கள்! எத்து வேலைக் காரர்கள் தங்கள் சித்து வேலைகளால் தமிழக மக்களை ஒருபோதும் ஏமாற்ற முடியாது.

**அடிக்கல் நாட்டுதல்**

சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அரசின் பல்வேறு திட்டங்களின் பயன்களை மக்கள் அதிக அளவில் பெற வேண்டும் என்பதற்காக இன்றைய தினம் இந்த இனிய விழாவிலே 122 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 4,275 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மனநிறைவோடு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக, இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் 1,324 புதிய வீடுகள் 4 கோடியே 23 இலட்சம் ரூபாய்




மதிப்பிலும் – இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 663 கச்சா வீடுகளை பக்கா வீடுகளாக மாற்றும் பணி 66 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – பாரதப் பிரதமரின் வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 226 வீடுகள் 72 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 139 பணிகள் 4 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 102 பணிகள் 2 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – முழு ஊரக சுகாதாரத் திட்டத்தில் பல்வேறு பணிகள் 14 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – சம்பூர்ண கிராம வேலைவாய்ப்பு சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் மொத்தம் 1493 பல்வேறு பணிகள் 16 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 40 பணிகள் 5 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 48 பணிகள் 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 10 பணிகள் 29 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – ஆக மொத்தம், 48 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பில், 4,045 பணிகளுக்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக, தனி மின்னிறைப்பான் குடிநீர்த் திட்டம் – பெத்தநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தளவாய்ப்பட்டி ஊராட்சிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் – சிறு மின்விசைக் குடிநீர் திட்டங்கள் – சுவஜல்தாரா திட்டங்கள் – ஓடையின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல் – ஊரகப் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளுக்குக் குடிநீர் வழங்குதல் ஆகிய திட்டங்கள் மூலம் 932 குடியிருப்புகளில் உள்ள 1 இலட்சத்து 86 ஆயிரம் மக்கள் பயனடையும் வகையில் 14 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக அடிக்கற்கள் நாட்டப் பட்டுள்ளன.

பொதுப்பணித் துறையின் கட்டடப் பிரிவின் சார்பில், 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்டத்தில் மொத்தம் 8 பல்வேறு துறைகளுக்கான கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் சார்பில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் 5 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கும் அடிக்கல் நாட்டியுள்ளேன். தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில், 10–வது ஐந்தாண்டு திட்டத்தில், புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டத்தில், மேச்சேரியில், 4 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கவும்; துரிதப்படுத்தப்பட்ட மின் வளர்ச்சிக்கான மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 35 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கும் அடிக்கல் நாட்டியுள்ளேன். தட்டு தடங்கல் அற்ற சீரான மின் அளிப்பு இந்தப் பணிகள் மூலம் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலனில் மிகுந்த அக்கறை செலுத்தும் இவ்வரசு, அவர்களின் குழந்தைகளின் கல்விக்காக பல்வேறு சலுகைகளையும், வசதிகளையும்

ஏற்படுத்தி வருகின்றது. இந்த வகையில், தாட்கோ மூலம் 7 மாணவர் விடுதிகளுக்கு 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன்.

எனது தலைமையில் அமைந்த அரசு கல்வித் துறைக்காக பல்வேறு பணிகளைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளது. இத்துறையின் மூலம் நடத்தப்படும் அனைவருக்கும் கல்வி திட்டத்தில், 2 கோடி ரூபாய் மதிப்பில் 138 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சிறப்பு மிக்க விழாவில், நெடுஞ்சாலைத் துறை மூலம் மாநில மற்றும் மாவட்ட சாலைகள் அமைக்க 8 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பில் 62 பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மிக்க மனநிறைவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு வனத் துறை சார்பில், சேலம் மற்றும் ஆத்தூர் வனக் கோட்டத்திலுள்ள 60 கிராமங்களில் 856 ஹெக்டர் பரப்பில் 3 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பில் வனத் தோட்டம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாகும்.

ஆக மொத்தம், 122 கோடியே 27 இலட்சம் ரூபாய் அளவிற்கு இன்றைய தினம் மொத்தம் 4,275 பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. அனைத்துப் பணிகளையும் விரைந்து முடிக்க, அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதையும், அவை முடிவடைந்த பிறகு நானே மீண்டும் இங்கே வந்திருந்து முடிந்த பணிகளைத் திறந்து வைப்பேன் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மானம் காக்கும் மகத்தான தொழில் நெசவுத் தொழில். சேலம் மாவட்டம் நெசவுத் தொழிலுக்குப் பெயர் பெற்றது. சேலம் மாவட்டத்தில், கூட்டுறவுத் துறையில், 4,929 கைத்தறிகளும், 39 விசைத் தறிகளும்; தனியார் துறையில், 17,823 கைத்தறிகளும், 16,985 விசைத் தறிகளும் இயங்குவதாக அறிகிறேன்.

ஆத்தூர் வட்டத்தில், நெடுங்காலமாகவே நெசவாளர் பெருமக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்று மாவட்ட வரலாறு தெரிவிக்கிறது.

வட நாட்டிலே கபீர் என்னும் மாபெரும் ஞானி ஒருவர் இருந்தார். அவருடைய பாடல்கள் அருமையானவை. அவர் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் ஒரு நெசவாளராகவே வாழ்ந்தார்.

பெரும் பெரும் செல்வந்தர்கள் எல்லாம் அவருக்குச் சீடராக இருந்தார்கள். கபீர் தனது முதிர்ந்த வயதில் துணி நெய்து கஷ்டப்படுவது அவர்களுக்கு மிகவும் வருத்தத்தை ஏற்படுத்தியது.

அவர்கள் கபீரிடம், நெசவுத் தொழிலை விட்டு விடுங்கள். உங்களுக்கு என்ன என்ன தேவையோ, அவற்றை நாங்கள் தருகிறோம்' என்றார்கள். கபீர் அவர்களிடம் சொன்னார், "நான் ஒரு நெசவாளி என்பதையும், நான் ஒரு ஞானி என்பதையும் அறிகின்ற போது எதிர்காலத்தில் மனிதர்களுக்கு அது நம்பிக்கை அளிக்கும். ஒரு நெசவாளி கூட இந்த மண்ணில் ஞானி ஆகலாம் என்பதற்கு நான் ஓர் உதாரணமாக இருப்பேன்" என்றாராம்.

மேலும்,

நெசவுத் தொழிலில் என்ன குறை?

அந்தத் தொழில் சிறப்பானது. அது மட்டுமல்ல – என்னைப் பொறுத்த வரையில், நெசவு செய்வதே ஒரு பிரார்த்தனை தான். நான் நெய்யும் துணியின் ஒவ்வொரு இழையிலும் என்னுடைய அன்பு அடங்கியிருக்கிறது என்று கபீர் சொன்னாராம்.

என்ன தொழில் செய்கிறோம் என்பது முக்கியமல்ல. அதை எப்படிச் செய்கிறோம் என்பது தான் முக்கியம்.

'செய்யும் தொழிலே தெய்வம்' என்றார் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். அந்த அடிப்படையில்,

'நெய்யும் தொழிலே தெய்வம்' என்கிறேன் நான்.

எதையும் முழுமையான ஈடுபாட்டோடு செய்தால் வெற்றி நிச்சயம்.

அதை, ஒரு சமூக அர்ப்பணிப்பு உணர்வோடு செய்தால் அது தான் தேச சேவை!

**நலத்திட்ட உதவிகள் வழங்குதல்**

சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கு அரசினுடைய பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேகமாகச் சென்றடைய வேண்டும் என்பதில் எனக்கு எப்போதும் மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் உண்டு. எனது எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில்,

இன்றைய தினம் சேலம் மாவட்டத்தில் உள்ள 23,373 பேருக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, மொத்தம் 15 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்குவதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

இன்றைய தினம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பாக, பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பொருளாதார உதவியாக 1,885 பேர்களுக்கு 1 கோடியே 59 இலட்சம் ரூபாய் நிதி உதவியும் – சுழல் நிதியாக, 160 குழுக்களில் உள்ள 2,713 பயனாளிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்களில் 2 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பில் 2,330 பயனாளிகளுக்கு பயன்கள் வழங்கப்பட உள்ளன. வருவாய்த் துறையின் சார்பாக, முதியோர், விதவைகள், ஊனமுற்றோர், விவசாயத் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்டோர், நலிந்தோர், மற்றும் விபத்துக்குள்ளானோர் ஆகிய 4,206 நபர்களுக்கு 1 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பில் உதவித் தொகையும் – 3,759 நபர்களுக்கு 93 இலட்சம் ரூபாய் மதிப்பில் இலவச வீட்டு மனைப் பட்டாக்களும் வழங்குவதில் நான் பெருமிதம் அடைகிறேன்.



40 இலட்சம் ரூபாய் நிதி உதவியும் – இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் புதிய வீடுகள் 1,361 பயனாளிகளுக்கு 4 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – இதே திட்டத்தில், கச்சா வீடுகளைப் புதுப்பிக்க 683 பேருக்கு 68 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – பாரதப் பிரதமரின் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தில், 226 பயனாளிகளுக்கு வீடுகள் 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கிடவும் – சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தில், 820 பயனாளிகளுக்கு 61 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – ஆக மொத்தம், 7,688 பயனாளிகளுக்கு 8 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் அளிப்பதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

மேலும், விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கொளத்தூர், தாரமங்கலம், ஓமலூர்

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு துறை மூலம் 15 பயனாளிகளுக்கு 20 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கருவிகளும் – தாட்கோ நிறுவனத்தின் சார்பில் 489 பேருக்கு 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளும் – பால் வளத் துறை மூலம் 270 பேருக்கு 22 இலட்சம் ரூபாய் மதிப்பில் கறவை மாடுகளும் – மாவட்ட தொழில் மையம் சார்பில் 12 பேருக்கு 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் கடனுதவிகளும் அளிக்கப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவை மட்டுமன்றி, கூட்டுறவுத் துறையின் சார்பில், சீரமைக்கப்பட்ட மகளிர் சிறு வணிகக் கடன், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன் உதவி, வீட்டு வசதி கடன் போன்றவை 2,484 பேருக்கு 1 கோடியே 43 இலட்சம் ரூபாய் அளவிலும் – தோட்டக் கலைத்

துறையின் சார்பில், 69 பேருக்கு 1 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – வனத் துறை சார்பில், 542 பேருக்கு 10 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில், 15 பயனாளிகளுக்கு 10,500 ரூபாய் மதிப்பிலும் – மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 151 பேருக்கு 1 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – வேளாண்மைத் துறையின் சார்பில், 147 பேருக்கு 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளும் – அளிக்கப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமன்றி, சமூக நலத் துறையின் சார்பில், 987 பெண்களுக்கு 21 இலட்சம் ரூபாய் மதிப்பில் இலவச தையல் இயந்திரங்கள் – பெண் குழந்தைகள் பாதுகாப்பு நிதி திட்டத்தின் கீழ், 111 தாய்மார்களுக்கு 18 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிதியுதவி ஆகியவற்றை வழங்குவதில் நான் மனநிறைவு அடைகிறேன்.

சேலம் மாநகராட்சி சார்பில், 84 பயனாளிகளுக்கு 42 ஆயிரம் ரூபாய் மதிப்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிதி உதவியும் அளிக்கப்பட உள்ளது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டு வளர்ச்சித் துறை சார்பாக, பட்டுப் புழு வளர்ப்பு மனை கட்ட, இரண்டு நபர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் மானியமும் – முன்னாள் படை வீரர் நலத் துறை சார்பில், 12 நபர்களுக்கு 66 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளும் வழங்குவதில் நான் எல்லையில்லா மனநிறைவு அடைகிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெறுகின்ற பயனாளிகள் இவற்றை அடிப்படையாக வைத்து, தொழில்களைச் சிறப்போடு செய்து, தங்கள் வாழ்வில் மென்மேலும், நலமும் வளமும் பெற்றிட வேண்டுமென்று உங்கள் அத்தனை பேருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது, நிறைவாக, உருவகக் கதை ஒன்றை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

ஓர் ஊரில் ஒரு தாய் இருந்தாள். அவள் அன்புத் தாய்! நீதித் தாய்! அவளுக்குப் பல பிள்ளைகள் இருந்தார்கள்.

ஒவ்வொரு பிள்ளையும், ஒவ்வொரு தொழிலை மேற்கொண்டு, அல்லும் பகலும் பாடுபட்டார்கள். தங்களது குடும்பத்தை மேம்படுத்த, இரவும் பகலும், உழைத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் காட்டிலும் மேட்டிலும் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்க, ஒரு பிள்ளை மட்டும் வீட்டிலேயே இருந்தது. மற்ற சகோதரர்கள் கொடுக்கும் பணத்துக்குக் கணக்கு வைத்துக் கொள்வது தான் இந்தப் பிள்ளையின் தொழில். மற்ற சகோதரர்களைக் காட்டிலும் இந்தப் பிள்ளை கொஞ்சம் படித்த பிள்ளை.

நல்ல உணவு, நல்ல உடை, நல்ல ஓய்வு – இப்படி வசதியாக வாழ்ந்த இந்தப் பிள்ளை அடிக்கடி செலவுக்குப் பணம் கேட்டு அம்மாவைத் தொல்லைப்படுத்துமாம்.

அந்த அம்மாவும், கேட்ட பொருளைக் கொடுக்கிற அம்மா தான்; கேட்காமலும் கொடுக்கின்ற அம்மா தான். அந்த ஆண்டு மழை பெய்யவில்லை, கழனிகள் விளையவில்லை. எனவே, முன்பு கொடுத்தது போல் இப்போது கொடுக்க முடியவில்லை.

சட்டியில் இருந்தால் தானே, அகப்பையில் வரும்? அம்மா என்ன செய்ய முடியும்?

அம்மா சொன்ன வார்த்தைகளை – அன்பு மொழிகளை – அந்தப் பிள்ளை காதிலே போட்டுக் கொள்ளவில்லை.

போதாக் குறைக்கு, உள்ளூர் பணக்காரர் ஒருவரும், அம்மாவை எதிர்க்குமாறு அந்தப் பிள்ளையை தூண்டிக் கொண்டே இருந்தார்.

அந்தப் பணக்காரருக்கு எந்தக் குடும்பமும் ஒற்றுமையாக இருந்தால் பிடிக்காது.

கோள் மூட்டுவதே தனது கொள்கை, குடி கெடுப்பதே தனது கோட்பாடு என்னும் இலட்சியத்தோடு வாழ்ந்து வந்தவர் அவர்.

வீட்டை விட்டு வெளியே வந்து விடுமாறும்; அவ்வாறு வெளியே வந்தால், தான் உறுதியாக ஆதரிப்பதாகவும் அந்தப் படுபாவி பணக்காரர் வாக்குறுதி தந்து கொண்டே இருந்தார்.

அந்தப் பிள்ளையும், அந்தக் கபட மனிதரின் வார்த்தை ஜாலங்களுக்குப் பலியாகி வீட்டை விட்டுப் போனான்.

கொஞ்ச நாள் கழிந்தது. அன்பிற் சிறந்த அம்மா, அச்சுறுத்தலுக்குப் பணிந்து விட மாட்டார் என்பதை அந்தப் பிள்ளை உணர ஆரம்பித்தது. தவறு செய்து விட்டோமோ




என்று வருந்தி, தன்னை வீட்டிலே மீண்டும் சேர்த்துக் கொள்ளுமாறு அம்மாவிடம் வேண்டுகோள் விடுத்தது.

ஆனால், அதற்குள் அம்மாவுக்கும் பிள்ளைக்கும் அப்படி ஒரு சமரசம் ஏற்பட்டுவிடக் கூடாது என்று ஆத்திரப்பட்ட அந்த உள்ளூர்ப் பணக்காரர், `வீட்டுக்கு நீ போய் விடாதே! உனக்காக நான் கோர்ட்டுக்கு ஆள் அனுப்பியிருக்கிறேன்! ஒரு கை பார்த்து விடுவோம்', என்று கொம்பு சீவிக் கொண்டே இருந்தார். அந்த அடாவடிப் பணக்காரர் யார் என்று உங்களுக்குத் தெரியும்! வீட்டை விட்டு வெளியேறிய பிள்ளை யார் என்ற விவரமும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்!

அன்புள்ள அந்த அம்மா யார் என்பதும், அவர் ஆற்றிவரும் அரிய பணிகள் எப்படிப்பட்டவை என்பதும் உங்களுக்கு மிக மிக நன்றாகவே தெரியும்.

இவ்வாறு சுற்றி நிற்கும் பகைகளைத் தூள் தூளாக்கி, வெற்றிப் பயணத்தைத் தொடருவோம், மக்கள் சக்தியே எனக்கு மகத்தான துணையாக இருக்கிறது!

உங்கள் துணையோடு, இன்னும் பல சாதனைகளை உங்கள் அன்புச் சகோதரியின் அரசு சாதிக்க இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொண்டு, எனது முயற்சிகளுக்கு உங்கள் அன்பும் ஆதரவும் என்றும் தொடர வேண்டும் என்று இந்த இனிய வேளையில் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை, இன்றைய தினம் நானே பயனாளிகள் அனைவருக்கும் எனது கையாலே வழங்க வேண்டும் என்று விரும்பினாலும், நேரம் குறைவாகவே இருக்கின்ற காரணத்தால், 15 பேருக்கு மட்டும் நான் இந்த மேடையில் வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு, அமைச்சர் பெருமக்களும், இங்கே வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும் இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திட பணியாற்றிய சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சேது ராமச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!
என்று கூறி விடை பெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

---

– 27.8.2003 அன்று சேலம் மாவட்டம், ஆத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை**

* * *

# மக்கள் மீது அன்பும் அக்கறையும் கொண்டது எனது அரசு

நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
**13.9.2003** அன்று ஆற்றிய உரை

இயற்கை அழகு கொஞ்சும் இந்த நீலகிரி மாவட்டத்தில், உதகமண்டலம் நகரிலே நடைபெறும், மாவட்ட அரசு விழாவில் கலந்துக் கொண்டு, உங்களை எல்லாம் கண்டு மகிழவும், பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கி, உங்களிடையே ஒரு சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும், இன்று வாய்ப்பு கிடைத்தது குறித்து, நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.



மரகதப் புல்வெளிகளைப் பார்க்கும் போது, மலைகளின் கம்பீரத்தைப் பார்க்கும் போது, மணக்கின்ற பூக்களின் வாசத்தை நுகர்கிறபோது, மண்ணுக்கு அழகு ஊட்ட வளைந்தோடும் ஆறுகளையும், சிற்றோடை களையும் காண்கின்ற போது, நமது களைப்பு மறைகிறது; கவலைகள் பறந்தோடுகின்றன; மனம் மகிழ்ச்சியில் திளைக்கிறது.

இயற்கை அன்னை வஞ்சனை இல்லாமல், அழகை வாரி இறைத்திருக்கிற இடம், நீலகிரி! வயதில் நீலகிரியோடு ஒப்பிடுகிறபோது, இமயமலையைப் பச்சைக் குழந்தை என்று, புவியியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களின் சந்திப்பில் அமைந்து இருக்கிறது நீல மலை. இந்த நீலகிரி மலைத் தொடர்ச்சியில், 57 சதவீதம் பகுதி, 1,000 மீட்டருக்கு மேல் உயரம் கொண்டதாக அமைந்துள்ளது. மகாபாரதத்தில், மலைகளின் இளவரசன் என்று அழைக்கப்பட்ட நீலகிரி, அண்மைக் காலங்களில், மலை அரசி, அதாவது மலைகளின் ராணி என்று போற்றப்படுகிறது.

கிழக்குத் தொடர்ச்சி மலையும், மேற்குத் தொடர்ச்சி மலையும், சந்திக்கும் இடத்தில் அமைந்து இருக்கும் தொட்டபெட்டா சிகரம், கடல் மட்டத்தில் இருந்து, 2,670 மீட்டர் உயரத்தில் அமைந்து, பெருக்கு ஏற்றபடி, உயரமான சிகரமாக விளங்குகிறது. தொட்ட என்றால் பெரிய என்று பொருள், பெட்டா என்றால் மலை என்று பொருள்.

தமிழகத்திலுள்ள ஏனைய மாவட்டங்களைப் போல், நீலகிரியைப் பற்றி பழைய வரலாற்றுக் குறிப்புகள் இல்லை. நீலகிரியைப் பற்றிய பழமையான குறிப்பை, நாம் சிலப்பதிகாரத்தில் பார்க்கிறோம். சேரன் செங்குட்டுவன், இமயத்தை வெற்றி கொள்ளச் செல்கின்ற வழியில், நீலகிரிக்கு வந்தான் என்றும் இங்கே தங்கினான் என்றும் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

இவ்வாறு, நீலகிரியைப் பற்றி, ஏதோ ஒன்றிரண்டு வரலாற்றுக் குறிப்புகளும், இலக்கியச் சான்றுகளும் மட்டும்தான் காணப்படுகின்றன. ஆனால் எவ்வளவுக்கு எவ்வளவு, முன்பு அறியப்படாமல் இருந்ததோ, அதற்கு மாறாக, இன்று, உலகம் அறிந்த சுற்றுலாத் தலமாக, நீலகிரி விளங்குகின்றது.

இதற்குக் காரணமாக இருந்த, சர் ஜான் சல்லிவன் என்ற ஆங்கிலேயரை, நாம் இந்த நல்ல நேரத்தில் நன்றியோடு நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சர் ஜான் சல்லிவன் அவர்களது கடுமையான முயற்சிகளின்

பயனாக, நீலகிரி வெளிச்சத்திற்கு வந்தது; உலகத்தின் பார்வை அதன் மீது விழுந்தது.

சல்லிவன், 18–ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில், கோவை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர். இவர் கோத்தகிரி வழியாக உதக மண்டலத்தை, 1819–ஆம் ஆண்டு அடைந்தார். நீலகிரி

அழைப்பது வழக்கம். பல்வேறு மந்துகள் நீலகிரியில் இருந்தன. அவற்றில் ஒன்றுதான், ஒற்றைக் கல் மந்து. ஒற்றைக் கல் மந்து என்ற பெயர்தான் Ootacamund என்று ஆங்கிலேயர்களால் உச்சரிக்கப்பட்டது என்றும், அந்த ''உட்டக்கமண்ட்'' தான் பின்னால் உதகமண்டலம் என்று, தமிழ் மொழிப் பெயராக இன்னொரு வடிவம் எடுத்தது என்றும், ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.



வளர்ச்சிக்கு சல்லிவன் எவ்வளவு பாடுபட்டார் என்பதற்கு இந்த மாவட்டத்தின் வரலாற்றுக் குறிப்புகள் சான்றாக விளங்குகின்றன. உதகமண்டலத்தில் இன்றைக்குப் புகழ்பெற்று விளங்குகின்ற ஏரியை சல்லிவன் தான் உருவாக்கினார். மேலும், தேயிலை, உருளைக் கிழங்கு, பலவகைப் பழங்கள், காய்கறிகள் ஆகிய பயிர்களை முதன் முதலாக அறிமுகப்படுத்திய பெருமையும் இவருக்கு உண்டு.

நீலகிரி மலையில் தொதவர்கள், படகர்கள், குரும்பர்கள், கோத்தர்கள், காட்டுநாயக்கர்கள், பணியர்கள், இருளர்கள், ஆகிய பழங்குடி மக்கள் வசிக்கிறார்கள். தங்களுக்கென தனிப்பட்ட பழக்க வழக்கங்களைக் கொண்ட இந்த மக்களின் ஆடல்களும், பாடல்களும் அற்புதமானவை.

நீலகிரி மாவட்டத்தின் தலைநகர் உதகமண்டலம் ஏன் அந்தப் பெயரால் அழைக்கப்படுகிறது என்பதற்குக் கூட, சுவையான காரணம் சொல்லப்படுகிறது.

இங்கு வாழும் தொதவ மக்களின் வாழ்க்கைக்கு, எருமை மந்தைகளே அடிப்படையாகும். எனவே, தொதவர்களின் கிராமத்தை மந்தை அல்லது மந்து என்று

ஒரு காலத்தில், பசுமைச் சோலையாக விளங்கிய உதகை, இன்றைக்கு கட்டடக் காடாக மாறி வருகிறது. எதிர்காலத்தைப் பற்றிய தொலை நோக்குப் பார்வை இன்றி, இயற்கையை உதாசீனப்படுத்தியதால் ஏற்பட்ட விளைவு இது! இயற்கை என்றால் என்ன ? மரங்கள், செடி, கொடிகள், பூச்சிகள், பறவைகள், விலங்குகள் இவைகள் எல்லாம் சேர்ந்தது தானே இயற்கை! மரம், செடி, கொடிகளை அழித்து விட்டு மழைக்காக ஏங்குகிறார்கள்; நிலச்சரிவு ஏற்பட்டு விட்டதே என்று கலங்குகிறார்கள். எனவே, மரம் வளர்ப்போம், மழை பெறுவோம் என்று உறுதி கொள்வோம்!

இந்த நேரத்தில், நெஞ்சில் பதிக்க வேண்டிய இன்னொரு செய்தியையும், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீலகிரியில் உள்ள 80 வகைத் தாவரங்கள், இங்கு மட்டுமே உள்ளவை! உலகத்தில் வேறு எங்கும் இல்லாதவை! எனவே, இவற்றைக் காக்க வேண்டிய பொறுப்பு, கட்டாயம் நமக்கு உண்டு.

என் அன்புக்குரிய நீலகிரி மாவட்ட பெருமக்களே, உங்களைக் காண்பதற்கு இன்று உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் வெறும் கையோடு வரவில்லை.

77 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் – பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்க வந்துள்ளேன்.

சிறப்புமிக்க இந்த விழாவிலே இன்றைய தினம், நீலகிரி மாவட்ட மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், மொத்தம் 25 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, 396 பணிகளைத் திறந்து வைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அந்தப் பணிகளில் மிக முக்கியமான ஒரு சிலவற்றை மட்டும், இப்போது நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள, 65 ஆயிரம் சிறுதேயிலை விவசாயிகள் பயன் அடையும் வகையில், ஒரு கோடி ரூபாய் செலவில், தேயிலைக்கான மின்னணு ஏல மையத்தை, இன்று நான் திறந்து வைத்துள்ளேன். குன்னூரில், அரசு மற்றும் தனியார் கூட்டமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இந்த தேயிலை மின்னணு மையத்தைப் போல உலகில் வேறு எந்த நாட்டிலும் அமைக்கப்படவில்லை என்பதை மகிழ்ச்சியுடனும், பெருமிதத்தோடும் இந்த மாபெரும் கூட்டத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேயிலைத் தொழிலுக்கு ஏற்பட்ட இன்னல்கள், எவை எவை என்பதையும், அவற்றை எல்லாம் களைவதற்கு, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் எடுத்த எண்ணற்ற முயற்சிகளைப் பற்றியும், நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இந்த மாவட்டத்தில் சிறுதேயிலை விவசாயிகள், பச்சைத் தேயிலைக்கு நியாயமான விலை கோரி, கடந்த தி.மு.க. ஆட்சியின் போது, 2000–ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஜுலை மாதம் வரை, போராட்டம் நடத்தினார்கள். நியாயம் அற்ற தி.மு.க. அரசு, அநியாய மானமுறையில் அவர்கள் மீது அடக்குமுறையை ஏவியது. இதனால் பாதிக்கப்பட்ட 20 சிறு தேயிலை விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க, மாநில மனித உரிமை ஆணையம் அளித்த பரிந்துரையை, ஒரு பொருட்டாக மதிக்காமல், அன்றைய முதலமைச்சர் கருணாநிதி, அவர்களுக்கு அந்தத் தொகையை வழங்கவே இல்லை. ஆனால், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 23 நாட்களிலேயே பாதிக்கப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளை, சென்னை தலைமைச் செயலகத்துக்கு வரவழைத்து, மாநில மனித உரிமை ஆணையம் பரிந்துரைத்திருந்த 31 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயை, அவர்களுக்கு வழங்கினேன்.

அது மட்டுமல்ல; தேயிலை விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளின் துன்பத்தைப் போக்க, தயாரிக்கப்பட்ட தேயிலையை, ஏல மையங்களில் INDCOSERVE நிறுவனம் வாங்கி, தேயிலையைப் பதப்படுத்தி Packet – களில் அடைத்து, கூட்டுறவு சங்கங்களின் மூலம், நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்வதற்கு நான் ஏற்பாடு செய்தேன்.

Ooty Tea என்ற பெயரில் அந்த தேயிலை விற்பனை செய்யப்பட்டு வருவதும், அதனால் நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகளுக்குப் புதிய நம்பிக்கையும், புதிய நன்மையும் கிடைத்திருப்பதும், உங்கள் அன்புச் சகோதரி எடுத்த நடவடிக்கைகளின் பலன்தான் என்பதை, நீங்களே அறிவீர்கள்.

இதன் தொடர்ச்சியாகத் தான், ஒரு மாபெரும் மையத்தை, இன்று நான் தொடங்கி வைத்துள்ளேன். "TEA SERVE" அதாவது The Tea Manufacturers' Service Industrial Co-operative Society Limited என்னும் இந்த மையம், தேயிலை விவசாயிகள், தங்கள் தேயிலைக்கு நல்ல விலையினைப் பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும். "TEA SERVE" என்பது தேயிலை உற்பத்தியாளர்களின் கூட்டுறவு நிறுவனம் ஆகும். இதன் நிருவாகத்தில், சிறு தேயிலை விவசாயிகளும் பங்கு பெறுகிறார்கள். தேயிலை ஏலத்தில், இனிமேல் தரகர்களுக்கு இடமே இருக்காது. இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளதால், வணிக நடவடிக்கைச் செலவு, 40 சதவீதம் குறையும்; கால விரயமும் தவிர்க்கப்படும். தரகர்களின் கடன் வலையில், விவசாயிகள் சிக்கிக் கொள்வதைத் தடுக்கும் வகையில், குறைந்த வட்டியில் வங்கிக் கடனுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

மேலும், இந்த மையத்தில் விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு, தமிழ்நாடு விற்பனை வரி, மற்றும் மத்திய விற்பனை வரியைப் பொறுத்த வரையில், 50 சதவீதம் வரிச் சலுகை வழங்கவும், நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகிலேயே முதன் முதலாக, வேறு எந்த நாட்டிலும் இல்லாத வகையில், கணினி மூலம் ஏலம் நடைபெற இருப்பது இந்த மையத்தில் தான் என்பதை, மீண்டும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்த இனிய விழாவில், "TEA SERVE" ன் இணைய தளத்தை துவக்கி வைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த இணைய தளத்தில், தேயிலையைப் பற்றிய விவரங்கள் மட்டும் அல்லாமல் "TEA SERVE" –ல் நடைபெறும் ஏல விவரங்களையும், உலகின் எந்த இடத்திலிருந்தும் உடனுக்குடன் பெற இயலும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோலவே, நீலகிரி மாவட்ட விவசாயிகளின் நலன் கருதியும், இங்கு வருகை புரிகின்ற உல்லாசப்



பயணிகளை மகிழ்விக்கும் வகையிலும், 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தோட்டக் கலைத் துறை வளாகம், அதாவது Horticulture Complex ஒன்றை உதகமண்டலம் நகரின் மையப் பகுதியில் சேரிங் கிராஸ் அருகில் இன்று நான் திறந்து வைத்ததில், மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். சுமார் 1 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த வளாகம், மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பகுதியில், பொதுமக்களுக்கு உயர்ரக விதைகள், செடிகள் ஆகியவற்றை விற்பனை செய்யும் சேவை மையமும், இரண்டாவது பகுதியில், தோட்டக்கலை தகவல் மையமும்; கண்ணாடி மாளிகையாக அமைக்கப்பட்டுள்ள மூன்றாவது பகுதியில், மலர்ச் செடிகள், உள் அலங்காரச் செடிகள் ஆகியவற்றின் நிரந்தரக் கண்காட்சியும் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

ஓர் ஆறு அமைதியாக, அதே நேரத்தில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அதற்கு ஒரே இலட்சியம்! போகும் பாதையில் இருக்கும் அத்தனை வயல்களையும், வளம் கொழிக்கச் செய்ய வேண்டும்; அந்த தேசம் வற்றாத செல்வத்தோடு விளங்கவேண்டும்; மக்கள் வயிறார உண்டு பசியாற வேண்டும்; எத்தனை எத்தனை மக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ, அத்தனை பேருக்கும் நன்மை செய்ய வேண்டும்; எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அதை செய்து விட வேண்டும் – இதுதான் அந்த நதியின் இலட்சியம்! அப்படிப் போய்க் கொண்டிருந்தது அந்த ஆறு! அப்போது, கரையோரம் அடித்த காற்றில், ஆற்றிலே ஒரு துரும்பு வந்து விழுந்தது.

அது அற்பமான துரும்பு தான்! ஆனால், அதற்கு ஆணவம் அதிகம்! வாயாடித்தனமோ மிகவும் அதிகம்!

எந்தக் காற்று தன்னைத் தள்ளிக் கொண்டு ஆற்றில் போட்டதோ, அந்தக் காற்றிடம் அந்தத் துரும்பு சொன்னதாம்!

“என்னைப் பார்! இந்த ஆற்றை ஓட விடாமல், நான் தடுத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரத்தில், என்ன நடக்கிறது பார்! ஆற்றை அப்படியே நிறுத்திவிடப் போகிறேன். ஆறு என்னைப் பார்த்து கெஞ்சப் போகிறது. நான் இதனிடம் இரக்கம் காட்ட மாட்டேன். ஓர் அங்குலம் கூட நகரமுடியாமல், நான் இந்த ஆற்றை நிறுத்திவிடப் போகிறேன்” என்றது.

காற்று கைகொட்டி சிரித்தது. “என்ன சிரிக்கிறாய்? என்று ஆத்திரத்தோடு கேட்டது துரும்பு.

இந்த முட்டாள் துரும்பின் அகங்காரப் பேச்சுக்கு, காற்று பதில் சொல்ல விரும்பவில்லை. அதுவும் ஆற்றைப் போல், சுறுசுறுப்பாக விரைந்து செல்ல வேண்டும் என்று விரும்பியது.

ஆகவே, மூடத் துரும்பின் மூளை கெட்ட பேச்சுக்கு, அது பதில் சொல்லவில்லை.

துரும்புக்கு ஆணவம் இன்னும் தலைக்கு ஏறியது. “காற்றே! நான் நினைத்தால், உன்னையும் நிறுத்தி விடுவேன் தெரியுமா?'' என்று கொக்கரித்தது.

அந்த நேரம், ஆற்றிலே ஒரு சுழல் ஏற்பட்டது. ஆணவத் துரும்பு அந்தச் சுழலிலே அகப்பட்டுக் கொண்டு, படாதபாடுபட்டது. கண நேரத்தில் அதன் கதை முடிந்து விட்டது. அந்தத் துரும்பு எங்கே போயிற்று என்று யாரும் கவலைப்படவில்லை. ஆறோ, தன் போக்கில் போய்க் கொண்டிருந்தது. அப்படி ஒரு சம்பவம் நடந்ததையே அது கவனிக்கவில்லை.

இந்தக் கதையிலே வருகிற "ஆறு" உங்கள் அன்புச் சகோதரியாகிய நான்! "ஆணவத் துரும்பு" யார் என்று, நான் உங்களுக்கு அடையாளம் காட்ட வேண்டிய அவசியமே இல்லை! உங்களுக்கே மிக நன்றாகத் தெரியும்!

ஆணவத் துரும்புகள் ஆயிரம் வந்தாலும், ஆற்றின் ஓட்டத்தை தடை செய்ய முடியாது! வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது!

அத்தனை தடைகளையும் உடைத்து எறிந்து, இதோ ஆறு உங்களிடம் வந்திருக்கிறது.

நீலகிரி விவசாய பெருமக்கள், தேயிலை உற்பத்தி செய்வதை மட்டும், நம்பி இருக்க இயலாது. உலக அளவிலேயே தேயிலை விலை குறைந்து கொண்டு வருகிறது. எனவே, தேயிலையை மட்டும் நம்பி இருந்தால் நஷ்டம் ஏற்படும். ஆகவே, தேயிலையுடன் "மாற்றுப் பயிர்த் திட்டம்" என்னும் புதிய திட்டத்தினை, 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த, நான் ஆணையிட்டுள்ளேன். இதன் அடிப்படையில், தேயிலைப் பயிருக்கு உரிய மாற்றுப் பயிர்களாக, பல்வேறு மலர் வகைகளும், நறுமண சுவைப் பயிர்களும், பழங்களும், காய்கறிகளும், சாகுபடி செய்யப்படும். இந்தப் பயிர்களை லாபகரமாக சாகுபடி செய்வதற்கு ஏற்ற வகையில், தோட்டக் கலைத்துறை மூலமாக, பல்வேறு வகைப்பட்ட நடவுச் செடிகள், விதைகள் மற்றும் இடுபொருட்கள், விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இது தவிர, இந்தத் திட்டத்தின் கீழ், தேயிலையுடன் கூடிய பல அடுக்கு பயிர்ச் சாகுபடி முறையும், அதாவது Multi-tier cropping முறையும் பரவலாக்கப்பட்டு வருகிறது.

மாற்றுப் பயிர்களில், கொய் மலர்கள் – Cut Flowers மிக முக்கியமான இடம் பெறுகின்றன. இவற்றைப் பயிரிட, நீலகிரி மாவட்டத்தின் தட்பவெப்ப சூழ்நிலை, மிகவும் உகந்ததாக உள்ளது. இந்த வாய்ப்புக்களைக் கருத்தில் கொண்டு, நீலகிரி மாவட்டத்தை மலர் ஏற்றுமதி மண்டலமாக எனது அரசு 7.1.2003 அன்று அறிவித்து ஆணையிட்டது. அதன்படி, மைய அரசின் அபேடா (APEDA) நிறுவனத்துடன், எனது முன்னிலையில், 6.2.2003 அன்று, தமிழக அரசு இதற்கான ஒப்பந்தம் செய்துகொண்டது. நீலகிரி மாவட்டத்தில் 15 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பில், மலர் ஏற்றுமதி மண்டலம் அமைப்பதற்காக திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது நீலகிரி மாவட்டத்தில் சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் – Polygreen Houses பசுமைக் குடில்களின் கீழ், ஏற்றுமதி வகை ரக மலர்கள், பயிரிடப்பட்டு வருகின்றன. அடுத்த 5 ஆண்டுகளில், மேலும் 50 ஏக்கர் பரப்பில், 20 கோடி ரூபாய் மதிப்பில், தனியார் முதலீட்டுடன் ஏற்றுமதிரக மலர்களை உற்பத்தி செய்ய, பசுமைக் குடில்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 42 உற்பத்தியாளர்கள், உயர் தொழில்நுட்ப மலர்ச் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். நீலகிரி மாவட்ட மலர்ச் சாகுபடியாளர்களைக் கொண்டு, இதுவரை 2 மலர்சாகுபடியாளர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏற்றுமதி மலர்களான கார்னேஷன் Alstromeria lillium போன்ற மலர்களை சாகுபடி செய்வதற்குப் பசுமைக் குடில் அமைப்பதற்காக தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம், 10 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, 10 இலட்சம் ரூபாய் மானிய உதவி ஆணையை, இன்று நான் வழங்குகிறேன் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நான் தொடங்கி வைக்கும், நீலகிரி மலர் ஏற்றுமதி மண்டலப் பணிகள் மூலம், புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு, நீலகிரி மாவட்ட மக்களின் பொருளாதார நிலை, பெரிதும் மேம்பாடு அடையும் என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மலைவாழ் பகுதியான எழில்மிகு நீலகிரி மாவட்டத்தில், பல்வேறு அரசு திட்டப் பயன்களை, அனைத்து மக்களும், அதிக அளவில் பெற வேண்டும் என்பதற்காக, இந்த இனிய விழாவிலே 49 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, 198 பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதை மனநிறைவோடு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். அவற்றில் ஒரு சில முக்கியமான பணிகளைப் பற்றி மட்டும் இப்போது குறிப்பிட விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக, 1 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுகாதார வளாகங்கள், பள்ளிக் கட்டடங்கள், சுயஉதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள், சமுதாயக்கூடங்கள் போன்ற பல்வேறு பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியதில், நான் பெருமிதம் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில், குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துடன், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 6 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 50,919

மக்கள் பயன்பெறும் வகையில் 7 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கும் – குன்னூர் நகராட்சியில் 63 இலட்சம் ரூபாய் செலவில், கரன்சி நீரோடையிலிருந்து, குடிநீர் வசதி செய்யும் திட்டத்திற்கும், இன்று அடிக்கல் நாட்டியதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.




சீரான மின் விநியோகத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்தோடு 7 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அத்திப்பள்ளி, உப்பட்டி, சேரம்பாடி ஆகிய இடங்களில் உள்ள 66 கிலோ வோல்ட் துணை மின்நிலையங்களை, 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களாக மாற்றும் பணிக்கும்; 33 கிலோ மீட்டர் தொலைவிற்கான, மின்பாதை மாற்றம் செய்யும் பணிக்கும், இன்று அடிக்கல் நாட்டியதில், நான் அக மிக மகிழ்கின்றேன்.

பள்ளிக் கல்வித் துறை மூலமாக, 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில், கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், புதிய பள்ளிக் கட்டடங்கள், கருத்தாய்வு மையங்கள் கட்டுவதற்காக, அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

உதகமண்டலத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் படகு இல்லத்தில், சுற்றுலாப் பயணிகள் சவாரிக்காக, அதிக நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதால், சுற்றுச் சூழல் மாசுபடாதவாறு, 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மரத்தினால் செய்யப்பட்ட புதிய படகு இல்லம் ஒன்றை, சுற்றுலாத் துறை மூலம் அமைப்பதற்கும் – தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் 1 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம், இளைஞர் விடுதி, மலைப் பிரதேச பயிற்சி மையம் ஆகியவற்றை கட்டுவதற்கும், இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த விழாவில், நீலகிரி மாவட்டத்தின் ஒரு சில பிரச்சினைகளைப் பற்றிக் கூற விரும்புகிறேன். உதகமண்டலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்த, நிறுவனத்தின் விற்பனை அளவு 240 கோடி ரூபாய் என்ற அளவிலிருந்து, படிப்படியாகக் குறைந்து, 35 கோடி ரூபாயாகச் சுருங்கிவிட்டது. 1960ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தியாவில் மட்டுமின்றி, தெற்கு ஆசியாவிலேயே உள்ள ஒரே Photo Film நிறுவனமான இந்த நிறுவனம் தற்போது கடும் கடன் சுமையால், தத்தளித்துக் கொண்டிருக்கிறது என்பதும், பன்னாட்டு நிறுவனங்களோடு போட்டி போட இயலாத அளவுக்கு, அது பலம் குன்றி உள்ளது என்பதும், எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.



எனவே, மைய அரசின் கனரகத் தொழில் அமைச்சகமும், நிதி அமைச்சகமும் ஒருங்கிணைந்து இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத்துக்குப் புத்துயிர் அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, பாரதப் பிரதமர், துணைப் பிரதமர், மத்திய நிதி அமைச்சர், மத்திய கன ரக தொழில் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் துறை அமைச்சர் ஆகியோருக்கு, நான் கடிதம் எழுதியுள்ளேன் என்பதை தெரிவித்து கொள்கிறேன். மைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து, இந்த நிறுவனத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்ய வேண்டும் என்று நான் இக்கூட்டத்தின் வாயிலாக மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் வாழும் படகர் சமுதாயத்தினரை, பழங்குடியினர் இனப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்னும் கோரிக்கை, 50 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று, நாக்கு பெட்டா படகர் இனத்துப் பிரதிநிதிகள், என்னிடம் சில நாட்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்தார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்று, இது பற்றி உடனடியாக முடிவெடுத்து, பழங்குடியினர் இனப் பட்டியலில், படகர் பழங்குடி சமுதாயத்தினரைச் சேர்க்க வேண்டும் என வலியுறுத்தி, மைய அரசின் பழங்குடியினர் விவகாரத் துறை அமைச்சருக்கு, நான் கடிதம் எழுதியுள்ளேன் என்பதை இந்த வேளையில், உங்களிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கூடலூர் சட்டமன்ற உறுப்பினரும், சுற்றுலாத்துறை அமைச்சருமாகிய திரு. மில்லர் அவர்கள், கூடலூரில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்று, என்னிடம் கோரிக்கை விடுத்திருந்தார். கூடலூர் தொகுதியில், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள், அதிகமாக வசிப்பதாலும், நீலகிரி மாவட்டத்திலேயே உதகையில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், குன்னூர் மற்றும் உதகையில், இரண்டு அரசு உதவி பெறும் கல்லூரிகளும் மட்டுமே இருப்பதாலும், இந்தக் கல்லூரிகள் கூடலூரில் இருந்து, 40 கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதாலும் கூடலூர்ப் பகுதி மாணவ மாணவியரின், உயர் கல்வித் தேவைகளைக் கருத்தில் கொண்டு கூடலூரில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை நிறுவ, நான் ஆணையிட்டிருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரியாக அமையவிருக்கும் இந்தக் கல்லூரியின் உடனடிச் செலவுக்காக, 50 இலட்சம் ரூபாயை வழங்கவும் நான் உத்தரவிட்டிருக்கிறேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாள் ஓர் இடத்தில், பெரிய கூட்டம் கூடி இருந்தது. அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த ஒருவர், கூட்டத்துக்குள் எட்டிப் பார்த்தார். கூட்டத்துக்கு நடுவே ஒரு கிணறு இருந்தது. அதைச் சுற்றித் தான் கும்பல் கூடியிருந்தது. என்னதான் நடக்கிறது என்பதை அறிய, கூட்டத்தை தள்ளிக் கொண்டு அந்த வழிப்போக்கர் உள்ளே போனார்.

கிணற்றுக்குள் ஒரு மனிதன், ''காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்'' என்று கத்திக் கொண்டே இருந்தான்.

அவனைக் காப்பற்ற பல பேர் முயன்று கொண்டிருந்தார்கள். ''கையைக் கொடு! கையை நீட்டு மேலே தூக்கி விடுகிறேன்!'' என்று பலர் கை நீட்டச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், கிணற்றுக்குள் இருந்தவன், அவர்கள் சொன்னதைக் கேட்கவும் இல்லை; கையை நீட்டவும் இல்லை.

அப்போது, வழிபோக்கராயிருந்து, கூட்டத்துக்கு உள்ளே போன மனிதர், முன்னால் சென்று கிணற்றுக்குள் குனிந்து, ''என் கையைப் பிடித்துக் கொள்'' என்றார், உடனே, அவருடைய கையைப் பிடித்து கொண்டு, கிணற்றுக்குள் கிடந்தவன், மேலே வந்து விட்டான்.

சுற்றி நின்ற எல்லோருக்கும் ஆச்சரியம்! ''எப்படி இதைச் சாதித்தீர்கள் ?'' என்று கேட்டார்கள். ''நாங்கள் எத்தனையோ தடவை கையைக் கொடு, தூக்கி விடுகிறோம் என்று சொன்னோம். அவன் கேட்கவில்லை. ஆனால், நீங்கள் சொன்னதும் வந்துவிட்டானே, எப்படி ?'' என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் சொன்னாராம், ''ஒரு கஞ்சன் எதையும், யாருக்கும் கொடுக்கமாட்டான். அடுத்தவர்க்குக் கொடுக்க அவனுடைய கை நீளவே நீளாது. கிணற்றுக்கு உள்ளே விழுந்த மனிதன், ஒரு கஞ்சன் என்பதை யூகித்து, அறிந்து கொண்ட நான், ''உன் கையை நீட்டு'' என்று சொல்லாமல், ''என் கையைப் பிடித்துக் கொள்'' என்றேன். உடனே, என் கையைப் பிடித்துக் கொண்டு அவன் வெளியே வந்துவிட்டான்.

நீங்கள் எல்லாம் ''கை கொடு, கைகொடு, கை நீட்டு'' என்கிறீர்கள்.

நானோ, எனது கையை நீட்டினேன்; பிடித்துக் கொண்டு வந்து விட்டான்'' என்றாராம்

இப்படி, தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளக்கூட, கை நீட்டாத கஞ்சப் பிரபுக்கள், இன்றைக்கும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு வாங்கித்தான் பழக்கம். கொடுத்துப் பழக்கம் இல்லை. எவ்வளவுதான் செல்வம் இருந்தாலும், பிறருக்குக் கொடுக்க அவர்களுக்கு மனம் வருவதில்லை.

தமிழ்நாட்டில், கோடி கோடியாய்க் கொட்டி வைத்து கொண்டிருக்கின்ற ஒரு அரசியல்வாதி, ஊர் ஊராகச் சென்று, கட்சி நிதி சேர்த்துக் கொண்டிருக்கிறேன் என்கிறார். எச்சில் கையால் காக்கையைக் கூட விரட்டாத இந்த மனிதர், ஏழை எளியவர்களிடமும் கட்சி நிதி வாங்கிக் கொண்டிருக்கிறார். வியாபாரிகளிடமும் அடாவடித் தனமாய்ப் பணம் பறிக்கிறார்! இடையிடையே, புத்தக வியாபாரம் நடத்தி, வீட்டுக்குப் பணம் சேர்க்கின்ற வேடிக்கைப் பிச்சையும், அவ்வப்போது நடக்கிறது.




"ஈ என இரத்தல் இளிந்தன்று
ஈயேன் என்றல் அதனினும் இளிந்தன்று"
– என்கிறது புறநானூறு.

ஈ என்று கெஞ்சுவது, இழிவு என்கிறது சங்க இலக்கியம். எந்த இலக்கியம் படித்தால் என்ன ? இயல்பான குணத்தை எப்படி மாற்ற முடியும்!

அதனால்தான், "கந்து வட்டிக்காரன் வசூலிப்பது போல், தேர்தல்நிதியை வசூலித்து விடுவேன்" என்று அவரால் கூற முடிகிறது – அதுவும் பொதுக் கூட்ட மேடையிலே!

ஆனால், எட்டாவது வள்ளல் என்று போற்றப்படுகின்ற, இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் வழியில், அரசு நடத்தும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், ஏழை எளிய மக்களுக்கு, எந்த எந்த வழிகளில் உதவலாம் என்பதைப் பற்றியே, எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கு, அரசினுடைய பல்வேறு நலத்திட்ட உதவிகள், விரைந்து சென்றடைய வேண்டும் என்பதில், எனக்கு எப்போதும் அளவில்லாத அக்கறையும், ஈடுபாடும் உண்டு. எனவே, எனது எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில், இன்றைய தினம் நீலகிரி மாவட்டத்திலுள்ள 4,626 பேருக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை,மொத்தம் 2 கோடியே 47 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் வழங்குவதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய தினம், 241 சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 3,615 பயனாளிகளுக்கு, 81 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, பொருளாதாரக் கடன், சிறுவணிகக் கடன், தொழில் கடன் மற்றும் சுழல் நிதி உதவியும், – சமூக நலத் துறையின் மூலமாக, பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தில் 50 பயனாளிகளுக்கு 17 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் உதவியும் 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 100 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரமும் வழங்குவதிலே, நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், ஆதிதிராவிட நலத்துறை மூலமாக, 199 பயனாளிகளுக்கு, 30 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்களும் – 40 பயனாளிகளுக்கு, 18 இலட்சம் ரூபாய் மதிப்பிலான இலவசத் தொகுப்பு வீடுகளும் – மாவட்ட தொழில் மையத்தின் மூலம் 10 நபர்களுக்கு, 4 இலட்சம் ரூபாய் மதிப்பில், சிறுதொழில் தொடங்க கடனுதவியும் – புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் 2 பயனாளிகளுக்கு 74 இலட்சம் ரூபாய் மதிப்பில், தொழில் தொடங்க கடனுதவியும் வழங்குவதில், மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

தோட்டக் கலைத்துறையின் மூலமாக, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 40 நபர்களுக்கு 9 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பில், தேயிலை கவாத்து இயந்திரங்களும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 559 நபர்களுக்கு, 12 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான உதவிகளும் – உடல் ஊனமுற்றோர் துறை மூலமாக

11நபர்களுக்கு 27 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான உதவிகளும் வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெறுகின்ற பயனாளிகள், இவற்றை அடிப்படையாக வைத்து, தொழில்களைச் சிறப்போடு செய்து, தங்கள் வாழ்வில் மென்மேலும், நலமும் வளமும் பெற்றிட வேண்டும் என்று, உங்கள் அத்தனை பேருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓர் ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவன் பூஜை அறையில், சிவலிங்கத்துக்கு பூஜை செய்து கொண்டிருந்தான். அப்போது ஒரு எலி ஓடி வந்து, சிவலிங்கத்தின் முன் வைக்கப்பட்டிருந்த பிரசாதத்தை, வாயிலே கவ்விக் கொண்டு போய் விட்டது. அந்த மனிதன் ஓர் அரைகுறை ஆசாமி! அவனுக்கு ஒரே அதிர்ச்சி! சாமிக்கு முன் வைக்கப்பட்டிருந்த பிரசாதத்தை, எடுத்துக் கொண்டு போய் விடும் அளவுக்குத் துணிச்சல் இருந்தால், அந்த எலி தானே பெரிய கடவுள் என்று நினைத்தான். அதற்குப் பின், அவன் எலியே தெய்வம் என்று நினைத்து வழிபாடு செய்து வந்தான். ஒரு நாள், எலிச்சாமி சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, பூனையார் வந்துவிட்டார். பூனையைக் கண்டதும், தப்பித்தேன், பிழைத்தேன் என்று எலியார், ஒரு பொந்துக்குள் ஓடி ஒளிந்துக் கொண்டார்.

"சீ! எலியும் ஒரு கடவுளா? இப்படி ஒடுகிறதே! எலியைப் பயமுறுத்திய பூனை தான் பெரிய கடவுள்!" என்று, பூனைக்குப் பூஜை செய்யத் தொடங்கினான். பூனை பூஜை விமரிசையாக நடந்து வந்தது. ஒரு நாள் பக்கத்து வீட்டுப் பையன் தனது நாயைப் பிடித்துக் கொண்டு, பூஜை அறைக்குள் வந்ததும், பூனைச் சாமி ஒரே ஓட்டமாய் ஓடிப் போனார். உடனே பக்த சிகாமணி, ஒரு முடிவுக்கு வந்தான். "பூனையாவது சாமியாவது! நாயாரே நமது தெய்வம்" என்னும் நல்லதொரு முடிவுக்கு வந்தான்.

அன்றைக்கே, நாய் சமையல் அறைப் பக்கம் வந்ததைக் கண்ட, அவனது மனைவி நாயின் முதுகிலே ஒரு போடு போட்டு விரட்டி விட்டாள். இப்போது, நினைத்துப் பார்த்தான் நமது ஆசாமி. நாயையே அடித்து விட்டாளே! எனவே, மனைவிதான் மாபெரும் கடவுள் என்று மதித்து, வழிபாடு செய்ய ஆரம்பித்தான்., இத்தோடு, இந்தக் கதை முடிந்து போயிருந்தால், நன்றாய் இருந்திருக்கும். மனைவியின் மகிமையை அறிந்துக் கொண்டான் ஓர் ஆண் என்ற மகிழ்ச்சியையாவது, நாம் அடைய வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் கதை இத்துடன் முடியவில்லையே!

ஒரு வார காலம் கழித்து, சாப்பாட்டில் உப்பு போதவில்லை என்று மனைவியை அடித்து விட்டான். மறுபடியும் அவனுக்கு ஞானோதயம் பிறந்தது! "நம்மிடம் அடி வாங்குகிறவள், நமக்கு எப்படிக் கடவுளாய் இருக்க முடியும்? என்று நினைத்தான். அவளை அடிக்கும் ஆற்றல், தனக்கு இருப்பதை எண்ணிப் பார்த்த அவன், தானே கடவுள் என்ற முடிவுக்கு வந்தான்.

அந்த அரைகுறை மனிதனைப் போல, தானே தனிப் பெரும் தலைவர், என்ற முடிவுக்கு வந்து விட்ட தலைவர்கள், தமிழகத்தில் உண்டு. தமிழகத்தில் ஒரு தலைவர் இருக்கிறார். அவர் அரசியல் என்றால், தன்னை விட பெரிய அரசியல்தலைவர், வேறு யாரும் இல்லை என்று நினைப்பார். இலக்கியம் என்றால் தன்னை விட பெரிய இலக்கியவாதி வேறு யாரும் இல்லை என்று நினைப்பார். பகுத்தறிவாளர் என்றால், தன்னை விடப் பெரிய பகுத்தறிவாளர் வேறு யாரும் இல்லை என்று நினைப்பார்! – பாவம்! அவரைப் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி, அவர் நினைப்பதே இல்லை!

21 ரூபாய் பேனாவினால், இந்த ஆட்சிக்கு ஒரு முடிவுரை எழுத முடியும், என்று கொக்கரிக்கிறார்.

தன்னைச் சுற்றி இருப்பவர்களைப் பார்த்து விட்டு, "தானே உலக மகா அறிவாளி'' என்ற நினைப்பில் இருக்கிறார் அவர்!

அவர் எத்தனை பக்கங்கள், என்னை எதிர்த்து எழுதுகிறாரோ – அந்த அளவு பக்கங்களில், எனது அரசின் சாதனை சரித்திரம் காலத்தால் எழுதப்படும் – உங்கள் துணையோடு!

உங்கள் அன்பும் ஆதரவும் இருக்கும் வரை, எந்த தீய சக்தியும், என்னை ஒன்றும் செய்து விட முடியாது. என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த அன்பையும், இந்த ஆதரவையும் என்றும் உங்கள் அன்புச் சகோதரிக்கும் ,தொடர்ந்து வழங்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை, இன்றைய தினம், நானே பயனாளிகள் அனைவருக்கும் என் கையாலேயே வழங்க வேண்டும் என்று விரும்பினாலும், நேரம் குறைவாகவே இருப்பதனால், 15 பேருக்கு மட்டும் இந்த உதவிகளை, நானே மேடையில் வழங்க இருக்கிறேன். மற்ற அனைத்து பயனாளிகளுக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும், இங்கேயே இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாள் பேசிய சட்ட மன்ற உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு அவர்கள் தேயிலை விவசாயிகளுக்கு

சலுகை வழங்க வேண்டும் என்றும் Green Leaf Teaக்கான ஒரு Subsidy யை – மானியத்தை மேற்கு வங்காள அரசு வழங்கி வருகிறது என்றும், அதைப் போல தமிழக அரசும் வழங்க வேண்டும் என்று இங்கே ஒரு கோரிக்கை வைத்தார். இங்கே வருவதற்கு முன்பாகவே இந்த கோரிக்கை எனக்கு தெரிவிக்கப்பட்டது. நானும் விசாரித்தேன். தமிழக அரசு அதிகாரிகள் மேற்கு வங்க அரசிடம் விசாரித்தார்கள். அப்படி எந்த ஒரு மானியமும் மேற்கு வங்க அரசால் வழங்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்றஉறுப்பினர் அவர்கள் உங்கள் மீது அக்கறை உள்ளவர். அதனால் அவர் ஆரம்பத்தில் பேசிய போது 25 நிமிடங்கள் பேசினார். பல கோரிக்கைகளை இங்கே பெரிய பட்டியல் போட்டுத் தெரிவித்தார். சட்டமன்றத்தில் பேசுவதாகவே நினைத்துக் கொண்டு சட்டமன்ற உறுப்பினர் எச்.எம். ராஜு அவர்கள் இங்கே நீண்ட நேரம் பல கோரிக்கைகளை எடுத்துரைத்து பேசினார். இவற்றை எல்லாம் அவர் எழுதிய ஒரு கடிதமாகவே என்னிடத்தில் கொடுத்திருக்கலாம். எல்லாம் ஏற்கெனவே எனக்குத் தெரிந்த கோரிக்கைகள்தான். நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினருக்கு மட்டும் உங்கள் மீது அக்கறை இல்லை, எனக்கும், இந்த அரசுக்கும் அக்கறை உள்ளதால் தான் இன்றைக்கு இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

77.5 கோடி ரூபாய் மதிப்பிலான உதவிகளும், திட்டங்களும் இன்று இந்த மாவட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த மாவட்ட மக்களின் குறைகளை எல்லாம் நான் அறிவேன், தேவைகளை எல்லாம் நான் அறிவேன். ஒன்றன்பின் ஒன்றாக இந்த அரசால் முடிந்ததை செய்து வருகிறேன். எல்லாவற்றையும் ஒரே நாளில் செய்து விட முடியாது. கடந்த இரண்டு ஆண்டுகளில் எவ்வளவு செய்து இருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்."ஊட்டி டீ" தயாரித்து இன்றைக்கு விற்பனை செய்து கொண்டிருக்கிறோமே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்தா இதை நான் செய்து இருக்கிறேன் ? இன்றைக்கு மின்னணு ஏல மையம் • தொடங்கப்படுகிறதே ? மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்தா இன்றைக்கு இது செய்யப்பட்டிருக்கிறது. ? ஆகவே எனக்கும் இந்த அரசுக்கும் இந்த மாவட்ட மக்கள் மீது எப்போதும் அன்பு உண்டு, அக்கறை உண்டு. வேறு எந்த அரசும், வேறு எந்த முதலமைச்சரும் இதுவரை செய்யாத பல உதவிகளை இந்த மாவட்ட மக்களுக்கு செய்து வருகிறோம். இது வரை எந்த அரசும் வரலாற்றிலேயே நீலகிரி மாவட்டத்திற்கு செய்யாத பல திட்டங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அன்புச் சகோதரி வளர்மதி அவர்கள் பேசுகின்ற போது, இந்த கௌரவ டாக்டர் பட்டத்தைப் பற்றி இங்கே பேசினார். எனக்கு ஐந்தாவது கௌரவ டாக்டர் பட்டம் கொடுக்கப்பட்டதால், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி இனிமேல் தன் பெயருக்கு முன்னால் டாக்டர் பட்டம் பயன்படுத்தக்கூடாது, பயன்படுத்தப் போவதில்லை என்று சொன்னதாக இங்கே குறிப்பிட்டார். பாவம், அவருக்கு ஒன்று தெரியவில்லை. முன்னாள் முதலமைச்சருக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கௌரவ டாக்டர் பட்டம் என்பதே பயன்படுத்தக் கூடாத ஒன்று. கௌரவ டாக்டர் பட்டத்தின் தன்மையே என்ன என்றால் அது வெறும் கௌரவத்திற்காக அளிக்கப்படுகின்ற ஒன்று. கௌரவ டாக்டர் பட்டம் பெற்றவர்கள் தன் பெயருக்கு முன்னால் டாக்டர் என்று போட்டுக் கொள்ளக் கூடாது. ஆனால், அவரோ முதலமைச்சராக இருக்கின்ற போதே, அதிகாரப் பூர்வமாகவே அந்தக் குறிப்புகளில், அரசு அழைப்பிதழ்களில், எல்லா நிகழ்ச்சிகளிலும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி என்று தான் போடச் சொல்வார். ஆனால், நானோ கௌரவ டாக்டர் பட்டத்தின் தன்மையை புரிந்துக் கொண்டு எப்போதுமே என் பெயரை அரசு அழைப்பிதழ்களில் அச்சடிக்கும்போது, எந்தக் குறிப்பானாலும், வெறும் செல்வி ஜெயலலிதா என்று தான் போடச் சொல்கிறேன். இந்த விழாவிற்கான அழைப்பிதழையும் எடுத்துப் பாருங்கள். என் பெயர் முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா என்று தான் இருக்கும். ஆகவே இன்றை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அவருக்கு ஒரு பாடத்தைக் கற்பித்தார். முது என்றால் என்ன பொருள் என்று அவருக்கு சொல்லிக் கொடுத்தார். அதைப் போலவே இன்றைக்கு நான் அவரை விட வயதில் குறைந்தவளாக இருந்தாலும், கௌரவ டாக்டர் பட்டத்தை பயன்படுத்தக்கூடாது என்பதை அவருக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.'

இந்த விழாவைச் சீரும், சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திட , பணியாற்றிய நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. செல்லமுத்து அவர்களுக்கும் அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுக்களை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!
என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி. வணக்கம். •



*17–09–2003 அன்று*
*தந்தை பெரியார் அவர்களின் 125ஆவது பிறந்த நாளையொட்டி,*
*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை அண்ணா மேம்பாலம் அருகிலுள்ள*
*தந்தை பெரியாரின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.*



*15–09–2003 அன்று*
*பேரறிஞர் அண்ணா அவர்களின் 95ஆவது பிறந்த நாளையொட்டி,*
*சென்னையில் உள்ள அண்ணா திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்*
*மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்*
*மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.*

# தந்தை பெரியாரைப் பற்றி



# தமிழகப் பெருமக்கள்

"சீரார் ஈ.வெ.ரா. அவர்களுக்கும் எனக்கும் உள்ள அக நகும் நட்பு யார் என்ன சொன்ன போதிலும் என்றும் குறையாது''

**- இராஜாஜி**

"...இவர் இயற்கைப் பெரியார், நான் என் வாழ்நாளில், இதுகாறும் செய்த ஆராய்ச்சிகளுள் அகப்படாத பல பெரியார் கருத்துக்களும், அரிய யோசனைகளும் இப்பெரியாரின் இயற்கையறிவில் உதித்திடக் காண்கிறேன்''.

**- திரு.வி.க.**

"எங்கெங்கே தமிழ் உணர்ச்சி தவழ்கின்றதோ, எங்கெங்கே சமுதாய சீர்திருத்தம் பேசப்படுகின்றதோ, எந்தெந்த இடத்தில் புரட்சி வாடை வீசுகின்றதோ அங்கங்கெல்லாம் ஈ.வெ.ரா.வின் பெயர் ஒளிவீசித் திகழ்கின்றது''.

**- சர்.ஏ.இராமசாமி முதலியார்**

"திரு. நாயக்கரிடத்திலுள்ள விசேஷ குணம் என்னவென்றால், மனத்திற்படும் உண்மையை ஒளிக்காமல் சொல்லும் ஓர் உத்தம குணந்தான். நாயக்கரவர்கள் தமிழ்நாட்டின் எல்லாத் தலைவர்களையும்விடப் பெரிய தியாகி என்றுதான் சொல்லவேண்டும்''.

**- வ.உ.சிதம்பரனார்**



*"தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு பலரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அனுபவச் சுரங்கம். இறக்கும்வரை சமூக மேம்பாட்டிற்காக உழைத்த ஒரு பெரிய தலைவர் நம்மிடம் உண்டென்றால் அது தந்தை பெரியார் தான்.*

*பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசி அதற்காக உழைத்த உலகத் தலைவர்களின் வரிசையில் தந்தை பெரியார் அவர்களுக்கு முதலிடம் என்றைக்குமே உண்டு என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.*

*நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகிற மற்றொரு செய்தி, பெரியார் என்கிற சிறப்புப் பட்டம் 1938இல் சென்னையில் நடத்தப்பட்ட தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்தான் அவருக்கு வழங்கப்பட்டது.*

*ஒரு பெரியாரைக் கண்டுபிடிப்பதில் ஆண்களைவிடப் பெண்களுக்கு எப்படிப்பட்ட தொலைநோக்கு எண்ணம் இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது இன்றும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது. அதுவும் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கிற சாதுரியம், வேறு எந்த மாநிலப் பெண்களுக்கும் இல்லை என்றே கூற வேண்டும்.*

– மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா

"பெரியார் இராமசாமி அவர்கள், திராவிடருக்குப் பொதுவாயும், தமிழருக்குச் சிறப்பாயும், உரிமையும் பெருமையும் உண்டு பண்ண உழைக்கும் பெருந்தலைவர். எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணிய முயற்சியுடையார்.

**- நாவலர் சோமசுந்தர பாரதியார்**

அவர் இயற்கையின் புதல்வர்! மண்ணை மணந்த மணாளர்! மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு, நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகமில்லை''

**- எழுத்தாளர் வ.ரா.**

"ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி, ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும் எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு, இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை''

**- பேரறிஞர் அண்ணா**

'பெரியார்' ஒரு தனி மனிதரின் பெயரல்ல. ஒரு நாட்டின் நூற்றாண்டு வரலாறு. மனித சமுதாயத்தின் ஒரு மகத்தான தத்துவம்.

**- புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.**



# பெருந்தகையாளர்கள் போற்றிய பேரறிஞர் அண்ணா

''அண்ணா அவர்கள் நமது நாட்டுக்கு ஒரு நிதி என்றுதான் சொல்லவேண்டும். பகுத்தறிவுக் கொள்கைப்படி, துணிந்து, இமயமலை அளவு எதிர்ப்பு இருந்தாலும் கவலையேதும் கொள்ளமாட்டார்''.

☐ **தந்தை பெரியார்**

''திருவாளர் சி.என்.அண்ணாதுரை ஆங்கிலத்தில் பண்டிதர். தமிழினிலோ அமிழ்துமிழும் சொல் வளமும் உணர்வெழுப்பும் தமிழ் இளைஞர், 'புத்துலகு' விரைந்து தொழில் கேட்க நிரந்தினிது சொல்லுதல் வல்ல நாவலர்''.

☐ **நாவலர் ச.சோமசுந்தர பாரதியார்**

''உருவத்தில் தமிழன்; உயர் குணத்தில் தமிழன்; அன்பு என்னும் பண்பில் தமிழன்; அடக்கத்தில் தமிழன்; ஆண்மையில் தமிழன் நமது அண்ணா''.

☐ **கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்**

''தோழர் அண்ணாதுரை கடல் போன்ற பெருங்கூட்டங்களில் பேசும் சொற்கொண்டல். அவருடைய சொற்கள் அறிவாற்றல் வாய்ந்த சொற்கள்; அவருடைய சொற்பொழிவு கற்றோருக்கு அறிவு விருந்து ஆகின்றது. கல்லாதவருக்கும் பகுத்தறிவுத் தூண்டுகோல் ஆகின்றது; கருத்து வேறுபாடு உடையவர்களுக்கும் ஆராய்ச்சிச் சுடர்விளக்கு ஆகின்றது''.

☐ **டாக்டர் மு.வரதராசன்**

''அரசியலில் கருத்து மாறுபட்டவர்களை அவர் வாழ்த்திய துணிவும், கட்சித் தொண்டர்களிடம் குடும்பப் பாசத்தைப் புகுத்திய திறனும், எழுத்தாற்றலில் பொருள் பொதிந்த அடுக்கு மொழிகளை அறிமுகப்படுத்திய விதமும், கலைத்துறையை முழுமையாக அரசியலுக்குப் பயன்படுத்தி வெற்றிகண்ட தன்மையும் அண்ணா ஒருவருக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்ற அவரது முழக்கம் என்றென்றும் அவர் வழி நடப்போர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

அண்ணாவின் பெருந்தன்மை அகில உலகப் பெயர் பெற்றது. அண்ணாவின் சகிப்புத் தன்மை இமாலயப் பெருமை கொண்டது. உறுதியான கொள்கைப் பிடிப்புள்ள வலுவான தொண்டர்களின் தலைவரான அண்ணா வன்முறை நாடாத வரலாற்று நாயகர்.

– மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா**

''மாணவர்கள், இளைஞர்களிடையில் அண்ணாதுரைக்கு செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல்வன்மையும் எழுத்து வன்மையும் இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே. இதற்குக் காரணம் அண்ணாதுரையின் பேச்சிலும் எழுத்திலும் புத்துணர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது. அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்கள் சூழ்ந்தனர்.

☐ **ப.ஜீவானந்தம்**

''குழந்தைக்குத் தேவையான உணவைத் தாய் அளிப்பதுபோல, மாணவனுக்குத் தேவையான கல்வியை ஆசிரியர் அளிப்பது போல, இல்லாதவர்களுக்குத் தேவையானதை இருப்பவர்கள் அளிக்க முன்வர வேண்டும் என்பதே அமரர் அண்ணா அவர்களின் அன்புத் தத்துவம்.

அண்ணா அவர்களிடம் சிந்தனை ஆற்றல் மட்டுமல்ல; அதன்படி செயலாற்றும் ஆற்றலும் நிறைந்திருந்தது. அதற்கு அவருடைய சொல்லாற்றல் பேருதவி செய்தது''.

☐ **புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.**

✧ ✧ ✧




# அறிவியல் தமிழின் வளர்ச்சியாக கணித் தமிழும், இணையத் தமிழும் மலர்ந்துள்ளன

– மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

தமிழகத்தின் தலைநகராம் சென்னையில், உலகம் எங்கிலும் உள்ள கணித் தமிழ் வல்லுநர்களை ஒருங்கிணைத்து நடத்தப்படும் "தமிழ் இணையம் 2003" என்னும் இந்த உலகத் தமிழ் இணைய மாநாட்டை தொடங்கி வைத்து, மாநாட்டு விழா மலரை வெளியிடுகின்ற இனிய வாய்ப்பை எனக்கு வழங்கியமைக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்மை வளர்க்கும் தமிழுக்கு நாம் வளம் சேர்க்கின்ற திருநாள் இது!

"தொண்டு செய்வாய் தமிழுக்குத்
துறை தோறும் துறைதோறும்துடித் தெழுந்தே"

– என்னும் பாவேந்தர் பாரதிதாசனின் பைந்தமிழ்க் கட்டளையை நாம் செயல் படுத்துகின்ற நன்னாள் இது!

உலக மொழிகளில் மிகத் தொன்மையானதும், இலக்கியச் செறிவும், இலக்கணத் திறனும் பெற்றுள்ளதுமான மொழி, தமிழ் மொழியாகும். அதனால்தான் அருள் வள்ளலாகிய வள்ளலார் "இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழி" என்று தமிழுக்கு இலக்கணம் தந்தார்.

தமிழ் ஓர் உயிர்த் துடிப்புள்ள மொழி!
படைப்பாற்றல் உள்ள ஒரு மொழி!

எனவேதான் இன்று வழக்கொழிந்து போன, பல பழைய உலக மொழிகள் போலன்றி, தமிழ், எளிமை, இனிமை, தொன்மை, தெய்வத்தன்மை என்னும் பல பண்புகளை முழுமையாகப் பெற்று பழமைச் சிறப்போடு விளங்குவதைப் போலவே இளமைத் துடிப்போடும் விளங்குவதைப் பார்த்து, உலகம் வியக்கின்றது.

இப்படி யாருக்கும் கிடைக்காத கிடைக்க முடியாத ஒரு மாபெரும் களஞ்சியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. அந்தக் களஞ்சியத்தைப் போற்றிப் பாதுகாப்பதில் நமது பங்கு தான் என்ன? நமது முன்னோர்கள், சங்கங்கள் அமைத்துத் தமிழை வளர்த்தார்கள். ஆனால் நாம் செய்ய வேண்டியது



என்ன ? காலந்தோறும் வளர்ந்து வரும் புதிய புதிய அறிவியல் வளர்ச்சியை நமது தமிழ் காண வேண்டியது காலத்தின் கட்டாயம் அல்லவா ?

இது தொடர்பாக 1995–ஆம் ஆண்டு, தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் "இந்த நூற்றாண்டின் அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் தமிழுக்குக் கொண்டு வரவேண்டும்" என்றும்; "இனி வரும் நூற்றாண்டுகளுக்குத் தமிழை ஆயத்தப்படுத்த வேண்டும்" என்றும் "இந்த இரண்டு கடமைகளையும் விரைந்து நிறைவேற்றச் சிறந்த வழி, இயல், இசை, நாடகத் தமிழுடன் நான்காவது தமிழாக "அறிவியல் தமிழை" உருவாக்க வேண்டும்" என்றும் அன்றே குறிப்பிட்டேன். அது இன்று உண்மையாக மலர்ந்து வருவதைக் காணும்போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சியாக "கணினி யுகம்" மலர்ந்துள்ளது. கணினி மற்றும் இணையத்தின் வளர்ச்சி மனிதனின் அறிவியல் படைப்புகளின் முகடாக விளங்குகிறது. உங்கள் அன்புச் சகோதரியாகிய எனது எண்ணம் நிறைவேறுகின்ற வகையில், இன்று அறிவியல் தமிழின் வளர்ச்சியாக கணித் தமிழும், இணையத் தமிழும் மலர்ந்துள்ளன.

தமிழக அரசு கணினி மற்றும் இணையத் தொழிலியத்தை உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் தமிழகம் முதல் நிலையில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டு வருகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

- தமிழ்நாட்டைத் தகவல் தொழில்நுட்ப முதலீட்டிற்கு, ஏதுவான ஒரு மாநிலமாக உருவாக்குதல்.

- அரசு அலுவலகங்களில் மின் ஆளுமை E-Governance மற்றும் தகவல் தொழில் நுட்பப் பயன்பாடுகளின் மூலம், நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

- ஊரக மக்களுக்குக் கணிப்பொறியின் பயன்பாட்டினை அளித்து ஊரகப் பகுதிகளுக்கும் நகரப் பகுதிகளுக்கும் இடையே உள்ள தகவல் தொழில்நுட்ப அறிவின் இடைவெளியைக் Digital Divide–ஐ குறைத்தல்.

- தகவல் தொழில்நுட்ப ஆய்வு மற்றும் வளர்ச்சிக்கான செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துதல்.

● தகவல் தொழில்நுட்பத் துறைகளில் தமிழ் மொழியின் பயன்பாட்டை ஊக்குவித்தல்

போன்ற நோக்கங்களைக் கொண்ட, "தகவல் தொழில்நுட்பக் கொள்கை, 2002–ஐ" நான் அறிவித்துள்ளேன். இந்த நோக்கங்களை நிறைவேற்றத் தமிழ் மென்பொருளின் வளர்ச்சியும் இணையத்தில் தமிழ் மொழியின் பயன்பாடும் இன்றியமையா தனவாகும். இந்த நோக்கங்களைச் செயல்படுத்த வேண்டிய திட்டங்களை எனது அரசு அறிவித்துள்ளது.

வெவ்வேறு பயன்பாட்டிற்கான தமிழ் மென்பொருள் வளர்ச்சிப் பணியைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மிகுந்த ஊக்கத்துடன், ஒருங்கிணைத்து வருகின்றது. 2002–ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழ் OCR, (Tamil Optical Character Reader) என்னும் மென்பொருளை வெளியிட்டேன்.

ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கவல்ல, "தமிழ்ப் பொறி" என்னும் மென்பொருளை 20.8.2003 அன்று நான்



வெளியிட்டேன். உலகம் தழுவி வாழும் தமிழ் மக்கள் தமிழ் மொழியை அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை பயிலவும் தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி அறிந்து கொள்ளவும் வேண்டிய வாய்ப்புக்களை இணையம் வழியாக வழங்கும் நோக்கத்துடன் செயல்படத் தமிழ் இணையப் பல்கலைகழகத்திற்கு அரசு பெரும் ஊக்கத்தையும் ஆக்கத்தையும் அளித்து வருகின்றது. 2002–ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் மற்றும் பட்டக் கல்வித் திட்டங்களை தொடங்கி வைத்தேன். இப்போது நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 2,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் சேர்ந்து பயின்று வருகின்றார்கள் என்ற செய்தி எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது. இந்த ஆண்டு முதுநிலை தமிழியல் என்ற பட்டப்படிப்பு அறிமுகப்படுத்தும் நிலையில் உள்ளது. மேலும், இந்த ஆண்டு பயணியர்களுக்குத் தேவையான "பயணியர் தமிழ்"

அரசுத் துறைகளின் இணையத் தளத் தரவுகள் Web-site Content ஊரக மக்களைப் போய் சேருகின்ற வகையில் தமிழ் இணையப் பல்கலைக் கழகமும் ELCOT நிறுவனமும் சேர்ந்து அரசுத் துறைகளின் இணையத் தளங்களைத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழித் தளங்களாக மாற்றி அமைத்து வருகின்றன.

பட்டா, பிறப்பு, இறப்பு போன்ற சான்றிதழ்களைப் பெற தமிழிலே விண்ணப்பங்கள் அளித்து தமிழிலே விவரங்களைப் பெறும் வகையில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களும் கணினிமயமாக்கப் பட்டுள்ளன.

தொடுத் திரைக் கணினி நிறுவப்பட்டுள்ள 30 வட்டாட்சியர் அலுவலகங்களில் அரசின் திட்டங்களைப் பற்றி கிராம மக்களும் அறிந்து கொள்ள ஏதுவாக விவரங்கள் தமிழிலேயே தரப்பட்டுள்ளன.

Tourist Tamil பாடங்களை இணையத்தில் வழங்குவதற்கான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



தமிழ் இணையப் பல்கலைக் கழகம், மிகப் பெரிய தமிழ் மின் நூலகத்தை உருவமைத்து வருகின்றது. தொல்காப்பியம் தொடங்கி இக்கால இலக்கியம் வரை 90,000 பக்கங்களுக்கும் மேற்பட்ட தமிழ் இலக்கியங்கள் உரைகளுடன் அதில் இடப்பட்டுள்ளன. 125 கோவில்களின் ஒளிப்படக் காட்சிகளும் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட கலைச் சொற்களும் தளத்தில் இடப்பட்டுள்ளன.

கணித் தமிழ் மற்றும் இணையத் தமிழ் வளர்ச்சியில் உலகின் பல நாடுகளில் உள்ள அறிவியல் மற்றும் பொறியியல் வல்லுநர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள் என்ற செய்தி மகிழ்ச்சி அளிக்கின்றது. உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்) மற்றும் கணித் தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்புகள், தமிழ்த் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு வருகின்றன என்று அறிகின்றேன். இப்படி உலகம் எங்கும் பரவி உள்ள கணித் தமிழ் வல்லுநர்களை ஒருங்கிணைத்து, இந்த "தமிழ் இணையம் 2003" என்ற மாநாடு தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மூலம் சென்னையில் நடத்தப்படும் என்று தமிழக அரசின், தகவல் தொழில் நுட்பத் துறையின் அறிவிப்புகளில் ஒன்றாக சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கேற்ப இந்த மாநாடு இன்று முதல் மூன்று நாட்கள் சென்னையில் நிகழ உள்ளது.

இந்த மாநாட்டினை, தகவல் தொழில்நுட்பத் துறை, அண்ணா பல்கலைக்கழகத்துடனும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்துடனும் இணைந்து நடத்துகிறது. இதற்காக தமிழ்நாடு அரசு, 20 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாட்டில் தமிழ்க் கல்விக்குத் தகவல் தொழில்நுட்பம் என்ற கருப்பொருளில் கருத்தரங்கும் கண்காட்சியும் இடம் பெறுகின்றன. பள்ளி, கல்லூரி மாணவர்கள், கணித் தமிழ் மற்றும் இணையத் தமிழ் வளர்ச்சிப் பற்றி அறியவும் அவற்றின் வளர்ச்சியில் அவர்கள் ஆர்வத்தை வளர்க்கவும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என அறிகிறேன்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள அறிஞர்கள் பலர் உலகின் பல நாடுகளில் இருந்து வருகை தந்துள்ளீர்கள். உங்களை எல்லாம் தமிழக அரசு சார்பில் அன்புடன் வரவேற்பதுடன் நான் முன்பே குறிப்பிட்ட தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பக் கோட்பாடுகளைத் திறம்படச் செயல்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளையும் இந்த மாநட்டின் கருத்தரங்கில் ஆய்வு செய்து உங்கள் பரிந்துரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"அண்ணா பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம்" என்று திரும்பத் திரும்ப சொல்லும்போது ஆம், அண்ணா பல்கலைக் கழகம்தானே! – அண்ணாவே பல்கலைக் கழகம் தானே! என்று அர்த்தப்படுவதாகவே எனக்குத் தோன்றுகிறது.

அண்ணா ஒரு பல்கலைக்கழகம்! அண்ணா என்னும் அந்தப் பல்கலைக்கழகத்தின் உயிர்த் துடிப்புள்ள விரிவாக்கம் தான் எனது இயக்கம்! அவருடைய தமிழ்க் கனவுகளை நனவாக்குவதே எனது அரசின் குறிக்கோள்! லட்சியம்! இது தான் எனது முழக்கம்!

தமிழ்நாட்டில் எந்த ஒரு குழந்தையும் தமிழ் மொழியைக் கற்காமல் பள்ளியை விட்டு வெளியேறக் கூடாது என்னும் லட்சியத்தோடு மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளின் பாடத் திட்டங்களிலும் தமிழ் மொழி ஒரு பாடமாக கற்பிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் 2003–2004 ஆம் கல்வி ஆண்டு முதல் அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி முதல் 12–ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியர்கள் அனைவருக்கும் அறிவியல் தமிழ் Scientific Tamil என்னும் பாடத்தைக் கற்பிக்க நான்

ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆட்சி மொழித் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த, உறுதி பூண்டுள்ள எனது அரசு, மைய அரசின் ஆட்சி மொழிகளுள் தமிழ் மொழியையும் ஒன்றாக அறிவிக்கவும்; தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்கவும் வேண்டுமென்று மைய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.



இந்தியத் தலைநகராம் டில்லியில் உள்ள புகழ்மிக்க ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காகத் தமிழிருக்கை நிறுவப்படுவதன் இன்றியமையாமையும் தேவையையும் கருத்தில் கொண்டு 50 இலட்சம் ரூபாய் ஒட்டு மொத்த நல்கைத் தொகையாக ஒரே தவணையில் One Time Lumpsum Grant ஆக எனது அரசு வழங்கியுள்ளது என்பதையும் இந்த இனிய வேளையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேடையிலே, தமிழ், தமிழ் என்று அரசியலுக்காக வெற்று முழக்கம் செய்துவிட்டு ஆக்கப்பூர்வமாக எதுவும் செய்யாதவர்களால் தமிழ் வளருமா?

தமிழ்ப்பணி என்கின்ற போர்வையில் தங்கள் குடும்ப வளர்ச்சிக்குப் பணம் தேடிக் கொண்டிருக்கின்றவர்களைப் பார்க்கிறோம்.

கேட்டால் இலக்கியப் பணி என்கிறார்கள்! எது இலக்கியம்!

வெள்ளைத்தாளை, பேனா மையால் கருப்பாக்கி விட்டால், அது இலக்கியம் ஆகி விடுமா? ஆகும் என்று சாதிக்கிறவர்கள் தமிழகத்திலே உண்டு! – அவர்கள் போகும் வழி எல்லாம் புத்தக வியாபாரம்தான்!

அவர்களைப் பொறுத்தவரை தமிழ்த் தொண்டு என்பது கருப்புப் பணத்தை வெள்ளையாக்கிக் கொள்வதற்காக வெள்ளைத் தாளைக் கருப்பாக்கிக் கொண்டிருக்கும் வியாபார ஏற்பாடு!

எது தமிழ்ப் பணி? இங்கே இன்று நடைபெறுகிறதே இந்த மாநாடு – இது தமிழ்ப் பணி! நீங்கள் ஆற்றிக் கொண்டிருப்பது தமிழ்ப் பணி!

இந்தத் தமிழ்ப் பணியை நான் போற்றுகிறேன்!

இந்த மாநாடு அறிவியல் தமிழ், கணித் தமிழ் மற்றும் இணையத் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு விருந்தாக அமைய வேண்டும். முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும், ஈடுகொடுக்கும் வண்ணம் நம் தமிழ் மொழி வளர இம்மாநாடு வழி தேட வேண்டும். காலத்தின் தேவைக்கேற்ப தமிழின் தனித் தன்மை சிதைய விடாமல் தமிழை வளர்க்க வேண்டும் என்பது என் பேரவா. எனது இந்த அவா தொடர்ந்து நிறைவேற இம்மாநாடு திட்டப் பணிகளைத் தீட்ட வேண்டும்.

தமிழ், தமிழருக்கு மட்டும் உரிய மொழி அன்று. இத்தரணிக்கே உரிய மொழி! தமிழ் உள்ளூர் மொழியன்று; உலக மொழி! அத்தகைய உலக மொழியை "வானம் அளந்ததனைத்தும் அளந்திடும்" வளர் மொழியாக்க உறுதி கொள்வோம் என்று கூறி இம்மாநாடு சிறப்புற நடைபெற வாழ்த்தி இந்தத் தமிழ் இணைய மாநாட்டினைத் தொடங்கி வைப்பதில் பெருமை கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்துகின்ற, தகவல் தொழில்நுட்பத் துறையையும், உங்கள் அனைவரையும், நான் மனமாரப் பாராட்டுகிறேன்; உளமார வாழ்த்துகிறேன்.

வாழ்க நற்றமிழ்!
வளர்க இணையத் தமிழ்!!
அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி, உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

– 22.8.2003 சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் இணைய மாநாடு 2003–இல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.



# மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த நடமாடும் காவல் நிலையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 22.8.2003 அன்று சென்னை இராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காவல் துறையின் நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்களின் பயன்பாட்டிற்காக ரூபாய் 5.33 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான, 80 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்களை (Highway Patrol Vehicles) வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து சென்னை மாநகரில் செயல்படவுள்ள புதிய நடமாடும் காவல் நிலையத்தை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 15.8.2003 அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவின்போது ஆற்றிய உரையில், தேசிய நெடுஞ்சாலைகளிலும், பிற நெடுஞ் சாலைகளிலும் விபத்து நிவாரணம் உடனடியாக தேவைப்படுவதால், நெடுஞ்சாலைகளில் அடிக்கடி விபத்துக்கு இலக்காகும் 80 பகுதிகள் கண்டறியப்பட்டு, 24 மணி நேரமும் அவற்றை சுழற்சி முறையில் கண்காணிக்க 160 நெடுஞ்சாலை ரோந்துப் பணிக்குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்து, Highway Patrolling என்னும் சீரிய பணியை அவ்விழாவில் தொடங்கி வைத்தார்கள். மேலும் இந்த ரோந்து குழுக்களின் பயன்பாட்டிற்கு 80 ரோந்து வாகனங்கள் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அப்போது அறிவித்தார்கள்.

நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களின் போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு, உடனடியாக மருத்துவ வசதி அளித்து, அவர்களின் உயிர்




காப்பதற்கு இந்த நெடுஞ்சாலை ரோந்துப் பணிக்குழுக்கள் பேருதவியாக இருக்கும். நெடுஞ்சாலை ரோந்துப் பணிக் குழுக்களின் இந்த பயன்பாட்டிற்கென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழங்கப் பட்டுள்ள ரோந்து வாகனங்களில், வாகனங்களின் வேகத்தைக் கண்டறியக்கூடிய ரேடார் கருவி, (Radar Gun) வயர்லஸ் கருவி, வீடியோ கேமரா, மொபைல் போன், வாகன ஓட்டுநர்கள் மது அருந்தியுள்ளதைக் கண்டறியும் கருவி, தீயணைப்புக் கருவி, முதலுதவிப் பெட்டி ஆகிய சிறப்புச் சாதனங்கள் இடம் பெற்றுள்ளன.

இதனைத் தொடர்ந்து பொது மக்களை நாடிச் சென்று உதவிடும் வகையில், நடமாடும் காவல் நிலையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தொடங்கி வைத்தார்கள். சென்னை மாநகரில், அண்ணா நகர் காவல் மாவட்டத்தில், சோதனை அடிப்படையில் இந்த நடமாடும் காவல் நிலையம் செயல்பட உள்ளது. அண்ணாநகர் காவல்துறை துணை ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் இந்த நடமாடும் காவல் நிலையம் இயங்கும்.

காவல் நிலைய எல்லைக் கட்டுப்பாடுகள் இல்லாமல், தங்களது குறைகளைக் காவல்துறை உயர் அலுவலர் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பாக, பொதுமக்கள் தங்கள் புகார் மனுக்களை இந்த நடமாடும் காவல் நிலையத்தில் கொடுக்கலாம். அந்தப் பகுதிகளில் நடமாடும் சமூக விரோதிகள் பற்றியும், பிரச்சினைக்குரிய பகுதிகள் குறித்தும், பொது மக்களிடமிருந்து முக்கியத் தகவல்களை நடமாடும் காவல்நிலையம் பெறும். மேலும், போதை மருந்து, சாராயம், வரதட்சணைக் கொடுமை போன்ற சமூகக் கேடுகள் குறித்தும், குற்றங்கள் நிகழாது இருக்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள், சட்ட உதவி மையங்கள் போன்றவை குறித்த தகவல்களையும் பொது மக்களுக்கு அளிக்கின்ற வகையில் நடமாடும் காவல் நிலையம் செயல்படும்.

இந்த நிகழ்ச்சியின் போது உள்துறைச் செயலாளர் திரு. சையத் முனிர் ஹோடா இ.ஆ.ப., காவல் துறைத் தலைமை இயக்குநர் திரு. ஐ.கே. கோவிந்த் இ.கா.ப., காவல் துறைக் கூடுதல் இயக்குநர் (தலைமையகம்) திரு. எஸ். ரமணி இ.கா.ப., சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு. கே. விஜயகுமார் இ.கா.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

✶




# காய்கறிக் கழிவினைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் புதிய திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தியாவிலேயே முதன் முதலாக, ரூ. 5 கோடி செலவில் கோயம்பேடு மொத்த வணிக வளாகத்தில் காய்கறிக் கழிவை மூலப் பொருளாக்கி, மின்சார உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு 25.8.2003 அன்று கோயம்பேட்டில் அடிக்கல் நாட்டினார்.

கோயம்பேட்டில் அமைந்துள்ள மொத்த காய்கறி வணிக வளாகத்தில் நாள் ஒன்றுக்கு 50 டன் காய்கறிக் கழிவு வெளியேற்றப்படுகிறது. அதனால் அப்பகுதியின் சுற்றுச்சூழல் வெகுவாக பாதிக்கப்பட்டு, பொது மக்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்களை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அப்பகுதியில் வெளியேற்றப் படும் காய்கறிக் கழிவை மூலப்பொருளாக்கி, வெளிநாட்டில் உள்ளது போல், மின்சார உற்பத்தி செய்வதற்கான திட்டத்தினைச் செயல்படுத்துமாறு ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த ஆணையை ஏற்று, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், காய்கறிக் கழிவை மூலப்பொருளாக்கி, ஆஸ்திரியா (Austria) நாட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மீதேன் (Methane) என்ற வாயுவை உற்பத்தி செய்து அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தினைச் செயல்படுத்த உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 500 யூனிட், அதாவது ஆண்டிற்கு 17.5 இலட்சம் யூனிட் மின்சாரம் தயாரிக்கப்படும். மேலும் இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 10 டன் எடையுள்ள இயற்கை உரம் (Bio-Fertilizer) தயாரிக்கப்படும். இத்திட்டம் ஒரு ஆண்டுக்குள் முடிக்கப்பட்டு மின்சார உற்பத்தியைத் துவக்கும்.

இந்தியாவிலேயே முதன் முதலாக காய்கறிக் கழிவை மூலப்பொருளாக்கி, மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தான் அறிமுகப்படுத்தியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் மூலம் கோயம்பேடு மொத்த வணிக வளாகத்தைச் சுற்றியுள்ள பகுதியில் மாசு வெகுவாக கட்டுப்படுத்தப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ள இத்திட்டம், சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாப்பதிலும் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துவதிலும் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற ஒரு சிறந்த முன்னோடித் திட்டமாக விளங்கும்.

இவ்விழாவில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைவருமான திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப., உறுப்பினர் – செயலர் திரு. பி.ஆர். சம்பத் இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர். ✧

# நல்லது நடக்கும், வெற்றி கிடைக்கும்!

– மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்




புதுக்கோட்டை நகரிலே நடைபெறும், மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டு, உங்களை எல்லாம் கண்டு மகிழவும், 161 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கி, உங்களிடையே ஒரு சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவும், இன்று வாய்ப்பு கிடைத்தது குறித்து, நான் மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

எத்தனை வரலாற்றுச் சிறப்புகளை கொண்டு விளங்குகிறது புதுக்கோட்டை, என்பதை நினைத்துப் பார்க்கின்ற போது, நான் வியப்பு அடைகிறேன். மனித குல வரலாற்றில், பெருங்கற்காலம், **Megalithic Age** என்பது குறிப்பிடத்தக்கது. அந்தப் பெருங்கற்காலம் முதலே, புதுக்கோட்டை மாவட்டத்தில், மனித இனம் வாழ்ந்திருக்கிறது என்பதை, அக்கால நினைவுச் சின்னங்கள், நமக்கு இன்றும் நினைவூட்டுகின்றன.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நினைவுச் சின்னங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில், பல்வேறு இடங்களில் கிடைத்துள்ளன. அது மட்டுமல்லாமல், சங்க காலத்தில், புதுக்கோட்டைப் பகுதி, புகழ்பெற்று விளங்கியதை, தொல்பொருள் சான்றுகளும், இலக்கியச் சான்றுகளும், நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்னும் சங்க காலப் புலவரைப் பற்றித் தமிழ் அறிஞர்கள் அறிவார்கள். ஒல்லையூர் என்பது, அவர் பிறந்த ஊர். அந்த ஊர், திருமயம் வட்டத்தில், ஒலியமங்கலம் என்னும் பெயரில், இன்றைக்கு விளங்குகிறது. அதைப்போலவே, சங்க காலத்தில், அழும்பில் என அழைக்கப்பட்ட ஊர் தான், கந்தர்வகோட்டை வட்டத்தில் உள்ள, அன்புக்கோயில் ஆகும் என அறிகிறோம். சங்ககாலப் புலவர்கள், ஆவூர் மூலங்கிழார், மாடலன் மதுரைக் குமரன் ஆகியோர் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் என்பது நாம் எல்லாம் பெருமைப் படத் தக்க செய்தி ஆகும்.

புதுக்கோட்டைப் பகுதி, கிபி. 9–ஆம் நூற்றாண்டு வரை, பாண்டிய மன்னர்களின் ஆட்சியில் இருந்தது. 10–ஆம் நூற்றாண்டு முதல், 12–ஆம் நூற்றாண்டு வரை, சோழர்கள் ஆட்சியில் இருந்தது. 13, 14–ஆம் நூற்றாண்டுகளில், பிற்கால பாண்டியப் பேரரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. 15–ஆம் நூற்றாண்டு முதல், தஞ்சை மற்றும் மதுரை நாயக்க மன்னர்களின், ஆட்சியின் கீழ் இருந்தது. 18–ஆம் நூற்றாண்டில், இந்தியா முழுவதும், ஆங்கிலேயர் வசத்தில் இருந்த போது, புதுக்கோட்டை சமஸ்தானம் என்ற பெயரில், தொண்டைமான் மன்னர்களின் ஆட்சியில் இருந்தது.

இவ்வாறு, பல்வேறு ஆட்சிக் காலத்தில், பல வகையிலும், வளர்ச்சி பெற்ற புதுக்கோட்டை மாவட்டம், இன்று, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில், வளர்ச்சியின் புதிய பரிமாணங்களைக், கண்டு வருகிறது.

தமிழ்நாட்டிலேயே, மிக அதிகமான பழமைச் சின்னங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளன என்பதையும்; வரலாற்று ஆய்வுக்குப் பயன்படக் கூடிய, சுமார்

1,200 கல்வெட்டுகள், இங்கே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதையும்; வரலாற்று ஆசிரியர்கள் பெருமையோடு குறிப்பிடுகிறார்கள். மேற்குக் கடற்கரைக்கும், கிழக்குக் கடற்கரைக்கும், இடையே நடைபெற்ற, தரை வழி வாணிபம், புதுக்கோட்டைப் பகுதி வழியாகவே தான், நடந்திருக்கிறது. இந்தச் செய்தியை, இங்குக் கிடைத்துள்ள கல்வெட்டுகள், குறிப்பிடுகின்றன. மேலும், குடவரைக் கோயில்கள் என்று அழைக்கப்படும், Rock cut cave temples, புதுக்கோட்டை மாவட்டத்தில் தான், அதிகம் உள்ளன என்பதும், நாம் எண்ணி மகிழத் தக்க செய்தி ஆகும்.

ஆன்மீகத் தலங்களும், வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களும், சுற்றுலாத் தலங்களும் கொண்ட மாவட்டம், இந்தப் புதுக்கோட்டை மாவட்டம். சித்தன்னவாசல் அற்புதங்களாகிய ஓவியங்களை, உலகமே வியந்து பாராட்டுகிறது. 9–ஆம் நூற்றாண்டில், பாண்டிய மன்னர்களால் உருவாக்கப்பட்ட, குகைக் கோயில்களும், ஓவியங்களும், சித்தன்னவாசலில், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற வகையில், இன்றைக்கும் சிறப்புற்று விளங்குகின்றன. தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள, 38 பாரம்பரியம் மிக்க இடங்களில், சித்தன்னவாசலும் ஒன்று என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

அதைப் போலவே, கோயில் சிறப்புக்கும், கோட்டைப் பெருமைக்கும், இருப்பிடமாகத், திருமயம் திகழ்வதையும், குறிப்பிட்டாக வேண்டும். குடுமியான் மலையில், 9–ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட, குகைக் கோயிலில் உள்ள, கல்வெட்டு ஒன்று, கர்நாடக சங்கீத விதிகளை விளக்குகின்ற, அரியதொரு கல்வெட்டாக உள்ளது. பழம் பெருமை வாய்ந்த, நமது இசைக்கு கிடைத்திருக்கின்ற, பழைய சான்றாக, இந்தக் கல்வெட்டு அமைந்திருப்பது, நாம் எல்லாம் பெருமைப்படத் தக்க ஒன்றாகும். அதைப் போலவே, அருணகிரிநாதரால் திருப்புகழில் சிறப்பிக்கப்பட்ட, முருகப் பெருமானின் திருக்கோயிலைக் கொண்ட, விராலிமலை அமைந்திருப்பதும், இந்தப் புதுக்கோட்டை மாவட்டத்தில் தான். நார்த்தா மலையில், கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ள சிவன் கோயில், பழம் பெரும் கோயிலாக, பக்தர்களை ஈர்த்து வருகிறது என்றால்; தற்காலக் கோயிலாக உள்ள, முத்துமாரியம்மன் கோயில், பல்லாயிரக்கணக்கான மக்களை, ஈர்க்கின்ற கோயிலாக, இன்று விளங்குகிறது. இங்கு நடைபெறும் தேர்த் திருவிழாவின் தொடர்ச்சியாக, முஸ்லீம் பெரியவர் ஒருவரின் சமாதியில், சந்தனக் கூடு விழா, நடைபெறுகிறது என்பதை அறிந்து, நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாணிக்கவாசகர் வரலாற்றோடு தொடர்புடைய, திருப்பெருந்துறை என வழங்கப்படும், ஆவுடையார் கோயில், ஆன்மீகத்திற்கு மட்டுமல்லாமல், அழகிய சிற்பங்களுக்கும், அரிய கட்டடக் கலைச் சிறப்புக்கும், புகழ் பெற்று விளங்குகிறது. அதைப் போலவே, கொடும்பாளூர், கண்ணனூர், திருக்களம்பூர், பேரையூர் ஆகிய புதுக்கோட்டை மாவட்ட ஊர்களும், புகழ் மிக்க திருத்தலங்களாகவும், பழம் பெருமை படைத்தனவாகவும் விளங்குவது, புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல், அனைத்து தமிழக மக்களுக்கும், பெருமிதம் அளிக்கிறது என்பதை, மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தின் நிர்வாக வரலாற்றில் கூட, புதுக்கோட்டை, ஒரு வகையில் சிறப்புடையதாக உள்ளது. இங்கிலாந்தில் பிறந்து, புதுக்கோட்டை சமஸ்தானத்தின், நிர்வாக அதிகாரியாக விளங்கிய, Sir Alexander Robert Loftus Tottenham, என்பவரின் சமாதி, புதுக்கோட்டையில் உள்ளது. இந்த Tottenham உருவாக்கிய, District Office Manual, அதாவது, மாவட்ட அலுவலக நடைமுறை, என்னும் நூல் தான், இன்றைக்கும் அரசு அலுவலகங்களில், பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு, பழம்பெருமை படைத்த மாவட்டமாக, விளங்குகின்ற புதுக்கோட்டை மாவட்டத்திற்கு, அறிவார்ந்த திட்டங்களால், புதிய சிறப்புகளை அளிக்க வேண்டும், என்பது தான், உங்கள் அன்புச் சகோதரியாகிய, எனது இலட்சியம். புதிய புதிய திட்டங்களைத் தீட்ட வேண்டும்; அவற்றை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டும்; அவற்றின் முழுப் பலன்களும், மக்களைச் சென்று அடைய வேண்டும் என்பதில் நான் மிகவும் உறுதியாக இருக்கிறேன். ஆனால், ஆக்கபூர்வமாக நான் எதைச் செய்தாலும், அதைக் கண்மூடித் தனமாக எதிர்ப்பதையே, தங்கள் கடமையாகக் கொண்டிருக்கிறார்கள், சில அரசியல் தலைவர்கள்.

தங்களை விட புத்திசாலிகளே இல்லை என்ற நினைப்பில் இருப்பவர்கள், இவர்கள். 1996 முதல் 2001 வரை, தமிழகத்தை ஆண்ட தி.மு.க. அரசு, உருப்படியாக எந்த ஒரு திட்டத்தையும், கொண்டு வந்து செயல்படுத்தவில்லை. அவர்கள் செய்ய முடிந்த ஒன்றே ஒன்று, தமிழகத்தின் நிதி நிலைமையை, அதல பாதாளத்திற்குத் தள்ளியது தான் ! அதை மட்டும், மிகவும் கவனமாகச் செய்து விட்டுப், போயிருக்கிறார்கள்.

ஓர் ஊரில் ஒரு சாமியார் இருந்தார். அவர் ஒரு போலிச் சாமியார். அவருக்கு சீடர்கள் ஏராளம். அந்த சாமியாருக்கு எதுவுமே தெரியாது. அவருக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால், எல்லாம் தெரிந்தவர் போல், தன்னைக் காட்டிக் கொள்வார். ஒரு நாள், அவருடைய சீடர்கள் எல்லாரும், வெளியே சென்று இருந்த போது, அந்தச் சாமியாரைக் காண்பதற்காக, ஒருவர் வந்தார். வந்தவர், தனக்கு இருந்த சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக, சாமியாரிடம் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்.

அவருடைய முதல் கேள்வி, கடவுள் எங்கே இருக்கிறார் ?' என்பதாகும்.

இந்தக் கேள்வியை அவர் கேட்டதும், போலிச் சாமியாருக்கு, என்ன சொல்வது என்றே தெரியவில்லை. சீடர்கள் யாராவது இருக்கிறார்களா, என்று நாலா பக்கமும், சுற்றிச் சுற்றிப் பார்த்தார்.

வந்தவர் இரண்டாவது கேள்வியைக் கேட்டார்.

'தர்மம் என்றால் என்ன ?' இது தான் அவர் கேட்ட இரண்டாவது கேள்வி.



போலிச் சாமியார் என்ன பதில் சொல்வார் ? என்ன பதிலை அவரால் சொல்ல முடியும் ? ஆகவே, மேலே கூரையைப் பார்த்தார், கீழே குனிந்து தரையைப் பார்த்தார்.

உடனே, வந்தவர் மூன்றாவது கேள்வியைக் கேட்டார்.

''மனிதன் செய்ய வேண்டியது என்ன ?''

இது தான் அவர் கேட்ட மூன்றாவது கேள்வி.

போலிச் சாமியாரின் நிலைமை, பரிதாபமாக இருந்தது. அவர், இரண்டு கைகளையும் தூக்கி, உள்ளங் கைகளை விரித்துக் காட்டினார்.

இந்தப் போலிச் சாமியாரை பார்க்க வந்தவர், இந்த மூன்று கேள்விகளையும், கேட்டு முடித்த உடன், வெளியே போய் விட்டார். வெளியே சாமியாரின் சீடர்கள், வந்து கொண்டிருந்தார்கள். தாங்கள் இல்லாத சமயத்தில், சாமியாரைச் சந்தித்து விட்டு, வருபவரைப் பார்த்த சீடர்கள், என்ன நடந்தது, என்பதை அறிய விரும்பினார்கள். சாமியாரைப் பார்க்க வந்தவர் சொன்னாராம்.

"எத்தனை பெரிய ஞானி, உங்கள் குருநாதர் ! என் மனதில் இருந்த சந்தேகங்களை எல்லாம், அவர் தீர்த்து விட்டாரே" என்று புகழ்ந்து கூறி, நடந்ததை விவரிக்கத் தொடங்கினார்.

"நான் 'கடவுள் எங்கே இருக்கிறார்' என்று கேட்டேன். அவர் நாலா புறமும் பார்த்தார். அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா ? மக்கள் எல்லா இடங்களிலும் கடவுளைத் தேடுகிறார்கள். அவர்கள் இன்னும் காணவே இல்லை, என்பது தான் அர்த்தம்!

"நான் 'தர்மம் என்றால் என்ன' ? என்று 2–வது கேள்வி கேட்டேன். அதற்கு அவர் மேலேயும், கீழேயும் பார்த்தார். அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா ? மேல், கீழ் என்று ஒன்றும் இல்லை. எல்லோரையும் சமமாகக் காண்பதே தர்மம், என்பது தான் அர்த்தம்!

"கடைசியாக நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். 'மனிதன் என்ன செய்ய வேண்டும் ?' என்பது தான் அந்தக் கேள்வி. அதற்கு, அவர் இரண்டு கைகளையும் மேலே தூக்கி, கைகளை விரித்துக் காட்டினார். அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா ? மனிதன் தனது கைகளால், மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், என்பது தான் அர்த்தம்!'' – இவ்வாறு, போலிச் சாமியார் செய்த சைகைகளுக்கு எல்லாம், தத்துவ விளக்கங்களை அந்த மனிதர் தந்தார்.

இதைக் கேட்டு மகிழ்ந்த சீடர்கள், குருவிடம் போனார்கள். குரு பயங்கர கோபத்தில் இருந்தார். "அடப் பாவி பயல்களே! என்னை எல்லோரும் விட்டு விட்டுப் போய் விட்டீர்களே! அவன் என்னை, என்ன பாடு படுத்தி விட்டான் தெரியுமா! என்னென்னவோ கேள்விகளை எல்லாம் கேட்டான். அவற்றுக்கு எல்லாம், எவனுக்குப் பதில் தெரியும் ?'' என்று சொன்னாராம்.

இந்தக் கதையில் இருந்து, நாம் என்ன தெரிந்து கொள்கிறோம் ? எதுவும் தெரியாதவர்களைக் கூட, நாம் எல்லாம் தெரிந்தவர்களாக, ஆக்கி விடுகிறோம். அறிவு என்றால், கிலோ என்ன விலை, என்று கேட்கிறவர்களைக் கூட, அறிவின் சிகரங்கள் ஆக, ஆக்கி விடுகிறோம்.

அப்படி அறிவாளிகள் ஆன பேர்வழிகள், நமக்குப் புத்தி சொல்ல வருகிறார்கள் என்பது தான், வேடிக்கையிலும் வேடிக்கை !

இந்தப் போலி அறிவாளிகளின், தடைகளை எல்லாம் தாண்டித் தான் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், புதியதொரு தமிழகத்தை, பொற்காலத் தமிழகத்தை, முதல் நிலை தமிழகத்தை, உருவாக்கப் போராடி வருகிறேன்.

**முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

இன்றைய தினம், புதுக்கோட்டை மாவட்ட மக்கள், அனைவரும் பயன்பெறும் வகையில், மொத்தம் 60 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, 5,113 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக, 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பில், 149 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களும் – பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 4 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 18 சாலைப் பணிகளும் – சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 2,185 பணிகளும் – 11–வது நிதிக் குழு மானியத்தின் கீழ், 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 105 குடிநீர் ஊரணி மேம்பாட்டுப் பணிகளும் – சிறப்பு சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 2 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 272 பணிகளும் – முழு சுகாதார இயக்கத்தின் கீழ், 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தனி நபர், பள்ளிகள், ஆங்கன்வாடி மையு கழிவறைப் பணிகளும் – வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 40 பணிகளும் முடிக்கப்பட்டு உள்ளன. பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 10 கிராம அங்காடிகளும் – 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3 பயிற்சி மையங்களும் – 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், முந்திரி பருப்பு பதனிடும் மையம் ஒன்றையும் – 34 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், வணிக வளாகம் ஒன்றையும், இன்று திறந்து வைத்ததில், மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 99 கிராம நிர்வாக அலுவலர், அலுவலகக் கட்டடங்களும் – 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மரபு சாரா எரிசக்தி, மற்றும் சூரியஒளி மூலம் தெருவிளக்குகளும், வீட்டு விளக்குகளும் அமைக்கும் 120 பணிகளும், இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஊராட்சி மூலமாக, மாநில நிதிக் குழு மானியத்தின் கீழ், 1 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 118 பணிகள் முடிக்கப் பட்டு, அவற்றையும் இங்கே திறந்து வைத்ததில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். ஆக, ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக மட்டும், மொத்தம் 25 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பணிகள் முடிக்கப்பட்டு, இன்றைக்கு அவற்றை, இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன்.

நெடுஞ்சாலைத் துறையின் கீழ், 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 4 சாலை மேம்பாட்டுப் பணிகளை, நான் இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன். பொதுப்பணித் துறையின் சார்பில், 1 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கட்டி முடிக்கப்பட்டுள்ள 17 கட்டடங்களையும் – பொதுப்பணித் துறை நீர்வள ஆதார அமைப்புத் துறையின் மூலம், மொத்தம் 12 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், முடிக்கப்பட்டு உள்ள 289 பணிகளையும், இந்த விழாவிலே, நான் திறந்து வைத்துள்ளேன். குறிப்பாக, NABARD வங்கி உதவியுடன், 4 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட, 6 சிறு பாசன ஏரிகளை சீரமைக்கும் திட்டம், மற்றும் வடிகால் வாய்க்கால்கள் சீரமைக்கும் பணி, முன்புறக் கரைகளை சீரமைக்கும் பணி, மற்றும் வாய்க்கால்களைத் தூர் எடுக்கும் பணி ஆகியவற்றை, இந்த விழாவிலே திறந்து வைத்ததில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மக்களுடைய குடிநீர் தேவைகளைப் போர்க்கால அடிப்படையில் நிறைவு செய்வதை, நான் எந்து தலையாய கடமையாகக் கருதுகிறேன். 1991 முதல் 1996 வரை நடைபெற்ற, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், நான் புதுக்கோட்டை நகருக்கும், சுற்றுப்புற கிராமப் பகுதிகளுக்கும், காவேரியிலிருந்து குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தைத் துவக்கி வைத்தேன். இதன் மூலம், பல்லாயிரக்கணக்கான மக்களின் குடிதண்ணீர்த் தேவை, அன்று நிறைவு செய்யப்பட்டது. இன்று புதுக்கோட்டை மாவட்டத்தில், 6 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தனி விசை மின் திட்டங்கள், சிறு விசை மின் திட்டங்கள் உள்ளிட்ட, 1,160 குடிநீர் திட்டப் பணிகளை, இந்த விழாவிலே திறந்து வைத்ததில், நான் மிக்க மன நிறைவு அடைகிறேன். இதன் மூலம், 2 இலட்சத்து 66 ஆயிரம் மக்கள், பயன்பெறுவார்கள் என்று அறிந்து, மகிழ்ச்சி அடைகிறேன்.

பேரூராட்சித் துறையின் சார்பில், கட்டி முடிக்கப்பட்டு உள்ள, 1 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்புடைய, 143 பணிகள் – நகராட்சி நிர்வாகத் துறையின் சார்பில், கட்டி முடிக்கப்பட்டுள்ள, 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, 25 பணிகள் – தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதி கழகத்தால், 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட, 18 காவலர் குடியிருப்புக் கட்டடங்கள் – பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, மற்றும் கல்வித் துறை, ஆகியவற்றின் சார்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, 4 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, 262 பணிகள் – மாநில நிதிக் குழு மானியம் மூலம், 1 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட, 118 பணிகள் ஆகியவற்றையும், இந்த இனிய விழாவிலே, நான் திறந்து வைத்துள்ளேன்.

இந்த அரசு, விளையாட்டுத் துறைக்கும், இளைய சமுதாயத்தின் உடல் நலத்துக்கும், பெரிதும் முன்னுரிமை அளிக்கிறது. அதன் அடிப்படையில், 9 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு கூடைப் பந்து விளையாட்டு அரங்கமும், ஒரு கைப்பந்து விளையாட்டு அரங்கமும், பூப்பந்து ஆடு களமும், கட்டி முடிக்கப்பட்டு, அவற்றை இந்த விழாவில் திறந்து வைத்ததில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இளைஞர்கள், முக்கியமாக பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், இதன் மூலம், பெரிதும்

பயன்பெறுவர் என்பதை, மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவர் நலனுக்காக, மீன்பிடி தளம், 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில், ஜெகதாப்பட்டினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அறந்தாங்கி நகரில், மீனவர் அங்காடி ஒன்று, 15 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில், கட்டப்பட்டுள்ளது. இவற்றைத் திறந்து வைத்ததிலும், நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

கட்டி முடிக்கப்பட்டு, அதனை இன்று திறந்து வைத்ததில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசின் நலப் பணிகள், திட்டங்கள், மக்களின் நலனை முன் வைத்தே, தீட்டப்படுகின்றன. அவற்றின் முழுப் பயனையும், மக்கள் பெற வேண்டும்; குறிப்பாக, பெண்கள் பெற வேண்டும் என்பதே என் விருப்பம்.

பெண்களின் நிலையை மேம்படுத்த, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, எத்தனையோ முயற்சிகளை எடுத்து



குழந்தைகள் நலனில், பெரிதும் அக்கறை காட்டும் எனது அரசு, புதிதாகப் பிறந்த பச்சிளம் குழந்தைகளின், மருத்துவப் பராமரிப்புக்காக, 16 இலட்சம் ரூபாய் செலவில், புதுக்கோட்டை ராணியார் மருத்துவ மனையில், புதிய கட்டடத்தைக் கட்டியுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், குழந்தைகளுக்கான, ஊட்டச்சத்துப் பொருட்கள் பாதுகாப்புக்காக, 3–1/2 இலட்சம் ரூபாய் செலவில், கந்தர்வகோட்டையில், நவீன வசதிகளுடன், ஒரு கிடங்கு கட்டப்பட்டுள்ளது. இதனைத் திறந்து வைத்ததிலும், நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இதுவன்றி, சுகாதாரத் துறை மூலமாக, 17 துணை சுகாதார நிலையங்கள், 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பில், கட்டி முடிக்கப்பட்டு, அவற்றையும் இன்று, இந்த விழாவில் திறந்து வைத்ததில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும், வனத் துறை மூலமாக, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், மற்றும் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ், 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 43 பணிகள் முடிக்கப்பட்டு, இன்று அவற்றைத் திறந்து வைத்ததில், மகிழ்ச்சி அடைகிறேன்.

கூட்டுறவுத் துறை மூலமாக, 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், விவசாயிகள் கூட்டுறவு சங்கக் கட்டடம்,

வருகிறது. அவற்றை எல்லாம், நீங்கள் முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழக அரசின் உயர் பதவிகளில், இன்றைக்குப் பெண்களை, நான் அமர்த்தியிருக்கிறேன். எந்த உயர் பதவியிலும், பெண்கள், மிகச் சிறப்பாக செயல்பட முடியும், என்பது என் நம்பிக்கை. உங்கள் ஊரையே, உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம்.

இந்தியாவின் முதல் பெண் மருத்துவர், பிறந்த ஊரல்லவா இது ! புதுக்கோட்டை தந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்டவர். சட்டமன்ற மேலவை துணைத் தலைவராய் இருந்து, பெண்கள் பற்றிய, பல சீர்த்திருத்த சட்டங்களைக் கொண்டு வந்தவர். சென்னையில் புற்று நோய் மையத்தைத், தொடங்கி வைத்தவர். அனாதை இல்லம் தொடங்கி, ஆதரவற்ற குழந்தைகளுக்கு, வாழ்வு அளித்தவர்! அவர் தொடங்கிய அவ்வை இல்லம், சென்னையில் இன்றும், நன்கு செயல்பட்டு வருகிறது.

அவரைப் பற்றி நினைக்கும் போது, அவரது சேவை மனப்பான்மையை, விளக்கும் செய்தி ஒன்று, என் நினைவுக்கு வருகிறது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள், தான் செய்து வந்த அறப்பணிகளுக்குப், பொருள் பெறுவதற்காக, ஒரு

பணக்காரருடைய வீட்டுக்குச் சென்றிருந்தார். அந்த மனிதர் கஞ்சன்! அவர் ஒரு காசு கூடக் கொடுக்கத் தயாரில்லை. அவர் வீட்டில் ஒரு பூசணிக்காய் கிடந்தது. அதைக் கொண்டு வந்து, அதையும் கையில் கொடுக்காமல், தரையில் உருட்டி விட்டு, 'இதை எடுத்துக் கொண்டு போங்கள்', என்றார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, அதை மறுக்கவில்லை; அவருடைய செயலை வெறுக்கவில்லை. ''இந்தப் பூசணிக்காய், எங்கள் அனாதை இல்லக் குழந்தைகளுக்குக் கறி சமைக்க உதவும்'', என்று சொல்லிக் கொண்டே, அந்தப் பூசணிக்காயைத் தூக்கி வைத்துக் கொண்டு, நடந்து போனாராம்.

எப்பேர்ப்பட்ட அறிவாளி! இந்த நாட்டின் முதல் பெண் மருத்துவர்! கொஞ்சமும் கூச்சப்படாமல், கொடுத்ததை வாங்கிக் கொண்டு, ஏழைக் குழந்தைகளின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டவர்.

பெண்கள் நினைத்தால், தங்கள் தலை எழுத்தை மட்டுமல்ல, மற்றவர்களின் தலை எழுத்தையும் மாற்ற முடியும். அவர்களுக்குத் தேவை, வாய்ப்புகள்! அந்த வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதே, எனது லட்சியம்! என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

எனக்கு முன்பு பேசியவர்கள் பெண்களுக்கு ஆண்களோடு சம அந்தஸ்து வழங்குவதற்காக எனது அரசு என்னென்ன செய்து இருக்கிறது. நான் முனைப்பாக இதற்காக என்னென்ன திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்தி இருக்கிறேன் என்றெல்லாம் பேசினார்கள். ஏதோ புதிதாக பெண்களுக்கு இப்போது நான் ஆற்றலை வரவழைத்தது போல் பேசினார்கள். பெண்கள் என்றைக்குமே ஆற்றல் படைத்தவர்கள் தான். ஆற்றலுக்கு இன்னொரு பெயர் என்ன ? சக்தி! சக்தி! என்றால் யார் ? பெண் தானே! பெண்கள் பலவீனமானவர்கள் ஒருவரைச் சார்ந்தே வாழ வேண்டியவர்கள் என்ற எண்ணம் என்ற கருத்து என்ற தோற்றம் திட்டமிட்டே உருவாக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில், ஆதி காலத்தில் வேதங்கள் இயற்றப்பட்ட காலத்தில், ரிக் வேதம், சாம வேதம், யஜுர் வேதம், அதர்வண வேதம், இந்த வேதங்கள் இயற்றப்பட்ட காலத்தில் பெண்களுடைய நிலைமை மிகவும் உயர்வாக இருந்தது. இந்த வேதங்களை இயற்றியதில் கூட பெண்களுக்கு பெரும் பங்கு இருந்தது. அந்த காலத்தில் பெண்கள் சமுதாயத்தில் மதிக்கப்பட்டார்கள். போற்றப் பட்டார்கள். மேதைகளாக எல்லோராலும் வணங்கப் பட்டார்கள். ஆனால் இடைப்பட்ட காலத்தில் பெண்களை அடிமைப்படுத்தினார்கள். ஒரு பெண் தனித்து வாழவே முடியாது. எந்த காலக் கட்டத்திலும் ஒரு பெண் ஒரு ஆணைச் சார்ந்தே இருக்க வேண்டும். குழந்தைப் பருவத்தில் தகப்பனாரைச் சார்ந்திருக்க வேண்டும். தந்தையைச் சார்ந்திருக்க வேண்டும். வயதுக்கு வந்து விட்டால் கணவரைச் சார்ந்திருக்க வேண்டும். வயதாகிவிட்டால் மகனைச் சார்ந்திருக்க வேண்டும். பிள்ளையைச் சார்ந்திருக்க வேண்டும் என்று ஒரு சமூக நீதியைக் கொண்டு வந்தார்கள். பெண்களை இதை நம்ப வைத்தார்கள். பெண்களும் இடைப்பட்ட காலத்தில் அதை நம்பி விட்டார்கள். எதற்காக ஒரு பெண் இளம் பருவத்தில் குழந்தைப் பருவத்தில் தந்தையை சார்ந்திருக்க வேண்டும். பெரியவளான பிறகு கணவரை ஏன் சார்ந்திருக்க வேண்டும். வயதாகிவிட்டபிறகு மகனை ஏன் சார்ந்திருக்க வேண்டும். பொருளாதாரத்திற்காகத்தான் அந்த காலத்தில் பெண்களை அடிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் பெண்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டும் என்பதற்காகத்தான் பெண்கள் வெளியே வேலைக்குச் செல்லக் கூடாது தொழில் செய்யக் கூடாது என்ற ஒரு சமூக நியதியைக் கொண்டு வந்தார்கள். அப்போது தான் பெண்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடப்பார்கள். தங்கள் ஆற்றல் தங்களுக்கே தெரியாது. தங்களது திறமை தங்களுக்கே தெரியாது. வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடந்தால் எப்படியும் யாரோ ஒரு ஆண் மகனை நம்பித்தான் இருக்க வேண்டும். இப்படி ஒரு வழக்கத்தைக் கொண்டு வந்து விட்டார்கள். ஆண்டாண்டு காலமாக பல நூற்றாண்டுகளாக பெண்களும் அப்படியே அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். ஆகவே இன்றைய தினம் பெண்கள் ஆண்களோடு சரிநிகர் சமமாக வாழ வேண்டும் என்று கூறுகின்றபோது, அதற்கு முதல் வேலை என்ன என்று நான் சிந்தித்தேன். பெண்கள் சரிநிகர் சமமாக ஆண்களோடு இந்த சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால், பொருளாதார ரீதியாக சொந்தக் கால்களில் நிற்க வேண்டும். பொருளாதாரத்திற்காக ஒரு ஆணை ஒரு பெண் சார்ந்திருக்கக் கூடாது. அதற்காகத்தான் இந்த இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத்தான், பெண்கள் பொருளாதார ரீதியாக வலிமைப் பெற வேண்டும். சக்தி பெற வேண்டும், தன்னம்பிக்கை பெற வேண்டும் என்பதற்காகத்தான் 1992 ஆம் ஆண்டில் முதன் முறையாக நான் முதலமைச்சராக இருந்த போது, இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை நான் தொடங்கினேன். ஆரம்பத்தில் இந்த குழுக்களை நான் தொடங்கிய போது அந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக இருந்த பெண்களுக்கு கடன் வழங்க வங்கிகள் பெரிதும் தயக்கம் காட்டின. அப்போது எந்த வங்கியும் எளிதில் இந்த பெண்களுக்கு கடன் வழங்க முன் வரவில்லை. மெத்த சிரமப்பட்டு இந்த பெண்களுக்கு கடன் உதவியைக் கொடுக்க வைத்தோம். அதன் பின்னர் இந்த மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் ஆல மரம் போல் ஆல விருட்சம் போல் தழைத்து ஓங்கி வளர்ந்தது. இந்த மகளிர் சுய உதவிக்குழுக்களை நடத்தி வருகின்ற பெண்களிடம் பல நூறு கோடிக்கணக்கான ரூபாய்கள் சேமிப்பு நிதியாக இருக்கின்றன. இப்போது நிலைமை தலைகீழாக மாறி இருக்கிறது. இந்த சுய உதவிக்குழுக்களிடம் இருக்கின்ற மகளிரிடம் பல கோடி ரூபாய்கள் சேமிப்பு நிதியாக இருப்பதைப் பார்த்து, இன்றைக்கு வங்கிகளே அந்த மகளிருக்கு பின்னால் சென்று, அம்மா தாயே உங்களிடம் இருக்கின்ற சேமிப்பு நிதியை எங்களிடம் வைப்பு நிதியாக போட்டு வையுங்கள் என்று கேட்பதற்காக மகளிரைத் தேடி செல்கிறார்கள். இதுதான் இன்றைக்கு சமுதயாத்தில் ஏற்பட்டிருக்கிற மிகப் பெரிய மாற்றம். இதைப் பார்த்து நான் பூரிப்பு அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.



தமிழ்நாட்டிலுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இயக்கத்தில், தற்போது 1 இலட்சத்து 36 ஆயிரத்து 832 குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்களில் மொத்தம், 23 இலட்சத்து 27 ஆயிரத்து 751 பெண்கள், உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுக்களின் மொத்த சேமிப்பு, படிப்படியாக வளர்ந்து, தற்போது 332 கோடி ரூபாய், என்கிற பெரிய அளவுக்கு உயர்ந்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில், இதுவரை மொத்தம், **4,679** மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவற்றில் 77,397 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் இதுவரை, 9 கோடியே 17 இலட்சம் ரூபாயை, சேமிப்பாக வங்கிகளில் சேமித்து வைத்து உள்ளார்கள், என்றும் நான் அறிகிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில், **49** மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, நம் மாநிலத்திலேயே முன் மாதிரியாக, கல் குவாரிகள் உடைக்கும் பணி அளிக்கப்பட்டு, மிகவும் வெற்றிகரமாக நடைபெறுவதையும் அறிகிறேன். கடந்த எனது ஆட்சியின் போது, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, குவாரிகளை குத்தகைக்கு விட, ஆணை பிறப்பித்தேன். புதுக்கோட்டை மாவட்டத்தில், இந்த அரசு ஆணையினை, அமல்படுத்தியதன் மூலம், குவாரிகளில் தினக் கூலிகளாகப், பணி புரிந்த பெண்களே, இன்றைக்கு, அந்தக் குவாரிகளின் உரிமையாளர்களாகச் செயல்படுவது, என்னைப் பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. அந்தப் பெண்களுக்கு எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களைப் பார்த்து நான் பெருமைப் படுகிறேன் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் உள்ள மற்ற பெண்களும் அவர்களைப் பின் பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரை மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இயக்கத்தில் சேராத பெண்கள் அந்த இயக்கத்தில் சேர முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**ஆண்கள் சுய உதவிக் குழுக்கள்**

இந்த நேரத்தில், முக்கியமான ஒரு மாறுதலைப் பற்றி, உங்களுக்கு நான் சொல்ல வேண்டும், என்று நினைக்கிறேன். "ஆண்களைப் போலவே, பெண்களுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது", என்று சொல்லும் நிலைமை தான், இதுவரைக்கும் இருந்து வந்தது. இப்போது இந்த நிலைமை மாறி, "பெண்களைப் போலவே, ஆண்களுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது" என்று சொல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எங்கே ? தமிழகத்தில்! காரணம் யார் ? உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் தான் எப்படி ? எவ்வாறு ? பெண்கள் சுய உதவிக் குழுக்கள், என்று பேசிக் கொண்டிருந்த நாம், இப்போது ஆண்கள் சுய உதவிக் குழுக்களைப் பற்றிப், பேச ஆரம்பித்திருக்கிறோம். இது வரவேற்கத் தக்க மாறுதல் தானே ? ஊரகப் பகுதிகளில் வாழும், வேலை இல்லாத இளைஞர்களுக்கு, வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்திலும்; மத்திய, மாநில அரசின் நலத் திட்டங்கள், ஆண்களுக்கும் சென்று அடைய வேண்டும் என்ற நோக்கத்திலும்; இம்மாவட்டத்தில், ஆண்கள் சுயஉதவிக் குழுக்கள், அமைக்கப்பட்டு வருகின்றன. இது வரை, **1,342** ஆண்கள் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்களில், **20,142** ஆண்கள், உறுப்பினர்களாக உள்ளனர் என்பது, மகிழ்ச்சிக்குரிய செய்தி.

இதைப் பற்றி எனக்கு முன்பு பேசிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். இந்த ஆண்கள் சுயஉதவிக் குழுக்கள் எப்படி அமைக்கப்பட்டன. ஏன் அமைக்கப்பட்டன என்று தெரியுமா ? மகளிர் சுய உதவிக் குழுக்கள் மிகவும் வெற்றிகரமான ஒரு இயக்கமாக நடைபெறுவதைப் பார்த்து தமிழ்நாடு எங்கும் வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்கள் குறிப்பாக படித்த இளைஞர்கள் ஊரகப் பகுதிகளில் வாழ்கின்ற

இளைஞர்கள் எங்களுக்கும் இப்படிப்பட்ட சுய உதவிக் குழுக்களை நீங்கள் அமைத்துக் கொடுக்கக் கூடாதா? பெண்களுக்கு மட்டும் செய்கின்றீர்களே, பெண்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதற்காக இதை செய்துச் கொடுக்கிறீர்களே, நாங்களும் சொந்தக் காலில் நிற்க வேண்டும். நாங்களும் வேலையில்லாமல் இருக்கிறோம். எங்களுக்கும் அமைத்துத் தாருங்கள் என்று கேட்டதனால் தான் இன்றைக்கு இந்த இயக்கத்தைத் தொடங்கி இருக்கிறோம். ஆகவே பல புரட்சிகளை செய்து இருக்கின்ற இந்த அரசு இப்படி ஒரு புதிய சமுதாயப் புரட்சியையும் செய்து இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதுவரை காலங்காலமாக ஆண்களைப் போலவே பெண்களுக்கும் இதை செய்திருக்கிறோம் என்று கூறி வந்த நிலைமை மாறி, பெண்களைப் போலவே ஆண்களுக்கும் இதைச் செய்திருக்கிறோம் என்று சொல்லுகின்ற ஒரு நல்ல நிலைமையை ஆரோக்கியமான நிலையை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**மழை நீர் சேகரிப்பு**

மழை நீர் சேகரிப்பில், இந்தியாவில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக, வழி காட்டியாக, தமிழ் நாடு விளங்குகிறது. மழை நீர் சேகரிப்பு, இன்று மாபெரும் மக்கள் இயக்கமாக ஆகியுள்ளது. பெரியோர்கள், தாய்மார்கள், மாணவர்கள், ஆகிய எல்லோரிடமும், மழை நீர் சேகரிக்க வேண்டும் என்ற மாபெரும் விழிப்பு உணர்வு, இப்போது ஏற்பட்டுள்ளது. கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை ஆகஸ்ட் 31–க்குள் ஏற்படுத்த வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. அந்தக் காலக் கெடு நேற்றோடு முடிந்து விட்டது. அதன்படி, மழை நீர் சேகரிப்பு அமைப்புகள், பெருமளவில் அமைக்கப்பட்டு விட்டன என்பது, எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த மாவட்டத்தில் 94 சதவிகிதம் அமைக்கப்பட்டு விட்டது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார். மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இந்த மாவட்ட மக்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு அமைக்கப்படாத கட்டடங்களில், மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை அமைக்கப்படாத கட்டடங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளே நிறுவி, அதற்கு உரிய தொகையை வசூலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது மழை நீர் சேகரிப்பு முயற்சியை, கட்டடங்களுக்கு மட்டுமல்லாமல், திறந்த வெளிகள், வனப் பகுதிகள், பண்ணைக் குட்டைகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஊரணிகள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், ஊரகச் சாலைகள், புற வழிச் சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், சாலை ஓரங்கள் மற்றும் கோயில் குளங்கள் ஆகியவற்றிற்கு, நான் விரிவுபடுத்தியுள்ளேன். இந்தப் பணி செப்டம்பர் 30–ந் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும். இந்த முயற்சியால், நீர் வளமே இல்லாத, பொட்டல் வெளியாக உள்ள பகுதிகள் கூட, வளம் கொழிக்கும் நிலங்களாக மாறி விடும். இதற்கு உதாரணமாக, இராமநாதபுரம் மாவட்டம் விளங்குகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் எப்பொழுதும், குறைந்த அளவே மழை பெய்யும். இதனால் போதுமான பாசன வசதி, அங்கு கிடையாது. விவசாயம் செய்ய வழியின்றி, இராமநாதபுரம் மாவட்ட மக்கள், பஞ்சம் பிழைப்பதற்காக, வேறு ஊர்களுக்குச் செல்வது, இதுவரை வழக்கமாய் இருந்து வந்தது. தற்போது அந்த நிலைமை மாறியுள்ளது. இராமநாதபுரம் மாவட்ட மக்கள், அந்த நிலைமையை மாற்றி இருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக, இராமநாதபுரம் மாவட்டத்தில், ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றைத் தூர்வாரி, மேம்படுத்தி, மழை நீரை சேகரித்த காரணத்தால், வரலாற்றில் இதுவரை இல்லாத அளவில், அங்கு விவசாயப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதனால் இராமநாதபுரம் மாவட்ட மக்கள், பஞ்சம் பிழைக்க, வேறு மாவட்டங்களுக்கு தற்போது செல்வது இல்லை. செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இதனை தமிழ் நாட்டிலுள்ள பிற மாவட்டங்களும், பின்பற்றினால், தமிழ்நாடே, வளம் கொழிக்கும் மாநிலமாக மாறும், என்பதில் ஐயம் இல்லை. எனவே, எங்கெல்லாம் அதைச் செய்ய முடியுமோ, அங்கெல்லாம், ஒவ்வொரு துளி மழை நீரையும் சேகரித்து, தேக்கி வைத்து, நிலத்தடி நீரை மேம்படுத்தி, பயனடையுமாறு, விவசாயப் பெருமக்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த முயற்சி, ஒரு மக்கள் இயக்கமாக ஆக்கப்பட வேண்டும். அப்போது தான், தண்ணீர்ப் பற்றாக்குறை என்ற பேச்சுக்கே, தமிழ்நாட்டில் இடமிருக்காது. இந்தப் பணிகள் அனைத்தையும், செப்டம்பர் 30–ஆம் தேதிக்குள் செய்து முடித்தால் தான், அக்டோபர் மாதத்தில் வர இருக்கும், வட கிழக்குப் பருவ மழை மூலம், கிடைக்கும் தண்ணீரை, நாம் தேக்கி வைத்து முழுப்பயன் அடைய முடியும்.

மழை நீர் சேகரிப்பு என்பது, நாம் அனைவரும், அவசியமாகச் செய்ய வேண்டிய பணி. தமிழ்நாட்டில் உள்ள அனைவரும், இந்தப் பணியில், முழு ஈடுபாட்டுடன் பங்கெடுத்துக் கொண்டு, இதனை ஒரு வெற்றிகரமான மக்கள் இயக்கமாக, ஆக்க வேண்டும் என்று, அன்புடன் உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**அடிக்கற்கள் நாட்டுதல்**

இன்று நடைபெறுகின்ற இந்த விழாவில், 71 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள, 956 பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக, பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 27 சாலைப் பணிகள், 9 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் – கிராம நிர்வாக அலுவலர்களுக்காக, 99 அலுவலகக் கட்டடங்கள், 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – 170 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாக கட்டடங்கள், 3 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – 10 மகப்பேறு மையங்கள், 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 137 பணிகள், 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக, சாலை மேம்பாட்டு பணி, சமன்பாடு மற்றும் ஊக்க நிதித் திட்டத்தின் கீழ்,




10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், குடிநீர் திட்டப் பணிகள், 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் அமைப்பதற்கு, அடிக்கல் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நகராட்சி நிர்வாகம், மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலமாக, புதுக்கோட்டை நகராட்சியில், 5 வணிக வளாகங்கள், மற்றும் சேவை மையங்கள், 1 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – 24 சாலை பணிகள், 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் – 9 வடிகால் பணிகள், 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – 3 குழந்தைகள் பூங்காக்கள், 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் அமைப்பதற்கு, அடிக்கல் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

97 இலட்சம் ரூபாய் மதிப்பில், தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தின் மூலமாக, நீச்சல் குளம், மற்றும் விளையாட்டுத் தடகளங்கள் அமைக்கும் பணிக்காக அடிக்கல் நாட்டியதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மூலமாக, மணல்மேல்குடி, திருமயம், பொன்னமராவதி ஆகிய இடங்களில், மாணவர் விடுதிகளும், புதுக்கோட்டையில் மாணவியர் விடுதியும், 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு, அடிக்கல் நாட்டியுள்ளேன்.

மேலும், ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக, கரம்பக்குடி, அறந்தாங்கி, சடையம்பட்டி, புதுக்கோட்டை, கிள்ளுக்கோட்டை ஆகிய 5 இடங்களில், ஆதிதிராவிட மாணவர்களுக்கான விடுதிகள், 1 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு, அடிக்கல் நாட்டியதில், நான் மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொதுப்பணித் துறை மூலமாக, 21 இலட்சம் ரூபாய் செலவில், பள்ளி வகுப்பறைகள், கழிவறைகள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், பொன்புதுப்பட்டியில் கட்டுவதற்காகவும் – 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், புதுக்கோட்டை சிறைத் துறைப் பள்ளி சீரமைப்புக்காகவும், குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகளுக்காகவும், அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பொதுப்பணித் துறை நீர் ஆதார அமைப்பு மூலமாக, ராஜாளிப்பட்டி கிராமத்தில், சூரியார் ஆற்றின் குறுக்கே, 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அணை கட்டுவதற்காக, அடிக்கல் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலமாக, 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், உடையாளிப்பட்டியில், காவல் நிலையம் கட்டவும்; உதவி ஆய்வாளர் மற்றும் தலைமைக் காவலர்களுக்கான, 48 குடியிருப்புகள், 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டுவதற்கும், அடிக்கல் நாட்டியதில், நான் அக மிக மகிழ்கின்றேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில், குன்னாண்டார்கோயில், மேலத்தானியம், வயலோகம், கந்தர்வகோட்டை, மற்றும் ஆவணத்தான் கோட்டை ஆகிய இடங்களில், மொத்தம் 6 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், புதிய 33/11 கிலோ வோல்ட் திறன் உள்ள, 5 துணை மின் நிலையங்களுக்கு, இன்று நான் அடிக்கல் நாட்டி உள்ளேன். இதன் வாயிலாக, குளத்தூர், இலுப்பூர், கந்தர்வகோட்டை, திருமயம் ஆகிய தாலுக்காக்களில் அடங்கிய, கிராமங்களில் உள்ள பொதுமக்கள், தடையின்றி மின்சார விநியோகம் பெற்றுப் பயன் பெறுவார்கள் என்பதை, இந்த நல்ல நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக, சாலைகள் மற்றும் பாலங்களை மேம்படுத்துவதற்காக, 21 கோடியே 95 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில், 8 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதில், மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மருத்துவத் துறையின் மூலமாக, 47 இலட்சம் ரூபாய் மதிப்பில், வட்டார மருத்துவ பதிவேடுகள் மையம் அமைப்பதற்கும்; விராலிமலை மற்றும் ஆண்டாள்குளம் கிராமங்களில், 30 படுக்கை கொண்ட, ஆரம்ப சுகாதார நிலையங்கள், 80 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கவும், அடிக்கல் நாட்டியதில், மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மீனவர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள, 4 கடலோர கிராமங்களில், 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 103 வீடுகள் கட்ட, நான் அடிக்கல் நாட்டி உள்ளேன். மேலும், புதுக்கோட்டை நகரில், 15.5 இலட்சம் ரூபாய் செலவில், மீனவர் அங்காடி ஒன்று அமைத்திடவும், நான் அடிக்கல் நாட்டி உள்ளேன் என்பதை, மீனவப் பெருங்குடி மக்களுக்கு, பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'அனைவருக்கும் கல்வி' திட்டத்தின் கீழ், 117 பள்ளிகளில், 3 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் கழிவறைகள் கட்டவும், அடிக்கல் நாட்டியதில், மன நிறைவு அடைகிறேன்.

பாதுகாப்பான குடிநீர், தேவையான அளவிற்கு கிடைப்பதை, உறுதிபடுத்துவதற்காக, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், பாக்கம், மஞ்சக்கொடி, கதிரமங்களம், ஆகிய 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு, 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – மேலும், 5 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 120 தனி விசை பம்பு அமைக்கும் பணிகளுக்கும் – 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 34 மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் அமைக்கும் பணிகளுக்கும் – அடிக்கல் நாட்டியதில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ள அனைத்துப் பணிகளையும், விரைந்து முடிக்க, அனைத்துத் துறை அலுவலர்களுக்கும், நான் உத்தரவிட்டு உள்ளேன் என்பதையும்; அவை முடிந்த பிறகு, நானே மீண்டும் இங்கே வந்திருந்து, முடிந்த பணிகளைத் திறந்து வைப்பேன் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒருமுறை, வள்ளல் அழகப்பச் செட்டியார், லண்டனுக்குச் சென்றிருந்தார், அங்கே ஒரு பெரிய விடுதியில், எடை பார்க்கும் எந்திரத்தில், காசு போட்டார். அவரது எடை குறித்த அட்டை, எந்திரத்திலிருந்து வெளியே வந்தது. அட்டையின் பின்புறத்தில், அதிர்ஷ்டச் செய்தி போடப்பட்டிருந்தது. நம் ஊரில் கூட, நீங்களே பல முறை, அப்படி எடை பார்க்கும் எந்திரத்தில், அதிர்ஷ்டம் பார்த்திருக்கலாம்.

அழகப்பருக்கு எந்திரம் தந்த அட்டையில், என்ன எழுதப்பட்டிருந்தது தெரியுமா? "கூடிய சீக்கிரம், நீ, அழகான வாலிபனை மணந்து கொள்வாய்" என்று அச்சடிக்கப்பட்டிருந்தது.

பாவம், எந்திரத்துக்குத் தெரியுமா? எடை பார்க்க வந்திருப்பவர், ஆண் என்று? அதிர்ஷ்டம் பற்றிய பெரும்பாலான அறிவிப்புகள் இப்படித்தான். இதை, ஏதோ, விளையாட்டாக எடுத்துக் கொண்டால், பரவாயில்லை. அதனால் ஒரு நஷ்டமும் இல்லை! ஆனால் அதையே உண்மையாக எடுத்துக் கொண்டால் ஒருவருக்கு "இன்று நீ ஒரு விபத்தை சந்திப்பாய்!" என்று எழுதப்பட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். பெரும்பாலோவர்களின் இயல்பு எப்படி? தங்களைப் பற்றிக் கெடுதலாக வந்தால், அப்படியே நம்பி விடுவார்கள். இன்று விபத்து ஏற்படும், இன்று விபத்து ஏற்படும் என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டே இருந்தால், அப்படியே ஏற்படத்தான் செய்யும்.

எனவே நல்லது நடக்கும், வெற்றி கிடைக்கும் என்பதில், உறுதியாய் இருங்கள். நல்லது நடந்தே தீரும்! வெற்றி கிடைத்தே தீரும்! இன்று நலத் திட்ட உதவிகளைப் பெறுகிறவர்கள், வாழ்க்கையில் தன்னம்பிக்கை யோடு,முன்னேற வேண்டும் என்று, அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நலத்திட்ட உதவிகள் வழங்குதல்**

சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கு, அரசினுடைய பல்வேறு நலத்திட்ட உதவிகள், வேகமாகச் சென்றடைய வேண்டும் என்பதில், எனக்கு எப்போதுமே, மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் உண்டு. எனது எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில், இன்றைய தினம், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள, 22,281 பேர்களுக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, மொத்தம் 29 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்குவதில், நான் பெருமிதம் அடைகிறேன்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக, 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் அளவுக்கு, 3,000 பேர்களுக்கு கடனுதவி வழங்குவதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ், 12 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3,854 பயனாளிகளுக்கு, புதிய வீடுகளும் – 1 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1,680 பயனாளிகளுக்கு, கச்சா வீடுகளும் வழங்குவதில், நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், பாரதப் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 405 பயனாளிகளுக்கு, புதிய வீடுகள் வழங்குவதிலும் – சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், வீடுகளைப் பழுது பார்க்க, 1,221 பயனாளிகளுக்கு, 80 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்குவதிலும், நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அன்னவாசல், பொன்னமராவதி, விராலிமலை, குன்னாண்டார் கோயில், ஊராட்சி ஒன்றியங்களில், 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில், 2,242 பயனாளிகளுக்கு, பயன்கள் வழங்கப்பட உள்ளன.

வருவாய்த் துறையின் சார்பாக, 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 5,608 பயனாளிகளுக்கு, இலவச வீட்டுமனைப் பட்டாக்களும் – 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 631 பயனாளிகளுக்கு, இலவச நிலப் பட்டாக்கள் வழங்குவதிலும், – 12 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பில், நலிந்தோர் உதவித் தொகை, மற்றும் விபத்து நிவாரணத் தொகை வழங்குவதிலும், நான் மன நிறைவு அடைகிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மூலமாக, 50 நபர்களுக்கு, இலவச சலவைப் பெட்டி, 57 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் – ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக, 263 ஆதிதிராவிட பயனாளிகளுக்கு, இலவச வீட்டு மனை பட்டா, 2 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் – தாட்கோ மூலமாக, தனி நபர் தொழில் திட்டத்தின் கீழ், 181 பயனாளிகளுக்கு, 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, சுழல் நிதி மற்றும் பொருளாதார மேம்பாடு உதவி திட்டத்தில், 1,755 பெண்களுக்கு, 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – மீனவர்களுக்கு, இலவச வீடு வழங்கும் திட்டத்தின் கீழ், 379 பயனாளிகளுக்கு, 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், நலத்திட்ட உதவிகளை வழங்குவதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கூட்டுறவுத் துறையின், பல்வேறுபட்ட கடன் திட்டங்களின் கீழ், 394 பயனாளிகளுக்கு, 29 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய், கடன் உதவிகளும் – 107 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 1 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பில், பொருளாதார கடன் உதவியும் – 37 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு, 20 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய், நபார்டு திட்ட கடன் உதவியும் – தொழில் வணிகத் துறை மூலமாக, 15 நபர்களுக்கு, 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பில், தொழில் துவங்க கடன் உதவியும் – வனத் துறை மூலமாக, தமிழ் நாடு காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ், 205 பயனாளிகளுக்கு, 10 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் அளவில், சுயதொழில் தொடங்க, கடன் உதவியும் வழங்குவதில், நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சமூக நலத் துறை மூலமாக, விதவை மறுமணத் திட்டம், தமிழக அரசு கலப்புத் திருமணத் தம்பதியர் நிதியுதவித் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், ஆகியவற்றின் கீழ், 49 பயனாளிகளுக்கு, 1 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பில், நலத்திட்ட உதவிகளும் – ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மூலமாக, 75 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 38 பயனாளிகளுக்கு, 3 சக்கர வண்டிகள், இரு சக்கர நாற்காலிகள், மற்றும் உபகரணங்களும் வழங்குவதில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.




இந்த உதவிகளை எல்லாம் பெறுகின்ற பயனாளிகள், இவற்றை அடிப்படையாக வைத்து, தாங்கள் ஏற்கெனவே செய்து வருகின்ற தொழில்களை, மேலும் சிறப்போடு செய்து, தங்கள் வாழ்வில் மென்மேலும், நலமும் வளமும் பெற்றிட வேண்டும் என்று, உங்கள் அத்தனை பேருக்கும், எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓர் ஊரில், ஒரு நல்ல மனிதன் இருந்தான். அவனுடைய நல்ல குணங்களைப் பாராட்டி, ஒரு தேவதை, அவனுக்கு மந்திரக் கண்ணாடி ஒன்றைப், பரிசாகத் தந்து, "இந்தக் கண்ணாடியிடம் கேட்டால், அது உன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றித் தரும். ஆனால் மூன்று விருப்பங்களை மட்டுமே சொல்ல வேண்டும்" என்று சொல்லிவிட்டு மறைந்தது. அந்த நல்ல மனிதன், முதலில், பெரிய மாளிகை வேண்டும் என்று நினைத்தான்; கண்ணாடியிடம் கேட்டான். உடனே பெரிய மாளிகையில், அவன் இருந்ததைப் பார்த்தான்.

இரண்டாவதாக, நிறைய செல்வம் வேண்டும் என்று நினைத்தான்; கண்ணாடியிடம் கேட்டான். உடனே பெருஞ்செல்வத்தைப் பெற்றான்.

மூன்றாவதாக, தான் வாழ்கின்ற ஊர், சிறப்பு அடைய வேண்டும் என்று நினைத்தான். கண்ணாடியிடம் கேட்டான். உடனே ஊர் மக்களுக்கு, எல்லா நலமும் வளமும் கிடைத்தது.

இவ்வாறு தானும் உயர்ந்தான்; தான் பிறந்த ஊரையும் உயர்த்தினான்.

அவன் இப்படி திடீரென்று, பணக்காரன் ஆனதைப் பார்த்துப், பொறாமைப்பட்ட அவனது சொந்தக்காரன் ஒருவன், எப்படி இவற்றையெல்லாம் பெற்றான், என்பதை அறிந்து கொள்ளத் துடித்தான். நல்லவனைக் கேட்ட பொழுது, அவன் நடந்தவற்றை எல்லாம், நடந்தது நடந்தபடியே சொன்னான்.

"ஒரே ஒரு நாள் மட்டும், அந்த மந்திரக் கண்ணாடியை என்னிடம் கொடேன்," என்று கேட்டு, வாங்கிக் கொண்டு போனான், பேராசைக்காரன். வீட்டுக்குப் போய், கண்ணாடியைப் பார்த்து, என்ன கேட்கலாம் என்று நினைத்த போது, தன்னை எல்லோரும், "சப்பை மூக்கன்" என்று அழைப்பது, அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. உடனே, "என் மூக்கு நீளமாக வேண்டும்" என்று முதல் விருப்பத்தைத் தெரிவித்தான். உடனே மூக்கு, மூன்றடி நீளத்திற்கு நீண்டு விட்டது. ஐயோ இப்படி ஆகிவிட்டதே, என்று பயந்து போய், 'எனக்கு இந்த மூக்கு வேண்டவே வேண்டாம்' என்று, இரண்டாவதாகத் தனது விருப்பத்தைத் தெரிவித்தான். உடனே ,மூக்கு முற்றிலுமாக மறைந்து விட்டது. என்ன பயங்கரம்! அடடா! பழைய சப்பை மூக்கே பரவாயில்லையே என்று நினைத்தான். அது மூன்றாவது விருப்பம். உடனே பழைய சப்பை மூக்கே வந்து விட்டது.

இப்போது என்ன செய்வது? மூன்று விருப்பங்கள் தானே கேட்க முடியும்? இருந்தாலும் பேராசை விடவில்லை. திரும்பத் திரும்ப கண்ணாடியின் முன்பு நின்று, அது வேண்டும், இது வேண்டும் என்று நினைத்தான். ஒன்றும் நிறைவேறவில்லை.

வாய்ப்பு கிடைத்தாலும், அந்த வாய்ப்பு, அந்தப் பேராசைக்காரனுக்குப் பயன்படவே இல்லை. "நாமும் நல்லா இருக்கணும், ஊரும் நல்லா இருக்கணும்" என நினைத்தான் நல்லவன்.

அவன் நினைத்தது நடந்தது! கெட்டவனுக்கோ, தன்னைப் பற்றி நினைக்கவே, நேரம் போதவில்லை! மந்திரக் கண்ணாடி கிடைத்தும், அவனுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை.

அவனுக்கு, மறைந்த சப்பை மூக்கு மறுபடியும் கிடைத்ததே பெரிய விஷயம்! இல்லா விட்டால், மூக்கே இல்லாமல் போயிருக்குமே! மூக்கு இல்லாத முகம், எப்படி இருந்திருக்கும், என்று நினைத்துப் பாருங்கள்.

இப்படிப்பட்ட வயிற்றெரிச்சல் காரர்களுக்கு, நம் நாட்டில் பஞ்சமே இல்லை. தமிழ்நாட்டில் ஒரு பெரியவர் இருக்கிறார். அவர் வாயைத் திறந்தால் போதும் – வயிற்றெரிச்சல் வார்த்தைகள் தான் வரும்.

பொறாமைத் தீ, எவனை சூழ்ந்து கொள்கிறதோ, அவன் கடைசியில் தேளைப் போலவே, தன் விஷக் கொடுக்கினால், தன்னையே கொட்டிக் கொள்வான் – என்றார், நீட்சே என்ற அறிஞர்.

அது தான் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பொறாமைத் தீயால் வெந்து கொண்டிருக்கிறார், அந்தப் பொல்லாத மனிதர் ! எந்த நல்ல பெயரும், எனக்கு வந்துவிடக் கூடாது என்பது தான், அந்த அரசியல் தலைவரின் அன்றாடப் பிரார்த்தனை.

ஒவ்வொரு பிரச்சனையாகக் கிளப்பிவிட்டு, முடிவில் மூக்கறுந்து போவதே, அவருக்கு வழக்கம்! அவரை மூக்கறுக்கத் தான், நீங்கள் இருக்கின்றீர்களே!

உங்கள் அன்பும் ஆதரவும் இருக்கும் வரை, எந்தத் தீய சக்தியும், என்னை ஒன்றும் செய்து விட முடியாது, என்பதைத் தெரிவித்துக் கொண்டு; இந்த அன்பையும், இந்த ஆதரவையும், என்றும் உங்கள் அன்புச் சகோதரிக்குத், தொடர்ந்து வழங்க வேண்டும் என்று, உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை, இன்றைய தினம், நானே பயனாளிகள் அனைவருக்கும், வழங்க வேண்டும், என் கையாலேயே வழங்க வேண்டும் என்று விரும்பினாலும், நேரம் குறைவாகவே உள்ள காரணத்தால், 15 பேருக்கு மட்டும், இந்த உதவிகளை, நானே மேடையில் வழங்க இருக்கிறேன். மற்றவர்களுக்கு, அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும், இப்போதே இங்கேயே உரிய உதவிகளை வழங்கிச், சிறப்பிப்பார்கள் என்பதை, அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவை, சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திட, பணியாற்றிய புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. எஸ். ஹிதேஷ் குமார் மக்வானா இ.ஆ.ப., அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்.

---

1.9.2003 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை

* * *

# மக்களின் நலனுக்கு ஏற்ற வகையில் அரசியலமைப்பு செயல்பாடு

– மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை



காஷ்மீரில் இன்று (27–08–2003) காலை துவங்கியுள்ள 8வது மாநிலங்களுக்கிடையேயான மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள பிரதமர், துணைப் பிரதமர், அனைத்து மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும் இக்கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் தமிழக மக்களின் சார்பில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜம்மு காஷ்மீர் மாநில மக்கள் அமைதிக்கு திரும்புவதற்காக எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளும், முயற்சிகளும் வெற்றி பெற இயற்கை அழகு நிறைந்த ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு எப்பொழுதுமே தமிழ்நாடு அளவற்ற ஆதரவு தரும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விழைகின்றேன்.

நாம், தற்போது, நாடு சுதந்திரமடைந்து 56 ஆண்டுகள் நிறைவடைந்ததை சிறப்பாகக் கொண்டாடியுள்ளோம். இன்றைய இக்கூட்டம் கடந்த 50 ஆண்டுகளில் முழுமையடைந்த திட்டங்கள் மற்றும் முழுமையடையாத திட்டங்கள் குறித்து நம்மை நாமே சுயபரிசோதனை செய்து கொள்வதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. மாநிலங்களுக்கிடையே குழு ஓர் உயர்வான சீரிய அமைப்பாகும். இக்குழு வாக்காளர்கள் தாங்கள் பிரதிநிதிகளுக்கு அளித்துள்ள அதிகாரத்தை ஜாக்கிரதையாகவும், நிதானமாகவும் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு நம்முடைய கூட்டாட்சி அரசியல் தத்துவத்தை சிறப்பான வகையில் செயல்படுத்தும் பொருட்டு மாற்றி அமைக்கும் பணியைச் செய்து வருகிறது.

இந்திய அரசியலில் உண்மையான குணம் என்ன என்று கேட்கும் பொழுது, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நம்முடைய அரசியல், நம்முடைய அரசியல் பாரம்பரியம் ஆகியவை இயற்கையிலேயே அடிப்படையான கூட்டாட்சியைக் கொண்டுள்ளது. நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் வெளிப்படையான, குறிப்பிடத் தக்க, விவேகமான, போலித் தன்மையற்ற கூட்டாட்சிக் கொள்கையை உருவாக்கியுள்ளனர்.

இந்த அரசியல் அமைப்புச் சட்டம் இல்லாமல் ஒரு கண்டம் அளவுக்கு பரப்பளவில் அகன்று, சிக்கலான பல்வேறு வேறுபாடுகளை உள்ளடக்கிய நம் நாட்டை வழிநடத்துவது இயலாத காரியமாகும். இதனைச் சிலர் மறுக்கலாம். நம்முடைய அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் ஒருசிலவற்றை சார்ந்து உருவாக்கியுள்ளனர்.

தனித்தனியே பிரிந்து செல்லும் நோக்கத்துடன், பன்னாட்டு தீய சக்திகளின் தூண்டுதலின் காரணமாகவும், சுதந்திரம் அடையும் காலத்தில் சில பிரச்சினைகள் உருவாயின என்பது உண்மைதான். ஆனால் அவை நடைபெற்றது 1947 ஆண்டு. நாம் தற்போது எங்கு உள்ளோம். 56 ஆண்டு காலம் சுதந்திர மடைந்து ஆகிவிட்டது. உலகிலேயே நிரந்தரமான ஜனநாயக நாடு என்ற பெருமையுடன் நிரந்தரமான ஜனநாயகத்தை கொண்டுள்ள நாடாக பெருமைப்படும் வகையில் உள்ளோம்.

இந்தியா ஏற்கெனவே 13 பொதுத் தேர்தல்களையும், வெற்றிகரமாக நடத்தி விரைவில் 14வது பொதுத் தேர்தலையும் எதிர்கொள்ள இருக்கிறது. கடந்த 56 ஆண்டுகளில் இந்தியப் பாராளுமன்றம் ஒரு கட்சி ஆட்சி முறையில் இருந்து பல்வேறு கட்சிகள் இணைந்து ஆட்சி நடத்தும் நிலைக்கு மாறி உள்ளது. இந்திய தேசியக் கட்சிகள் என்பன தற்போது மாநில அளவில் சுருங்கியுள்ளதைப் பார்க்கிறோம். அதே நேரத்தில் நாட்டின் நிருவாகத்தில் முக்கியப் பங்கு பணியாற்றி சக்தி வாய்ந்த மற்றும் வளர்ச்சியை நோக்கிய சிறப்பான நடவடிக்கைகளில் பிராந்தியக் கட்சிகளின் செயல்பாடுகள் முக்கியப் பங்கு பணியாற்றியுள்ளதையும் காண்கிறோம்.

அரசியல் முதிர்ச்சி தற்போது இந்தியாவில் அதிக அளவு காணப்படுகின்றது. நம்முடைய அரசியல் அமைப்பு சட்ட நடைமுறைகளில் ஆழ்ந்த அபூர்வமான செயல்பாடுகள் உள்ளடங்கியுள்ளது. மத்திய அரசிடம் குவிந்துள்ள அதிகாரத்தைக் குறைத்து மாநிலங்களுக்கும் மற்ற அமைப்புகளுக்கும் அதிகாரத்தை பரவலாக்க நடைமுறைகள் இன்னும் நிறைவேற்றப் படாமலே உள்ளன. உலகில் உள்ள பல்வேறு நாடுகள் அரசியல் நிருவாகத்தில் பல்வேறு நிலைகளில் அதிகாரத்தைப் பரவலாக்கும் நடைமுறை களையும், பொறுப்புகளை பகிர்ந்து கொள்வது குறித்தும் மறுபரிசீலனை செய்து வரும் நிலையில் இந்தியாவும் நீண்ட நாட்களாக இத்திட்டத்தைச் செயல்படுத்தாமல் இருக்க இயலாது.

*மத்திய அரசை விட மாநில அரசுகள் மக்களிடம் மிகவும் நெருங்கி உள்ளன. நாம் விரைவான சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறிவருகின்றோம். உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் கொள்கைகளை செயல்படுத்துவதன் விளைவாக நிருவாகத்திலும் மிகப்பெரிய அளவில் கொள்கை அளவிலான மாற்றம் தேவைப்படுகின்றது.*

நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டம் ஒரே சீரான வளர்ச்சியை தரும் வகையில் நிரந்தரமாக நிலைத்து நீடித்திருக்கும் ஓர் அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றது. நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைகளையும், தேவைகளையும் எதிர்கொள்ளும் விதத்தில் சுதந்திரமான நீதித்துறை, தேர்தல் ஆணையம், கணக்கு தணிக்கை பிரிவு மற்றும் அகில இந்திய பணி அதிகாரிகள், ஒழுக்கம் நிறைந்த இராணுவப்படைகள், ஒரே சீரான அடிப்படையான சட்டங்கள், எல்லா மனிதர்களுக்கும் சரி சமமான உரிமைகள் என உள்ளன.

மத்தியில் அதிக அதிகாரங்களை குவித்து வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மாநிலங்களை பலவீனப்படுத்தி அதே நேரத்தில் மாநில அரசுகள் அதிக வளத்துடன் இருப்பது போன்ற ஒரு கற்பனையான தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் எதனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கினார்களோ அவர்களுடைய பார்வையைச் செயல்படுத்தாத வகையில்தான் இந்த நிலைமை நீடிப்பதாக நான் கருதுகின்றேன்.

பிரதமர் அவர்களே, மாநில அரசுகளை அதிகாரமற்ற அமைப்புகளாக மாற்ற முயற்சித்தால் அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். மக்களுக்குச் சிறந்த சேவையாற்றும் வகையில் நிருவாக நடைமுறைகள் மற்றும் வழிமுறைகளை செயல்படுத்தும்



அமைப்புகளை உருவாக்க வேண்டுவது நம்முடைய முக்கியமான நோக்கமாகும்.

மத்திய அரசை விட மாநில அரசுகள் மக்களிடம் மிகவும் நெருங்கி உள்ளன. நாம் விரைவான சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறிவருகின்றோம். உலக மயமாக்கல், தாராளமயமாக்கல் கொள்கைகளை செயல்படுத்துவதன் விளைவாக நிருவாகத்திலும் மிகப்பெரிய அளவில் கொள்கை அளவிலான மாற்றம் தேவைப்படுகின்றது.

அரசியல் நிருவாகத்தில் உள்ள அதிகாரத்தை பரவலாக்க வேண்டியதும் அவசியம் ஆகின்றது. இதன் மூலம்தான் தேசிய அளவிலும் சரி, மாநில அளவிலும் சரி, நம்மிடமுள்ள இயற்கை வளங்களை முழுமையான அளவில் பயன்படுத்துவதன் மூலம் பொதுமக்களுக்கு தேவையான நலத்திட்டங்களையும் சிறப்பான முறையில் செயல்படுத்திட முடியும்.

வலிமையான மத்திய அரசு வலுவலான மாநில அரசுகள் என்ற கொள்கையை செயல்படுத்துவதற்கு கூட்டுறவு கூட்டாட்சித் தத்துவத்தை பரந்த அளவில் செயல்படுத்தத் திட்டமிடுதல் வேண்டும். இதுகுறித்து இந்த மாநிலங்களுக்கிடையேயான கூட்டத்தில் ஒரு சில குறிப்பிட்ட தகவல்களை இங்கு தெரிவித்துக் கொள்ள விழைகின்றேன். மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான கூட்டாட்சி நிருவாக உறவு முறைகளின் சாதகமான அம்சங்கள் குறித்து குறிப்பிட்ட கால வரம்புக்குள் செயல்படுத்த வேண்டியது குறித்து மாநிலங்களுக்கிடையேயான குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

வலிமையான கூட்டாட்சி அரசியல் நடைமுறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக இந்தியா விளங்கி வருகின்றது. அதற்குக் காரணம் அதன் உறுப்புகளான மாநிலங்கள் வலிமையோடு செயல்படுவதால்தான். மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான உறவுகள் என்பது இரு அமைப்புகளுக்கும் இடையேயான நம்பிக்கை, சமநிலை மற்றும் நலத்திட்டங்களை அனைவருக்கும் செயல்படுத்துவதற்கான மதிப்பீடுகள் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளதுதான் காரணம்.

மத்திய மாநில அரசுகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் எழுவது என்பது இயற்கையான ஓர் அம்சமாகும். ஜனநாயக அரசியலில் கருத்து வேறுபாடு என்பது இயற்கையான ஒன்றாகும். ஆனால் அதற்காகத்தான் இதுபோன்ற மாநிலங்களுக் கிடையேயான கூட்டங்களின் மூலம் மத்திய, மாநில அரசுகளுக்கு ஏற்படும் பிரச்சனைகள், கருத்து வேறுபாடுகள் மற்றும் எண்ணங்களை பேசி தீர்த்துக் கொள்ள இயலும். இந்த அடிப்படையில் அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்த மாநிலங்களுக் கிடையேயான குழு மேலும் வலிமைப்படுத்தப்பட வேண்டும்.

மாநில சட்டப்பேரவைகள் மாநிலத்தின் நிதிநிலைமையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு, அதே நேரத்தில் நாடாளு மன்றத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி மத்திய அரசு

*தீர்க்கப்படாத பல்வேறு சட்டப்பிரச்சினைகள் மாநில அரசுகளால் மட்டுமே தீர்த்து வைக்க முடியும் என்பதே என்னுடைய உறுதியான நம்பிக்கையாகும். இராணுவம் போன்ற முக்கிய துறைகள் மற்ற அதிகாரங்களை மாநிலங்களிடம் ஒப்படைக்க முன் வரவேண்டும். அரசியல் அதிகாரங்களைப் பொறுத்த வரையில் மத்திய அரசு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் மற்றும் மத்திய சட்டப்பிரிவின் கீழ் மத்திய அரசு புதிதாக ஏதேனும் சட்டங்களை கொண்டு வரும்போது முன்கூட்டியே மாநில அரசுகளின் ஒப்புதலை பெறவேண்டும்.*

தடையாக இருக்கக் கூடாது. மத்திய மாநில அரசுகளின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புகளையும், கடமைகளையும் இயற்கையாகவே பிரித்தளிக்க வேண்டும். மத்திய அரசு பொறுப்புகளை மட்டும் மாநில அரசுகளுக்கும் வழங்காமல் அதனைச் செயல் படுத்துவதற்குத் தேவையான நிதியையும், ஆதாரங்களையும் வழங்க வேண்டும்.

தீர்க்கப்படாத பல்வேறு சட்டப்பிரச்சினைகள் மாநில அரசுகளால் மட்டுமே தீர்த்து வைக்க முடியும் என்பதே என்னுடைய உறுதியான நம்பிக்கையாகும். இராணுவம் போன்ற முக்கிய துறைகள் மற்ற அதிகாரங்கள்ள மாநிலங்களிடம் ஒப்படைக்க முன் வரவேண்டும். அரசியல் அதிகாரங்களைப் பொறுத்த வகையில் மத்திய அரசு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் மற்றும் மத்திய சட்டப்பிரிவின் கீழ் மத்திய அரசு புதிதாக ஏதேனும் சட்டங்களைக் கொண்டு வரும்போது முன்கூட்டியே மாநில அரசுகளின் ஒப்புதலை பெறவேண்டும்.

மக்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு தன்னுடைய பணியையும், பொறுப்புகளையும் மறந்து கடமை தவறி தங்களுடைய சொந்த நலன்களுக்காக அல்லது கொள்கைகளுக்காக செயல்படத் துணிந்தால் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

நமது அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 356ன் கீழ் எந்த மாநிலத்திலாவது அரசியல் சட்ட நடைமுறைகளுக்கு முரணாக அரசு எந்திரத்தை தவறாகப் பயன்படுத்துவது தெரிய வந்தால் அந்த நிலையைச் சீராக்குவதற்காக மத்திய அரசு காலச்சூழ்நிலையை கருதி மாநில அரசுகளை கலைப்பதற்காக ஓர் உயர்ந்தபட்ச அதிகாரத்தை வழங்கியுள்ளது. இந்தப் பிரிவை பயன்படுத்துவதற்கு முன்னர் மற்ற அனைத்து முறைகளும் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் மூலம் நிலைமை கட்டுப்படுத்தப்படாத நிலையில்தான் இதனைப் பயன்படுத்த வேண்டும்.

அரசியல் அமைப்புச் சட்டம் 356 பலமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது நாம் அறிந்த ஒன்றுதான். அரசியல் சில்லறைத் தரகர்களால் மாநிலத்தின் சுயாட்சி மீது கேள்வி எழுப்பும் வகையில் பல்வேறு அரசியல் காரணங்களுக்காக இச்சட்டம் தவறுதலாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் சாசன பிரிவு 356–ஐ தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுக்க வேண்டுமானால் அச்சட்டத்தையே ரத்து செய்ய வேண்டும்.

இதனைத் தவறுதலாக பயன்படுத்தாமல் இருப்பதற்காக அதற்கென்று வழிமுறைகளையும், கால கட்டங்களையும் நிர்ணயிக்க வேண்டும். அரசியல் காரணங்களுக்காக தவறுதலாக பயன்படுத்துவதை தவிர்க்க ஒரே வழி அதனை அரசியல் அமைப்பு சட்டத்திலிருந்தே நீக்கி விடுவது ஒன்றுதான் முழுமையான வழியாகும்.

நாடு தற்போது கடுமையான பாதுகாப்பு பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ளது. இதன் மூலம் மத்திய மாநில அரசுகள் இணைந்து தங்களிடம் உள்ள பாதுகாப்பு அமைப்புகளின் உதவியுடன் அவற்றை எதிர்கொள்ள இது நமக்கு சரியான சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. பயங்கரவாதிகள் சில நேரங்களில் வெற்றி பெறலாம். ஆனால் நாம் எப்பொழுதுமே வெற்றி பெற முடியும்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்துவதற்கு நான் அதிக அளவில் முக்கியத்துவம் எடுத்து வருகின்றேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழகத்தில் முதலீடுகள் அதிகரித்துள்ளதற்குக் காரணம் தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் அமைப்புகளை நவீனமயமாக்கியதுடன் அதனுடைய தகுதியையும் மேம்படுத்தியதுதான் காரணமாகும்.

*“தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் நிருவாக மூலக்காரணம் இதுதான். அனைத்து நிருவாக நடைமுறைகளிலும், அனைத்து நிலைகளிலும் சிறப்பான தெளிவான நிருவாக நடைமுறைகளை செயல்படுத்தி வருகிறோம். இதன் மூலம் ஒவ்வொரு தனி மனிதனும் தன்னுடைய தகுதிகளை உயர்த்திக் கொள்வதுடன் எங்கெங்கு வாய்ப்புகள் உள்ளது என்பதை தெரிந்து கொள்ள இயலும்.”*

இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ் நாட்டில்தான் அனைத்து மகளிர் அடங்கிய கமாண்டோ படை உருவாக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நல்ல நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண், பெண் இன வேறுபாடுகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவே 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.



மத்திய அரசுடன் நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டுக்கு இணைந்து பணியாற்ற என்னுடைய தலைமையிலான அரசு உறுதி பூண்டுள்ளதை இந்த நல்ல நேரத்தில் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். இராணுவம் மற்றும் முக்கியமான துறைகளைத் தவிர அனைத்து துறைகளையும் மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டும் என்ற சர்க்காரியா கமிஷனின் பரிந்துரையை என்னுடைய தலைமையிலான அரசு முழு மனதுடன் ஏற்றுக் கொள்கின்றது.

பொதுமக்கள் ஒத்துழைப்பின்மை, மனித உரிமைகள் மதிக்கப்படாத நிலை, சமுதாயம் நலிந்த நிலையில் இருப்பது, தகவல் பரிமாற்றமின்மை மற்றும் வாய்ப்புக்களின்மை ஆகியவை உள்ள சூழ்நிலையில் வளர்ச்சி என்பது எட்டாக் கனித்தான். நல்ல நிருவாகம் என்பது தற்போது மின்னணு நிருவாகத்தின் மூலம் தான் சிறப்பாகச் செயல்படுத்த முடியும் என்பது நிருபணமாகியுள்ளது.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் நிருவாக மூலக்காரணம் இதுதான். அனைத்து நிருவாக நடைமுறைகளிலும், அனைத்து நிலைகளிலும் சிறப்பான தெளிவான நிருவாக நடைமுறைகளைச் செயல்படுத்தி வருகிறோம். இதன் மூலம் ஒவ்வொரு தனி மனிதனும் தன்னுடைய தகுதிகளை உயர்த்திக் கொள்வதுடன் எங்கெங்கு வாய்ப்புகள் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள இயலும்.

சிறந்த நிருவாக நடைமுறைகளின் மூலம் சிறப்பான பொருளாதார வளர்ச்சி தன்னிறைவு மக்களிடையே சுயதைரியம் மற்றும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை தற்போது நாம் எல்லோரும் புரிந்து கொண்டுள்ளோம். மாநிலங்களுக் கிடையேயான குழு சிறப்பான நிருவாகத்தை தருவதற்கு சில அடிப்படையான துறையில் மாற்றங்களைச் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

அவற்றில் மத்திய அரசு பணிகள், தேர்தல் நடைமுறைகள், சட்டம் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள், பொருளாதாரம் மற்றும் சீர்திருத்த நடவடிக்கை இன்னும் இதுபோன்ற பல்வேறு நடவடிக்கைகள் உள்ளன. இதனைச் செயல் படுத்துவதற்கு திடமான, தைரியமான நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றது. மேலும் சிறப்பான நிருவாகத்தை உருவாக்குவதற்கு சுத்தமான, வெளிப்படையான, திறமையான மற்றும் பொறுப்புள்ள அரசு அவசியமாகின்றது.

மத்திய அரசுப் பணிகளில் சீர்திருத்தம் என்பது மிகவும் முக்கியமானதாகும். இதன் மூலம் மக்களுக்கு தரமான சிறந்த பணிகளை வழங்குவதற்கு முடியும்.

இதன் மூலம் மக்களுக்கு பணியாற்ற தலைசிறந்த, நல்ல திறமையான அர்ப்பணிப்போடு கூடிய நல்ல அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு இந்தச் சீர்திருத்தம் உதவும் என்றும் நம்புகிறேன். இதன் மூலம் சிறந்த தன்னாட்சிப் பெற்ற அமைப்பும் சிறப்பான செயல்பாடுகளுடன் உருவாவதுடன் தேவை யில்லாதவைகளும் அகற்றப்படும். இந்தச் சீர்திருத்தங்களின் மூலம் அதிகாரிகளின் ஆளுமை உணர்வு அதிகரிப்பதுடன் அவர்கள் தங்களுடைய திறமைகளை வளர்த்துக் கொள்ளுவதற்கு தேவையானப் பயிற்சி, திறம்படச் செயலாற்றுவதற்கு தேவையான தகுதிகள் மற்றும் சக்தியைப் பெறுவதற்கும் இது உதவும்.

நிருவாகத்தில் சீர்திருத்தங்களை செயல் படுத்துவது பற்றி பேசுகின்றோம். ஆனால் மத்திய, மாநில அரசுகளுக்கிடையேயான நிதி பரிவர்த்தனைகள் மற்றும் அதிகாரத்தைப் பரவலாக்கும் திட்டங்கள் இன்னும் செயல்படுத்தாமலேயே உள்ளன என்பது குறித்து அக்கறை கொள்வதில்லை. திட்டக்குழு மூலம் மத்திய அரசு திட்டமிடுதல், அளவிற்கதிகமான அதிகாரங்கள் மத்தியில் குவிந்து கிடப்பது மற்றும் மாநில அரசுகள் மேற்கொள்வதற்கு மிகப்பெரிய தடையாக உள்ளன.

இதில், வேடிக்கை என்னவென்றால் மத்திய அரசிடம் உள்ள அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு பிரித்துக்கொடுப்பது குறித்து உதட்டளவில் மட்டுமே பேசி வருகின்றனர். ஆனால் நடப்பில் நேர் எதிர்மாறான சூழ்நிலை நிலவிவருவதை நாம் எல்லோரும் அறிவோம். கடந்த தேசிய குழுக்கூட்டத்தில் மாநிலங்களுக்கு மத்திய அரசு தரவேண்டிய நிதியை உடனடியாக மாநில நிதித் தொகுப்புக்கு நடப்பு திட்டக் காலத்திலேயே தருவதாக உறுதியளிக்கப்பட்டது. ஆனால் நடப்பு நிதியாண்டு முடிவதற்கு இன்னும் 6 மாதங்கள் கூட இல்லாத நிலையில் தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் ஒரு மனதாக எடுக்கப்பட்ட இந்த முடிவு மாற்றப்பட்டுள்ளது. மாநில அரசுகள் மத்திய அரசுக்கு நம்பிக்கைக்கு உரியனவாக இல்லையா?

தமிழ்நாடு அரசு ஏற்கெனவே உள்ள சட்டங்கள் மற்றும் நிருவாக நடைமுறைகளை ஒருங்கிணைத்து முறைப்படுத்த தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தகவல் தொழில்நுட்பம் மக்களுக்கும் தகவல் பரிமாற்றத்திற்கும் இடையே பாலமாகச் செயல்பட்டு வருகின்றது. நாங்கள் கணினி சார்ந்த கல்வியறிவை மாநிலத்திலுள்ள மக்கள் அனைவருக்கும் வழங்கும் வகையில் மிக அதிகளவில்

*தமிழ்நாடு அரசு ஏற்கெனவே உள்ள சட்டங்கள் மற்றும் நிர்வாக நடைமுறைகளை ஒருங்கிணைத்து முறைப்படுத்த தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தகவல் தொழில்நுட்பம் மக்களுக்கும் தகவல் பரிமாற்றத்திற்கும் இடையே பாலமாகச் செயல்பட்டு வருகின்றது. நாங்கள் கணினி சார்ந்த கல்வியறிவை மாநிலத்திலுள்ள மக்கள் அனைவருக்கும் வழங்கும் வகையில் மிக அதிகளவில் முதலீடுகளை செய்துள்ளோம். பல்வேறு செயல் பாடுகள் ஒருங்கிணைந்த நிர்வாக நடைமுறைகள் மற்றும் சேவைகளுக்கு கணினியை பயன்படுத்தி வருகின்றோம்.*

முதலீடுகளை செய்துள்ளோம். பல்வேறு செயல் பாடுகள் ஒருங்கிணைந்த நிருவாக நடைமுறைகள் மற்றும் சேவைகளுக்கு கணினியைப் பயன்படுத்தி வருகின்றோம்.

முந்தைய தி.மு.க. அரசு உருவாக்கியிருந்த கடுமையான நிதிச் சிக்கலை தீர்ப்பதற்காக என்னுடைய தலைமையிலான அரசு தைரியமான, திடமான வளர்ச்சி சார்ந்த நிதி சீர்திருத்தத்தை செயல்படுத்தி வருகின்றது. இதன் ஒரு பகுதியாக சம்பளம் வழங்குவதை கட்டுக்குள் கொண்டு வருவது, தொழிலாளர்களுக்கு வழங்கும் இழப்பீடு மற்றும் ஓய்வூதியம், கடன்கள் மீதான பளுவைக் குறைப்பது மற்றும் மானியங்களை சீரமைப்பது ஆகியவை அடங்கும். மாறி வரும் சூழ்நிலைக்கேற்ப நிருவாக நடைமுறைகளை பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை நான் மேற்கொண்டு வருகின்றேன்.

மாநிலங்களின் நிதிநிலைமை குறித்து கடந்த அக்டோபர் மாதம் பிரதமர் தலைமையில் நடைபெற்ற மாநில முதல்வர்களின் மாநாட்டில் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் தேவையான

நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து தெரிவித்தேன். நிதி சீர்திருத்தங்களை செயல்படுத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்வது நமது கடமையாகும். இந்த விஷயத்தில் தொடர்ந்து மவுனமாக இருப்பது மிகுந்த அதிருப்தியை உருவாக்குகின்றது.

நிதிச் சீர்திருத்தத்தை மாநில அரசுகள் செய்யும்பொழுது ஏழை – எளிய மக்கள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களின் நிலையை கருத்தில் கொள்ளாமல் செய்ய முடியாது. நிதி சீர்திருத்தத்தை செயல்படுத்துவதில் மத்திய அரசின் பங்கு மிகப்பெரியது. இதனைச் செயல்படுத்துவதில் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு முன் மாதிரியாக விளங்கவேண்டும் . இதனைச் செயல்படுத்துவதற்கு மாநில அரசுகளுக்கு நெறிமுறைகளை வகுத்துக் கொடுத்து, அதற்குத் தேவையான நிதி ஆதாரங்களையும் வழங்க வேண்டும்.

மாநில அரசுகள் தங்களுடைய நிதி சீர்திருத்தத்திற்கு தேவையான நிதியை திரட்டுவதை யாரும் தடுக்க நினைக்கக்கூடாது. வெளிப்படையான நிதி சீர்திருத்தத்தை மாநில அரசுகள் செயல்படுத்துவதற்கு தேவையான வாய்ப்புகள் இன்னும் வழங்கப்படவில்லை. மேலும் அரசு ஊழியர்களின் எண்ணிக்கையை கட்டுக்குள் வைப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். இது மிகவும் முக்கியமான ஒன்று. இதனை நீண்ட காலத்திற்கு தள்ளிப்போட முடியாது. மேலும் வருவாயில் எத்தனை சதவீதம் சம்பளத்திற்கும் ஓய்வூதியத்திற்கும் ஒதுக்க வேண்டும் என்பது குறித்து ஒரு முக்கியமான முடிவு எடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். மேலும் பொது நிதியில் செலவழிக்கப்படும் செலவுகள் குறித்து சில கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய நிலை தற்போது உள்ளது.

மேலும் அரசு நிருவாகத்தை சீரமைப்பதற்கு தேவையான உதவியை மாநில அரசுகளுக்கு மத்திய அரசு வழங்கி இதனைச் செயல்படுத்தவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்க வேண்டும். ஒப்பந்த தொழிலாளர்கள் குறித்த பிரச்சினை தற்போது எழுப்பப்பட்டுள்ளது. ஒப்பந்த தொழிலாளர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்த தெளிவாகத் திட்டம் வகுக்கப்படவில்லை என்று நான் அச்சப்படுகின்றேன். இந்த நேரத்தில் தொழிலாளர் சட்டம் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை மறுபரிசீலனை செய்வதன் மூலம் புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தர இயலும். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள சட்டங்கள் உற்பத்தி வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புக்கு எதிராக உள்ளன.

புதிய கொள்கைகளை உருவாக்குவதன் மூலம் அதிகமான வேலைவாய்ப்புக்களை உருவாக்கித் தர இயலும். உண்மையான அரசியல், கூட்டாட்சி, அரசியல் அமைப்பு சட்ட முரண்பாடுகள், இரட்டை அரசியல் நிலை கூட்டாட்சி, குறைபாடுகள், அரசியலமைப்பு முரண்கள், கோரிக்கைகள் மற்றும் மூதாதையர்களுக்கு மரியாதை செலுத்துவது ஆகியவை நம்மிடையே நிலவுகின்றன. எப்போதுமே துரதிருஷ்டவசமாக இந்தியாவில் அதிகார பரவலாக்கத்தை முழுமையாக, நிதி வளர்ச்சி மற்றும் அரசியல் நடைமுறைகளின் முழுதன்னாட்சிப் பெறும் வகையில் செயல்படுத்த வில்லை. மாநிலங்கள் மத்திய அரசிடம் நிலாவைப் பிடித்துத் தரும்படி கேட்கவில்லை.

மாறாக எல்லா மக்களுடைய மேம்பாட்டிற்கு செய்யப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அனைவருடைய பங்களிப்பும் அவசியம் என்பதைத்தான் வலியுறுத்துகிறோம்.

லோகாயுத வரலாற்றில் தர்க்க சாஸ்திரத்தை படித்தோமென்றால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தர்க்க சாஸ்திரம் மற்றும் சலன சாஸ்திரத்தில் இந்திய ஜனநாயகம் வலிமையானதாக இருக்க வேண்டுமென்றால், பலமான மத்திய அரசைப் போன்று, வலிமையான மாநில அரசுகளும் அதிக அதிகாரங்களுடன் ஜனநாயக முறைப்படி அமைய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது சுவர்களில் மட்டுமே இந்த வாசகத்தை பார்க்க முடிகிறது. பிரதமர் அவர்களே இதுதான் சரியான தருணம். பொதுமக்களின் நலன்களுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் அரசியலமைப்பு சட்டத்தை செயல்படுத்த தேவையான செயல் திட்டத்தை உருவாக்க வேண்டிய முக்கியமான காலகட்டத்தில் நாம் தற்போது உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*– 27.8.2003 அன்று ஸ்ரீநகரில் நடைபெற்ற மாநிலங்களுக்கிடையேயான வேது மன்றக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பில் கலந்து கொண்டு மாண்புமிகு நிதியமைச்சர் திரு.சி. பொன்னையன் அவர்கள் வாசித்த உரை.*

# இந்தியாவிலேயே முதன்முறையாக ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம்






மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.8.2003 அன்று சென்னை கோயம்பேட்டில், இந்தியாவிலேயே முதன் முதலாக ரூ.3 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

சென்னையில் பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கையால், கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, பொதுமக்கள் பெரும் இடர்பாட்டுக்கு உள்ளாவதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னை கோயம்பேட்டில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கின்ற பணியை ஆய்வு செய்த போதே, ஒப்பந்த ஊர்திகளுக்கும் தனியாக ஒரு பேருந்து நிலையம் கட்ட வேண்டும் என்று ஆணையிட்டார்கள்.

மேலும் ஒப்பந்த ஊர்திகளுக்கான பேருந்து நிலையமும், கோயம்பேட்டில் அமைந்துள்ள சென்னை புறநகர் பேருந்துநிலையத்திற்கு அருகில் அமைந்தால்தான், பொதுமக்கள் வெளியூர்களுக்கு செல்வதற்கு வசதியாக அமையும் என்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்த அறிவுரையின்படி, சென்னை கோயம்பேட்டில், வணிக வளாகத்தில் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 3 கோடி ரூபாய் செலவில், சென்னை ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கட்டப்பட்டது. இந்தப் பேருந்து நிலையம் ஏழே மாதத்தில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பேருந்து நிலையம், நடை மேடையில் (Bus Bays) 80 பேருந்துகளும், ஒய்வுக்காக மேடையில் (Idle) 50 பேருந்துகளும் ஆக 130 பேருந்துகள் ஒரே நேரத்தில் நிற்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது. மேலும் 50 தனியார் பேருந்து ஒப்பந்த ஊர்தி நிறுவனங்கள், தங்களது அலுவலகங்களை அமைத்துக் கொள்ள இடவசதி செய்து தரப்பட்டுள்ளது. இருக்கை வசதிகளுடன் கூடிய பயணிகள் காத்திருக்கும் கூடங்கள் (Waiting Hall) குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, குளியல்அறை வசதி ஆகிய அடிப்படை வசதிகளுடன், 20 கடைகளும் இப்பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

தொலைநோக்குப் பார்வையுடன் இந்தியாவிலேயே முதன்முறையாக ஒப்பந்த ஊர்திகளுக்கு ஒரு பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுத்தது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தான் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய சிறப்புகள் மிகுந்த சென்னை ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையத்தை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இவ்விழாவில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைவருமான திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள், போக்குவரத்துத்துறை செயலாளர் இரா. கற்பூர சுந்தரபாண்டியன் இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள், உறுப்பினர் – செயலர் திரு. பி. ஆர். சம்பத் இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர். ✱

## "தமிழ்ப் பொறி" என்னும் புதிய கணினி மென்பொருளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார்கள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.8.2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள "தமிழ்ப் பொறி" என்னும் புதிய கணினி மென்பொருளை வெளியிட்டார்கள்.

தமிழ்நாடு அரசு, தமிழ் மென்பொருள் வல்லுநர்கள் மூலம் கணிப்பொறி மற்றும் இணையத்திற்குத் தேவையான தமிழ் மென்பொருள் உருவாக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் இத்திட்டத்தின் செயலாக்கத்தை மேலாண்மை செய்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் Ultimate Software Solutions என்னும் நிறுவனம், ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்ய வல்ல ஒரு தமிழ்மென்பொருளை, தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் தமிழ்மென்பொருள் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 4 இலட்சம் உதவித்தொகை பெற்று வடிவமைத்து வழங்கியுள்ளது. "தமிழ் பொறி" என்னும் இந்த மென்பொருள், கணினி வல்லுநர்களால் முறையாகச் சோதிக்கப்பட்டு, தமிழக அரசால் ஏற்கப்பட்டுள்ளது.

ஆங்கிலத் தொடர்களைத் தமிழில் மொழி பெயர்க்க வல்ல "தமிழ்ப்பொறி" மென்பொருள், நேர்த் தொடர்கள் (Assertive) வினாத் தொடர்கள் (Interrogative) ஏவல் தொடர்கள் (Imperative) போன்ற தொடர்களை மொழி பெயர்க்கும். இது சொற்றொடர் கூறுகளைப் பிரிக்கும் காற்புள்ளி, அரைப்புள்ளி, இடைவெளி போன்றவற்றைப் புரிந்து கொண்டு மொழி பெயர்க்கும். சில கலவை வாக்கியத் தொடர்களையும் இது மொழி பெயர்க்க வல்லது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வெளியிட்டுள்ள இந்த மென்பொருள், ஆங்கில மொழி அறிந்த மாணவர்கள் தமிழ் பயில்வதற்கு மிகவும் உதவிகரமாக அமையும். தமிழ் பயிலும் ஆங்கில மாணவர்கள் ஆங்கிலத் தொடருக்கு இணையான தமிழ்மொழி பெயர்ப்பை இந்த மென்பொருள் மூலம் பெற்றுப் பயனடையலாம்.

இந்த நிகழ்வின்போது மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், தகவல் தொழில்நுட்பவியல் துறைச் செயலாளர் திரு. விவேக் ஹரிநாராயண் இ.ஆ.ப., மென்பொருளைத் தயாரித்து அளித்துள்ள Ultimate Software Solution நிறுவனத்தின் தலைவர் திரு. ஆர். துரைப்பாண்டி ஆகியோர் உடன் இருந்தனர்.

* * *

# குடிசை வாழ் மக்களுக்கான அடுக்கு மாடிக் குடியிருப்புகள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.8.2003 அன்று சென்னை நுங்கம்பாக்கம் மூர்ஸ் சாலையில் அமைந்துள்ள சுதந்திர நகரில் 7.13 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள குடிசை வாழ் மக்களுக்கான 576 அடுக்குமாடிக் குடியிருப்புகளை திறந்து வைத்தார்கள்.

சென்னை மாநகராட்சியின் 109–ஆவது கோட்டத்தில் உள்ள சுதந்திர நகர் குடிசைப் பகுதியில் சுமார் 570 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எந்த அடிப்படை வசதியும் இன்றி வாழ்ந்து வந்தனர். அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்பட்டு, உயிர்ச்சேதமும், பொருட் சேதமும் அடைந்த இந்தப் பகுதி குடிசைவாழ் மக்களுக்கு ரூ.7.1 கோடி ரூபாய் செலவில் 576 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டித்தர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்தார்கள். இப்பகுதியில் இருந்த குடிசைகள் அகற்றப்பட்டு, அங்கு வசித்த மக்களுக்கு தற்காலிக மாற்று இடங்கள் அளிக்கப்பட்டு, 1.3.2002 அன்று தொடங்கப்பட்ட அடுக்குமாடி கட்டும் பணி தற்போது நிறைவடைந்துள்ளது. இந்தப் பகுதியில் வசித்து வந்த குடிசைவாசிகளுக்கு, இந்தக் குடியிருப்புகள் தவணை முறைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப் படுகிறது. குடியிருப்புதாரர்களிடமிருந்து மாதம் ரூ.250 வீதம் தவணைத் தொகையாக 20 ஆண்டுகள் வசூலித்த பின்னர் குடியிருப்புகள் அவர்களுக்கே உரிமையாக்கப்படும்.

ஒவ்வொரு குடியிருப்பும் 21.90 சதுர மீட்டர் கட்டட பரப்பு கொண்டதும், தண்ணீர் வசதி, கழிவுநீர் அகற்று வசதி, சாலைவசதி, தெருவிளக்கு, சிறுவர் விளையாட்டுத் திடல், பூங்கா மற்றும் நிழல் தரும் மரங்கள் என அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடியதும், கட்டடத்தின் மேற்கூரையில் பெறப்படும் மழை நீரை, ஆழ்துளைக் கிணறுகளில் சேகரிக்கும் வகையில், மழை நீர் சேகரிப்பு அமைப்பு கொண்டதுமான, 576 அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 25.8.2003 அன்று திறந்து வைக்கப்பட்டது.

### சுதந்திர நகர் திட்டம்

சுதந்திர நகர் திட்டம், சென்னை மாநகராட்சி 109ஆவது கோட்டத்தில் நுங்கம்பாக்கத்திலுள்ள மூர்ஸ் சாலையில் அமைந்துள்ளது. இந்தக் குடிசைப் பகுதியில் 570 குடும்பங்கள் எந்த அடிப்படை வசதியும் இன்றி வாழ்ந்து வந்தனர். இந்த குடிசைப் பகுதியில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்பட்டு அதனால் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டுள்ளது. கடைசியாக இப்பகுதியில் 1998ஆம் ஆண்டு பெரிய அளவில் தீ விபத்து ஏற்பட்டது.

சுதந்திர நகர் குடிசைப்பகுதி அமைந்துள்ள இடம் பொதுப்பணித்துறை, கல்வித்துறை ஆகிய துறைகளுக்கு உரிமையானதாக இருந்தது. அவ்விரு துறைகளும் தங்களது நிலத்தினை குடிசை வாழ்வோருக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட வாரியத்திடம்



ஒப்படைத்தன. அரசு 2001–2002ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ரூ. 7.13 கோடி செலவில் 576 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

திட்டப்பகுதியில் பணிகள் துவக்குவதற்கு முன்னோடியாக, சுதந்திர நகர் குடிசைப் பகுதியில் இருந்த குடிசைகள் அகற்றப்பட்டு அங்கு வாழ்ந்து வந்த மக்களுக்கு ஆண்டர்சன் சாலையோரமும், கல்லூரி சாலையில் உள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான காலி இடத்திலும் தற்காலிக மாற்று இடங்கள் வழங்கப்பட்ட பின்னர் திட்டப்பணி 1–3–2002 அன்று துவக்கப்பட்டது.

**திட்டப்பணிகள் விவரம்**

**1. அடுக்குமாடி குடியிருப்புகள்**

அ. ஒவ்வொரு வீடும் ஒரு பல்நோக்கு அறை, ஒரு சமையலறை மற்றும் ஒரு கழிவறை கொண்டதாகும்.

ஆ. ஒவ்வொரு குடியிருப்பும் 21.90 சதுர மீட்டர் கட்டடப் பரப்பு கொண்டதாகும்.

இ. ஒவ்வொரு குடியிருப்பும் ரூ.1,23,800 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இத்தொகை அடிப்படை வசதி மற்றும் மேம்பாட்டுச் செலவினம் உள்ளடங்கியதாகும்.

**2. தண்ணீர் வசதி**

அ. சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் நீர் பெறப்பட்டு பொதுக்குழாய்கள் வழியாக குடியிருப்புதாரர்களுக்கு வழங்கப்படும்.

ஆ. நான்கு ஆழ்குழாய் கிணறுகள் மூலம் பெறப்படும் தண்ணீர் நிலத்தடி தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு பிற பயன்களுக்கு மேல்நிலைத் தொட்டிகள் மூலம் ஒவ்வொரு குடியிருப்பிற்கும் விநியோகிக்கப்படும்.

**கழிவு நீர் வசதி**

வீடுகளிலிருந்து வரும் கழிவு நீர், குழாய்கள் மூலமாக, மூர்ஸ் சாலையில் அமைந்துள்ள சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் கழிவுநீர் குழாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**சாலை வசதி**

திட்டப் பகுதியில் உள்ள சாலைகள் சரளைக் கற்கள் மற்றும் செம்மண்ணால் பரப்பப்பட்டு அதன் மேல் தார்ச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

**நடைபாதை**

கட்டடத்தைச் சுற்றி சிமெண்ட் நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**தெருவிளக்கு**

திட்டப் பகுதியில் 17 தெருவிளக்குகள் ரூ. 1.52 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

**மழைநீர் சேகரிக்கும் அமைப்பு**

நிலத்தடி நீர் வளத்தினை அதிகப்படுத்துவதற்காக மேற்கூரையில் பெறப்படும் மழைநீர் ஆழ்துளைக் கிணறுகளில் சேகரிக்கப்படுகிறது.

**சிறுவர் விளையாட்டு திடல்**

இத்திட்டப்பகுதியில் சிறுவர்களுக்கான விளையாட்டுத்திடல் இரு இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன.

**பூங்கா மற்றும் நிழல் தரும் மரங்கள்**

திட்டப்பகுதியின் மையப்பகுதியில் ஐந்து மனை நிலப்பரப்பில் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 190 நிழல் தரும் மரங்கள் திட்டப்பகுதியின் சாலையோரங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

**கடைகள்**

இத்திட்டப் பகுதியில் குடியிருப்புதாரர்களின் தேவைக்கு எட்டு சிறுகடைகள் கட்டப்பட உள்ளன.

**ஒதுக்கீடு**

குடியிருப்புகள் இந்தப் பகுதியில் வசித்து வந்த குடிசைவாசிகளுக்கு தவணைமுறைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும். குடியிருப்புதாரர்களிடம் மாதம் ரூ. 250 வீதம் தவணைத்தொகையாக 20 வருட காலம் வசூலித்த பின்னர் குடியிருப்புகள் அவர்களுக்கு உரிமையாக்கப்படும்.

* * *



# கூட்டுறவுத் துறைக்கென புதிய இணையதளம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 14.8.2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறைக்கென வடிவமைக்கப்பட்டுள்ள புதிய இணையதளத்தைத் தொடங்கி வைத்தார்கள். இந்தக் கூட்டுறவு இணையதளத்தின் முகவரி http://www.tncu.tn.gov.in ஆகும்.

மக்கள் நலனை முன்னிறுத்தி தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளும் ஒளிவு மறைவற்று வெளிப்படையாக இருந்திட வேண்டும் என்னும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் நோக்கத்தின் அடிப்படையில், அரசின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் யாவும் மக்களைச் சென்றடைய, தகவல் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்தி அரசின் துறைகள் தோறும் புதிய இணைய தளங்களைத் தமிழக அரசு உருவாக்கி வருகின்றது. இந்த வகையில், தமிழ்நாடு கூட்டுறவுத் துறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் எளிதில் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் புதிய கூட்டுறவு இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டுறவு இணையதளத்தில் கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு, துறையின் பரிணாம வளர்ச்சி, சாதனைகள், திட்டங்கள் ஆகியவையும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

வேளாண் பெருங்குடி மக்களுக்கு வழங்கப்படுகின்ற கூட்டுறவுக் கடன் வசதிகள், மகளிர் மேம்பாட்டுக்கு வழங்கப்படும் கடன் உதவிகள், பொதுவான கடன் உதவிகள், அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும் கால அளவு, வட்டி விகிதம் ஆகியவை குறித்த தகவல்கள் இந்த இணைய தளத்தில் இடம் பெற்றுள்ளன. இந்த கடன் வசதிகளை எங்கு, எவ்விதம், யாரிடம் தொடர்பு கொண்டு பெறுவது என்பது குறித்து விவரமாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும், நபார்டு வங்கி அறிமுகப்படுத்தி உள்ள விவசாய கடன் அட்டைத் திட்டம், தேசிய விவசாய பயிர் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றின் நடைமுறை பற்றியும், விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவற்றை வாங்குதல், வேளாண் விளை பொருட்களை நல்ல விலைக்கு விற்றுத் தருதல் போன்ற சேவைகள் தொடர்பாகவும் இதில் விளக்கமாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட சிறுதேயிலை உற்பத்தியாளர்களின் துயரைப் போக்குவதற்கு "ஊட்டி டீ" தூளை விற்பனை செய்தல், காதி உற்பத்தி செய்யும் பொருட்கள், நெசவாளர்களின் துயரை நீக்குவதற்காக மலிவு விலை வேட்டி, சேலை போன்றவற்றின் விற்பனை பற்றிய தகவல்கள், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் புதிய குடும்ப அட்டை பெறுவதற்குரிய மாதிரி விண்ணப்பப் படிவம் போன்றவை இந்த இணையதளத்தில் இடம் பெற்றுள்ளன.

மொத்தத்தில், வேளாண் பெருங்குடி மக்களும், பொதுமக்களும், மாணவ மாணவிகளும் கூட்டுறவு தொடர்பான அனைத்து தகவல்களையும் முழுமையாகப் பெறும் வகையில் இந்த இணையதளம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

இந்தக் கூட்டுறவு இணையதளத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, கூட்டுறவுத் துறையினரின் இந்த முயற்சியைப் பாராட்டி தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு கூட்டுறவு மற்றும் உணவுத் துறை அமைச்சர் திரு. ப. மோகன், தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ராணேஷ் இ.ஆ.ப., கூட்டுறவுத் துறைச் செயலாளர், திரு. எஸ். இராம கிருஷ்ணன் இ.ஆ.ப., கூட்டுறவுத் துறை சிறப்புச் செயலாளர் திரு.எஸ்.மச்சேந்திரநாதன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. ரமேஷ்ராம் மிஸ்ரா இ.ஆ.ப. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் திரு.ஏ.எஸ். கோவிந்தராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

# கோ-ஆப்டெக்ஸ் மூலம் புதிய வடிவமைப்பில் பட்டு, பருத்தி சேலைகள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 14.8.2003 அன்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி, துணி நூல் துறையைச் சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மூலம் பட்டு, பருத்தி ஆகிய ரகங்களில் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள 300 புதிய வடிவமைப்புச் சேலைகளையும், (300 Designer Sarees both in Silk and Cotton) புதுவகை பாலிகாட் சேலைகளையும், நவீன ரக சல்வார் கமீஸ் வகைகளையும் அறிமுகப்படுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட கைத்தறித் துறையின் மீதான ஆய்வின்போது, கைத்தறி கூட்டுறவு சங்கங்களிலும், கடைகளிலும் அதிக அளவு சேலைகள் தேங்கி இருப்பதன் காரணம் போதுமான புதிய வடிவமைப்புகள் இல்லாமல் பழைய டிசைன்களிலேயே தொடர்ந்து சேலைகள் தயாரிக்கப்பட்டு வருவதே என்பது கண்டறியப்பட்டது. மேலும், கூட்டுறவு சங்கங்கள் மூலம் தயாரிக்கப்படும் சேலைகள் தற்போதைய சந்தை நிலவரத்திற்கு ஈடுகொடுக்க முடியாதபடி புதிய பாணிக்குப் பொருந்தாத வகையில் மிகவும் புராதன வடிவமைப்புகளாக இருப்பதுடன், சாதாரணமான எவரும் வாங்க முடியாத அளவுக்கு விலை அதிகமாக இருந்ததையும் அறிந்து, இந்த நிலையை மாற்றி, புதிய புதிய வடிவமைப்புகளுடன் சாதாரண மக்களும் வாங்குகின்ற வகையிலான சேலைகளை உற்பத்தி செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். மேலும் புதிய வகை பாலிகாட் சேலைகள் மற்றும் ஆடைகளை அறிமுகப்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று, எல்லாத் தரப்பு மக்களும் ஏற்று விரும்பி வாங்குகின்ற வகையில், புதிய வடிவமைப்புச் சேலைகளை கைத்தறி கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து தேசிய அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் (National Institute of Fashion Technology) தேசிய வடிவமைப்பு நிறுவனம் (National Institute of Design) கோ-ஆப்டெக்ஸ் கணினி வடிவமைப்பு மையம் (Co-optex Computer Design Centre) ஆகியவற்றின் துணையுடன் பட்டு மற்றும் பருத்தி ரகங்களில் தயாரிக்கப்பட்ட 300 புதிய வடிவமைப்புச் சேலைகளையும், 100 புதிய வகை பாலிகாட் சேலைகளையும் புதிய வடிவமைப்புடன் உற்பத்தி செய்யப் பட்டுள்ள சல்வார் கமீஸ் வகைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 14.8.2003 அன்று அறிமுகப் படுத்தினார்கள்.

கல்லூரி மாணவிகள் மற்றும் இளைய தலைமுறை பெண்களின் தேவையைக் கருத்தில் கொண்டு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 8,000 சல்வார் கமீஸ் உடைகளை வடிவமைத்து, தயாரித்து கொள்முதல் செய்துள்ளது. ரூ.159.50 மதிப்புள்ள இந்த வகை சல்வார் கமீஸ் ஆடைகள் செட் ஒன்று ரூ.100க்கு சலுகை விலையில் விற்பனை செய்யப்பட உள்ளது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் திரு.வி. சோமசுந்தரம், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ் இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணி நூல் ஆணையர் செல்வி. லீனாநாயர், கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு.விஸ்வநாத் ஷெகாவ்கர் ஆகியோர் உடனிருந்தனர். ✱

# ஒட்டப்பிடாரத்தில் மகளிர் கல்லூரி




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 14.8.2003 அன்று தலைமைச் செயலகத்தில் தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் நாகம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட புதிய கல்லூரியான மனோ கல்லூரியின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்கள்.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஒட்டப்பிடாரம் பகுதியில், பதினொன்றுக்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்ற போதிலும் கல்லூரிகள் எதுவும் இல்லை. கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள இப்பகுதியில் ஒரு கல்லூரி அமைத்திட வேண்டுமென்பது இப்பகுதி மக்களின் நெடுநாள் கோரிக்கை ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்நிலையை அறிந்து இப்பகுதி மீது மிகுந்த அக்கறை கொண்டு நடப்பு கல்வி ஆண்டிலேயே ஒரு கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டார்கள்.

இந்த ஆணையின்படி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் சார்பில் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் நாகம்பட்டி கிராமத்தில் மனோ கல்லூரி என்ற புதிய கல்லூரி அமைக்கப்பட்டு கடந்த ஜூலை 4ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

பி.காம், பி.பி.ஏ., பி.எஸ்.சி (கணிதம்) ஆகிய மூன்று இளங்கலை பட்டப்படிப்புகள் இந்தக் கல்லூரியில் இடம் பெற்றுள்ளன. இதில் பி.காம் வகுப்பில் 64 பேர்களும், பி.பி.ஏ., வகுப்பில் 42 பேர்களும், பி.எஸ்சி (கணிதம்) வகுப்பில் 37 பேர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கையில் 60 விழுக்காடு பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கல்லூரியில் 27 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டப்பட உள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 14.8.2003 அன்று தலைமைச்செயலகத்தில் இந்த வகுப்பறைகள் அமைய உள்ள புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும் இக்கல்லூரி அமைவதற்கான 31.82 ஏக்கர் நிலம் நன்கொடையாக பெறப்பட்டு உள்ளது. இதில், நாகம்பட்டியைச் சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.வி.வேணு கோபாலகிருஷ்ணசாமியின் புதல்வர் திரு. என்.வி. சீனிவாசன் 17 ஏக்கர் நிலத்தையும், காலஞ்சென்ற ஆர். கனகராஜின் மனைவி திருமதி சுமிரா 10.82 ஏக்கர் நிலத்தையும், திரு. சங்கரரெட்டியாரின் புதல்வர் திரு.எஸ். காளியப்ப ரெட்டியார் 4 ஏக்கர் நிலத்தையும் நன்கொடையாக வழங்கி உள்ளனர். கல்லூரியின் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. சிவபெருமாள் தனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 20 இலட்சம் வழங்கி உள்ளார்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் திரு. எஸ். செம்மலை, தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., உயர் கல்வித்துறை செயலாளர் திரு. வி.கே.சுப்புராஜ் இ.ஆ.ப., தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க. ராஜாராம், இ.ஆ.ப., மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கு.சொக்கலிங்கம், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.சிவபெருமாள் மனோ கல்லூரியின் முதல்வர் திருமதி. சுகுணா மற்றும் நன்கொடையாளர்கள் திரு. என்.வி. சீனிவாசன், திரு. காளியப்ப ரெட்டியார் ஆகியோர் உடனிருந்தனர்.

* * *



# தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் துப்புரவுப் பணி தனியார் மயமாக்கும் திட்டம்

திடக்கழிவு மேலாண்மை மற்றும் துப்புரவுப் பணி தனியார் மயமாக்கும் திட்டம், ஒரு மக்கள் இயக்கமாக மலரவேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பமாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த சீரிய நோக்கத்திற்கு செயல்வடிவம் தரும் வகையில், கிருஷ்ணகிரி நகராட்சியில் 10 வட்டங்களில் துப்புரவுப் பணி தனியார் மயமாக்கும் திட்டத்தின் துவக்க விழா நடைபெற்றது.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் துப்புரவுப் பணி தனியார் மயமாக்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசும்போது, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் குறிப்பிட்டதாவது :

"மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் நகர்ப்புறங்களும் கிராமப் புறங்களும் வளர்ச்சிபெறும் வகையிலும் மக்கள் பல்வேறு வகையில் நன்மையடைகின்ற வகையிலும் சிறப்பானத் திட்டங்கள் செயல்படுத்தப் படுவதை இன்றைக்கு நாடே வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது.

இன்று கிருஷ்ணகிரி நகராட்சியில் "திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மற்றும் துப்புரவு பணி தனியார் மயமாக்கல்" என்னும் இந்த சீரிய திட்டம் செயல்வடிவம் பெறுவதற்கு காரணமாக இருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள்தான் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

மனித சமூகத்தின் நல்வாழ்விற்கும், நகர்ப்புறங்கள் கிராமங்கள் ஆகியவற்றின் தூய்மைக்கும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அவசியமாகும்.

நாடு வளர்ந்துவரும் சூழலில் நகர மயமாதல் (Urbanisation) அதிகரித்து வருகிறது. மேலும் நகரங்களில் குடியமர்கின்ற மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருவதால் சுகாதாரப் பிரச்சினை தோன்றும் அபாயம் உள்ளது.



மேலும் பிளாஸ்டிக் பொருட்களின் அளவுக்கு அதிகமான உபயோகமும், அவற்றை பயன்படுத்தி விட்டு எல்லா இடங்களிலும் வீசி எறிவதனாலும் எழுகின்ற விளைவு அபாயகரமான சுற்றுச்சூழல் பிரச்சினையை உருவாக்கக் கூடியதாக உள்ளது.

தமிழகத்தின் வளர்ச்சியையும் – மக்களின் நல்வாழ்வையும் – சுற்றுச் சூழல் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு ஆயிரமாயிரம் திட்டங்களை செயல்படுத்திவரும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், திடக்கழிவு மேலாண்மை முயற்சி – "ஒரு மக்கள் இயக்கமாக" மலரவேண்டும் என்று திட்டமிட்டு செயலாற்றி வருகிறார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு டிசம்பர் திங்கள் 11ஆம் நாள் நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் பேசிய இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் தெரிவித்த ஒரு கருத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டுவருவது எனது கடமையாகும்.

"திடக்கழிவு மேலாண்மையும் திடக்கழிவு பராமரிப்பும் முக்கிய முன்னுரிமை தந்து எடுத்துக் கொள்ளவேண்டிய பணிகளாகும்"

– என்று அப்போது குறிப்பிட்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள்,

"குப்பைக் கழிவுகளை வேறுபடுத்த புதிய முறைகளைக் கண்டறிதல், பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக கொட்ட வகை செய்தல், இத்தகைய முயற்சியில் உள்ளாட்சி நிறுவனங்களையும், அரசு சாரா அமைப்புகளையும் ஒருங்கிணைத்து ஈடுபடுத்துதல் ஆகியவற்றில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கவனம் செலுத்தவேண்டும்"

– என்று குறிப்பிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த கருத்து, இன்றைக்கு கிருஷ்ணகிரி நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

கிராமங்களையும் நகராட்சிகளையும் மாநகராட்சிகளையும் தூய்மைப்படுத்தும் ஒரு சிறப்பான திட்டமாக திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் இருப்பதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு இதில் ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளது.

இந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம், கிருஷ்ணகிரி நகராட்சிப் பகுதியில் 24 வார்டுகளில் செயல்படுத்தப்பட்டிருப்பதையும், இந்தத் திட்டத்திற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருப்பதையும் அறிந்து நான் மகிழ்கின்றேன். இந்தத் திட்டம் குறித்து மக்களிடையே மேலும் விழிப்புணர்வினை ஏற்படுத்த வகை செய்யுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகைய முயற்சியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களையும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் அரசின் ஆணைக்கேற்ப, துப்புரவுப் பணிகள் தனியார் மயமாக்கல் திட்டம் கிருஷ்ணகிரி நகராட்சியில் 10 வார்டுகளில் செயல்படுத்தப் பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

நகரிலுள்ள 5 முக்கிய நெடுஞ்சாலைகள், 2 பேருந்து நிலையங்கள் மற்றும் தினசரி அங்காடிகள் உள்ளடங்கிய வார்டுகளில், துப்புரவுப்பணி, தனியார் மயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்படுவது சிறப்புக்குரியதாகும்.

தமிழ்நாட்டில் பல நகராட்சிகளில், துப்புரவுப்பணிகளில் சிலவற்றை மட்டுமே தனியாரிடம் ஒப்படைத்து செயல்படுத்தும் நிலை உள்ளது. ஆனால் கிருஷ்ணகிரி நகராட்சியில் 10 வார்டுகளில் துப்புரவுப்பணிகள் அனைத்தும் முழுமையாக தனியாரிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பது பாராட்டுதற்குரியது.

இந்த நேரத்தில் தமிழக அரசின் திட்டங்கள் குறித்த தகவல்களை எடுத்துரைப்பது எனது கடமையாகும்.

தமிழகத்தில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் புகழ்மிக்க ஆலயங்களைக் கொண்ட உதகை, கொடைக்கானல், பழனி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, ராமேஸ்வரம், திருக்குற்றாலம் ஆகிய இடங்களுக்கான நகரங்களில் திடக்கழிவுகள் மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை, ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கும் திட்டத்திற்கு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலம் நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

## திடக்கழிவு மேலாண்மை
### முக்கியப் பணி



"திடக்கழிவு மேலாண்மையும் திடக்கழிவு பராமரிப்பும் முக்கிய முன்னுரிமை தந்து எடுத்துக் கொள்ளவேண்டிய பணிகளாகும். குப்பைக் கழிவுகளை வேறுபடுத்த புதிய முறைகளைக் கண்டறிதல், பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக கொட்ட வகை செய்தல், இத்தகைய முயற்சியில் உள்ளாட்சி நிறுவனங்களையும், அரசு சாரா அமைப்புகளையும் ஒருங்கிணைத்து ஈடுபடுத்துதல் ஆகியவற்றில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கவனம் செலுத்தவேண்டும்"

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு – அனைவருக்கும் நல்வாழ்வு என்பதில் அக்கறை கொண்டவர் என்பதற்கு அடையாளமாக நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் உருவாக்கப்பட்டுள்ள "மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள்" திகழ்கின்றன.

நாட்டின் தூய்மையிலும் சுகாதாரத்திலும் மிகுந்த ஆர்வம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தூய்மை – பராமரிப்பு பணியினை ஊக்குவிக்கும் வகையில், முழு சுகாதாரம் பெற்று திகழும் கிராமங்களுக்கு ரூபாய் 5 இலட்சம் பரிசு வழங்கும் உன்னதத் திட்டத்தை அறிவித்துள்ளார்கள்.

இதற்காக நடப்பாண்டில் ரூபாய் 75 இலட்சம் ஒதுக்கி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணைப் பிறப்பித்துள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திடக்கழிவு மேலாண்மை மற்றும் துப்புரவுப் பணி என்பது அரசுத் துறைகளால் மட்டும் அல்லது நகராட்சியால் மட்டும் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகள் என்று கருதாமல், இது மக்களுக்கும் – நாம் வாழும் பகுதிக்கு பயன்தரக்கூடிய பணி என்று கருதி – பொதுமக்கள் அனைவரும் இந்த அரியப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய திட்டமான மழைநீர் சேகரிப்பு திட்டம் குறித்து குறிப்பிடுவது எனது கடமையாகும்''.

இவ்வாறு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மு.அ. சித்திக் இ.ஆ.ப. தலைமை வகித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. பெருமாள், சட்ட மன்ற உறுப்பினர் திரு. வி. கோவிந்தராஜ், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு.முனி வெங்கடப்பன், மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர் திரு. கோ. ரவிச்சந்திரன், நகர் மன்ற துணைத் தலைவர் திரு. ஆர். பால்ராஜ், ஒன்றியக் குழு தலைவர்கள் திருமதி. ஆர். அம்சவேணி, திரு. எஸ். தென்னரசு உள்ளிட்ட பலர் விழாவில் உரை நிகழ்த்தினார்கள்.

நகர் மன்றத் தலைவர் திரு. ஏ.எஸ். சத்தியமூர்த்தி விழா துவக்கத்தில் வரவேற்புரை ஆற்றினார். நகராட்சி ஆணையர் திரு.ஆ.ப. பன்னீர்செல்வம் விழா முடிவில் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி நகராட்சியின் 10 வார்டுகளில் தனியார் மயமாக்கும் திட்டத்தின் கீழ் துப்புரவு பணியினை மேற்கொள்வதற்கான ஆணையினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி குழுவின் செயலர் திரு. ஆர். ராஜ் அவர்களிடம் வழங்கினார்.

– **தா. மனோகரன்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி

# இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் ஜரிகையின் தரத்தினைக் கண்டறியும் புதிய கருவி

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 14.8.2003 அன்று தலைமைச் செயலகத்தில், பட்டுப்புடவையில் பயன்படுத்தப்படும் ஜரிகையின் தரத்தினை கண்டறியும் புதிய கருவியினைத் தொடங்கி வைத்தார்கள். X-ray Fluorescence Analyzer என்னும் இந்த புதிய கருவி இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழகத்தில்தான் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் தயாரிக்கப்படும் பட்டுப்புடவைகளின் வடிவமைப்பில் ஜரிகை முக்கிய இடம் பெறுகிறது. பட்டுப்புடவையின் விலையை நிர்ணயிப்பதில் ஜரிகையின் அளவும், தரமும் முக்கியப் பங்காற்றுகிறது. பாரம்பரியமாக சுத்தமான பட்டும், உயர்ரக ஜரிகையும் மட்டுமே பயன்படுத்தப்படுவதால், காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் உலகம் முழுவதும் புகழ்பெற்று விளங்குகின்றன. ஆனால், அண்மைக் காலமாக மலிவான போலி வகை ஜரிகைகள் பட்டுச்சேலை நெசவில் பயன்படுத்தப்பட்டு, சற்றே விலை குறைவாக வைத்து இத்தகைய சேலைகள் விற்கப்படுகின்றன. சாதாரண நுகர்வோர்களுக்கு இந்த வித்தியாசம் தெரிவதில்லை. இதன் மூலம், நுகர்வோர் ஏமாற்றப்படுவது மட்டுமல்லாமல், கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்கப்படுகின்ற சுத்த ஜரிகை சேலையுடன் விலை ஒப்பிடப்பட்டு நுகர்வோர்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

இந்த சூழ்நிலையை முற்றிலுமாக மாற்றி, பட்டுப்புடவைகளை வாங்குகின்ற நுகர்வோர் தாங்கள் வாங்குகின்ற புடவையில் உள்ள ஜரிகை உயர்தரமானதா? சாதாரணமானதா? அல்லது போலியானதா? என்பதை புடவையில் உள்ள ஜரிகைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் அறிந்து கொள்ள உதவும் X-ray Fluorescence Analyzer என்னும் புதிய கருவி, கைத்தறி மற்றும் துணி நூல் துறையைச் சார்ந்த தமிழ்நாடு ஜரிகை நிறுவனத்தின் மூலமாக காஞ்சிபுரம் காந்தி சாலையில் பிரத்தியேகமான Booth



ஒன்று அமைக்கப்பட்டு அங்கு இந்தக் கருவி நிறுவப்பட உள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் தாங்கள் வாங்கும் பட்டுச்சேலையில் உள்ள ஜரிகையின் தரத்தை அறிந்து கொண்டு பயன் அடையலாம்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு கைத்தறி மற்றும் ஜவுளித் துறை அமைச்சர் திரு.வி. சோமசுந்தரம், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர் துறைச் செயலாளர் திரு. ஏ. இளங்கோவன்,இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் செல்வி லீனா நாயர், கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு. விஸ்வநாத் ஷெகாவ்கர் ஆகியோர் உடனிருந்தனர்.

★ ★ ★



# தமிழ்நாடு தழைக்க தன்னிகரற்ற முதலமைச்சர் தந்த விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

– திரு. இரா. ஜீவானந்தம்,
வேளாண்மைத்துறை அமைச்சர்

"சுவை புதிது, பொருள் புதிது, சொல் புதிது,
சோதிமிக்க நவகவிதை
எந்நாளும் அழியாத மகாகவிதை"

என்று பாட்டுக்கொரு புலவர் பாரதி குறிப்பிடுகின்றார்.

அதைப்போன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தும் திட்டங்கள் அனைத்தும் புதுமையானவை. பிறமாநிலங்களுக்கு முன்னுதாரணமானவை. ஆக்கப்பூர்வமானவை, மக்களுக்கு அளப்பரிய நன்மை தரக் கூடியவையாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள், தமிழகத்தின் வரலாற்றில் புரட்சிகரமான புதிய அத்தியாயங்களைப் படைத்து புதுயுகம் நோக்கி நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பொருளாதார வளர்ச்சிப் பாதையில் தோன்றிய தடைக்கற்களை தகர்த்து, வளமான தமிழகத்திற்கு வலுவான அடிப்படையினையும், கட்டமைப்பினையும் உருவாக்கும் ஆற்றல் மிக்க முதலமைச்சராகத் திகழுகின்ற இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் முற்போக்குச் சிந்தனை, தொலைநோக்குப் பார்வை, நடைமுறை சாத்தியக் கூறுபாடுகளோடு இணைந்த அணுகுமுறை ஆகியவை தமிழ்நாடு எண்ணற்ற உன்னத திட்டங்களைப் பெற்று எழிலும், ஏற்றமும் பெற வழிவகுத்துள்ளது என்பது வரலாறு உணர்த்தும் உண்மையாகும்.

"வளம் குன்றா இரண்டாம் பசுமைப் புரட்சி" – "மாற்றுப் பயிர்த் திட்டம்", "பயறு கிராமத் திட்டம்", "உயிர் தொழில்நுட்ப தோட்டக்கலை மற்றும் நுண்ணிய பண்ணையம்", ஓசூரில் ரோஜா ஏற்றுமதி மண்டலம், உதகையில் மலர்கள் ஏற்றுமதி மண்டலம், தேனியில் மாம்பழ ஏற்றுமதி மண்டலம், பண்ணைக் குட்டைகள் திட்டம், பயன்படுத்த முடியாத கிணறுகளை பயன்பாட்டுக்கு கொண்டுவரும் திட்டம் என்று வரலாற்றில் முத்திரை பதித்திடும் முத்தான திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பும், வருவாய் பெருக்கமும் கிடைக்கப்பெற்று நாட்டில் முதன்மையான மாநிலம் என்கின்ற இலக்கினை நோக்கி தமிழகம் இலட்சியப் பயணத்தை நடத்துகின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டு செம்மையாக செயல்படுத்தப்படும் புதுமையும், புரட்சியும் மிக்க திட்டங்களில் ஒன்றாக விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அமைந்துள்ளது.

பாசனத்திற்கு வழியின்றி, மழைநீருக்கு வாய்ப்புமின்றி வறண்டு போய் சாகுபடிக்குத் தகுதியின்றி கிடக்கும் தரிசு நிலம் அவலம் மிகுந்த பாலை நிலத்திற்கு ஒப்பானதாகும்.

இத்தகைய பயனற்ற பூமிப் பரப்பில் பசுமையை உருவாக்கவும், பயன்தரும் பல்வேறு பயிர் வகைகளை சாகுபடி செய்யவும் வழி கோலும் உன்னத திட்டமாக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

"தொழில் நுட்ப வளர்ச்சி மூலம் பயனற்றவைகளை, பயனளிக்கும் செல்வமாக மாற்ற வேண்டும்" (application of Technological Improvement to the conversion waste in to wealth) என்பது கிராம சுயராஜ்யம் குறித்த அண்ணல் காந்தியடிகளின் சிந்தனைப் பேழையில் காணக்கிடக்கின்ற சிறப்பான முத்தாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் அத்தகைய உன்னத நோக்கத்தை ஈடேற்றும் வகையில் விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்த அரசாணை பிறப்பித்து உள்ளார்கள்.

பாசன வசதியற்ற பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள "வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்" (Drought prone area programme) "தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்" ( National Watershed development project for Rainforced areas) "மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் (Western Ghats development programme) "ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் (Integrated waste land development programme) ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன.

இவை அனைத்தின் ஒட்டுமொத்த வடிவமாக அனைத்து திட்டங்களில் முக்கிய செயல்பாடுகளையும் உள்ளடக்கிய திட்டமாக "விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை" (Comprehensive Waste Land development programme) செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் அரசாணை பிறப்பித்திருப்பது தமிழகத்தின் வேளாண்மை வரலாற்றின் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கதாகும்.

தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 130 இலட்சம் எக்டேர் என்றால், இதில் தரிசாக கிடக்கும் நிலத்தின் பரப்பளவு 24 இலட்சம் எக்டேர் ஆகும்.

தரிசாகக் கிடக்கும் வறண்ட நிலங்களை விளைநிலங்களாக மாற்றவேண்டும் – இந்த முயற்சி ஒரு மக்கள் இயக்கமாக மலர வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் விழைவின் விளைவாக இந்தத் திட்டம் செயல்வடிவம் பெற்றுள்ளது.

மக்கள் சக்தியின் மகத்தான துணையோடு 2001–ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் அந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இத்திட்டம் குறித்த அறிவிப்பினை வெளியிடச் செய்தார்கள்.



ஐந்தாண்டு காலத்தில் தமிழ்நாட்டில் 20 இலட்சம் எக்டேர் பரப்புள்ள தரிசு நிலங்கள் மேம்படுத்தப்படும் என்பது அந்த அறிவிப்பாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி "மாநில தரிசு நிலம் மற்றும் நீர் வடிப்பகுதி ஆணையம்" அமைக்க 2001ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ஆம் நாள் வேளாண்மைத்துறையின் மூலம் அரசாணை பிறப்பிக்கப் பட்டது.

2002 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தமிழ்நாடு "நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்ட முகமை" அமைக்கப் பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் கண்ட "விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்" உயரிய விளைச்சலையும் ஒப்பற்ற பயன்பாட்டுத் திறனையும் உன்னத நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும்.

"திட்டமிடலின் முதற்படி ஆழ்ந்த சிந்தனையாகும்" என்று அறிஞர்கள் குறிப்பிடுவார்கள். அரசு செயல்படுத்தும் விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிந்தையில் தோன்றி சீரிய திட்டமாகும்.

இந்தத் திட்டம் உன்னத நோக்கங்களையும், குறிக்கோள்களையும், செயல்பாடுகளையும் கொண்டு செயல்படுத்தப்படுகின்றது.

நிலையான தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தி பெருக்கம் – பசுமை உருவாக்கம் – சுற்றுச் சூழல் மேம்பாடு – ஏழை விவசாயிகள் – விவசாயத் தொழிலாளர்கள் சமூக பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பினை உருவாக்கித் தருவது – தாவர எரிபொருள் மற்றும் தாவர எண்ணெய் உற்பத்தி பெருக்கம் போன்றவற்றை இத்திட்டம் முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்வடிவம் பெற்று வருகின்றது.

வேலை வாய்ப்பினைத் தேடியும், வாழ்க்கைக்கான வருவாய் ஆதாரத்தினை அடைந்திடவும் கிராமப்புற மக்கள் நகர்ப்புறங்களில் குடியேறுவதினால் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு கிராம மக்களுக்கு அவர்கள் வாழும் இடத்திலேயே வேலைவாய்ப்பினை உருவாக்கித் தர இத்திட்டம் வகை செய்கின்றது.

வறுமை (Poverty), அறியாமை (Illiteracy), வேலை வாய்ப்பின்மை (Unemployment) ஆகியவற்றை முற்றிலும் ஒழித்திட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு பன்முக அணுகுமுறையினை கையாண்டு அந்த முயற்சியில் வெற்றிக் கண்டு வருகிறது.

அதைப்போன்று, விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை பொறுத்தவரையிலும் "பன்முக அணுகு முறையினை" நமது அரசு கடைப்பிடித்து வருகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த "பன்முக அணுகுமுறை" குறித்து அழகுற குறிப்பிட்டுள்ளார்கள்.

"என்னுடைய தலைமையிலான அரசு அறிமுகப்படுத்தியுள்ள ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் மூன்று பகுதிகள் அடங்கும்.

முதல் பிரிவாக, " மக்கள் பங்கேற்புடன் விவசாயிகளுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை பண்படுத்தி வேளாண்மைத் துறையின் மூலம் மறுசீரமைப்பு செய்து அதனை விளைநிலங்களாக மாற்ற நடவடிக்கை"

இரண்டாவதாக, "அரசு தரிசு நிலங்களைப் கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் சுய உதவி குழுக்களின் கூட்டமைப்புக்கள் மூலம் வேளாண் தொழில்களுக்கு ஏற்ற வகையில் மாற்றி அமைப்பது" –

மூன்றாவதாக, 385 வட்டார வளர்ச்சிப் பகுதிகளிலும் குறைந்த பட்சம் ஒரு கோடி ரூபாய் செலவில் வேளாண் பொருட்கள் சார்ந்த மற்றும் பதப்படுத்துதல் தொழிற்சாலைகளை கிராமப்புறங்களில் தொடங்குவது" என்று குறிப்பிட்டார்கள்.

இந்த மூன்று அணுகுமுறைகளையும் தன்னகத்தே கொண்டதாக விரிவான தரிசு நிலமேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை பொறுத்தவரையிலும் "பன்முக அணுகு முறையினை" நமது அரசு கடைப்பிடித்து வருகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த "பன்முகஅணுகுமுறை" குறித்து அழகுற குறிப்பிட்டுள்ளார்கள்.

"என்னுடைய தலைமையிலான அரசு அறிமுகப் படுத்தியுள்ள ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் மூன்று பகுதிகள் அடங்கும்.

முதல் பிரிவாக, " மக்கள் பங்கேற்புடன் விவசாயிகளுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை பண்படுத்தி வேளாண்மைத் துறையின் மூலம் மறுசீரமைப்பு செய்து அதனை விளை நிலங்களாக மாற்ற நடவடிக்கை" –

இரண்டாவதாக, "அரசு தரிசு நிலங்களைப் கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் சுய உதவி குழுக்களின் கூட்டமைப்புக்கள் மூலம் வேளாண் தொழில்களுக்கு ஏற்ற வகையில் மாற்றி அமைப்பது" –

மூன்றாவதாக, 385 வட்டார வளர்ச்சிப் பகுதிகளிலும் குறைந்த பட்சம் ஒரு கோடி ரூபாய் செலவில் வேளாண் பொருட்கள் சார்ந்த மற்றும் பதப் படுத்துதல் தொழிற்சாலைகளை கிராமப்புறங்களில் தொடங்குவது" என்று குறிப்பிட்டார்கள்.

விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக மக்கள் பங்கேற்புடன் நீர்வடி பகுதி மேம்பாட்டுப் (Participatory Water Shed development) பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இதற்காக 10 மாவட்டங்களைச் சேர்ந்த 29 வளர்ச்சி வட்டாரங்களில் அடங்கிய 360 கிராமங்களில் 55,000 எக்டேர் தரிசு நிலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

எந்த ஒரு திட்டமும் வெற்றி பெற முழுமையான பயனைத் தர மக்களின் பங்கேற்பும், ஈடுபாடும் அவசியமாகும். அந்தத் வகையில் இந்தத் திட்டத்தின் செயல்பாட்டில் மக்களை பங்கேற்றச் செய்யும் வகையில் சுய உதவிக் குழுக்கள் – பயனாளிகளின் குழுக்கள் – பகுதிக் குழுக்கள் கிராம மேம்பாட்டுச் சங்கம் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன.

"மண்ணோடு நீரும், நீரோடு மண்ணும் இணைந்திருப்பதைப் போன்று விவசாயிகளோடு ஒருங்கிணைந்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் எதிர்காலத்திற்கும், முன்னேற்றத்திற்காகவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் விரிவான தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 10 மாவட்டங்களில் 21,771 எக்டேரில் நடவு பணி முடிவடைந்துள்ளது. இந்த நிலப்பரப்பில் 23,82,974 மரக்கன்றுகள் மற்றும் பழக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக 2001 – 2002 ஆம் ஆண்டு ரூ. 25 கோடியும், 2003 – 2004 ஆம் ஆண்டில் ரூ. 25 கோடியும் ஒதுக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணைப் பிறப்பித்துள்ளார்கள்.

இத்திட்டப் பணிகளுக்காக ஏற்கெனவே, செலவிடப்பட்ட தொகை போக மீதமுள்ள தொகையினை பயன்படுத்தி நடப்பாண்டில் ஒரு இலட்சம் எக்டேரில் நடவு

*இத்திட்டத்தின் கீழ் 2002 - 2003 ஆம் ஆண்டில் 55,000 எக்டேரில் பணிகள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 21,771 எக்டேரில் கன்றுகள் நடப்பட்டன. 2003 . 2004 ஆண்டிற்கு 53,294 எக்டேர் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டிற்கான குறியீட்டில் மீதமுள்ள 33,229 எக்டேர் மற்றும் நடப்பாண்டிற்கான இலக்கான 53,294 எக்டேர் ஆக மொத்தம் 86, 523 எக்டேரில் நடவு பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது, இத்திட்டத்திற்காக 36,42,000 மரக்கன்றுகள் மற்றும் பழக்கன்றுகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பாழ்பட்ட நிலத்தில் புதர் அகற்றி, சமன் செய்து, குழி எடுத்து, நடவு செய்து உயிர் வேலி அமைத்து பாதுகாக்க "விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், எக்டேர் ஒன்றுக்கு ரூ.12,150 செலவாகிறது என்றால் இதில் அரசு மானியமாக ரூ.8,500 வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணை பிறப்பித்துள்ளார்கள். இப்பணிகளுக்காக, பயனாளிகள் செலவிடும் தொகை ரூ.3,650 மட்டுமே ஆகும். முதற்கட்டமாக வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திண்டுக்கல், தேனி, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணை பிறப்பித்தார்கள்.

அடுத்தகட்டமாக, மேலும் 13 மாவட்டங்களையும் சேர்த்து 23 மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணை பிறப்பித்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் கீழ் 2002 – 2003 ஆம் ஆண்டில் 55,000 எக்டேரில் பணிகள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 21,771 எக்டேரில் கன்றுகள் நடப்பட்டன. 2003 – 2004 ஆண்டிற்கு 53,294 எக்டேர் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டிற்கான குறியீட்டில் மீதமுள்ள 33,229 எக்டேர் மற்றும் நடப்பாண்டிற்கான இலக்கான 53,294 எக்டேர் ஆக மொத்தம் 86, 523 எக்டேரில் நடவு பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 13,477 எக்டேர் பரப்பில் தீவன மேம்பாடு மற்றும் எண்ணெய் வித்து மரங்கள் பயிரிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மொத்தம் 1 இலட்சம் எக்டேர் பரப்பில் 2003–2004ஆம் ஆண்டில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளது.

விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசு தரிசு நிலங்களை கூட்டாண்மை நிறுவனங்கள் மூலம் மேம்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 8 எக்டேருக்கு குறைவான நிலங்கள் கூட்டுறவு நிறுவனங்கள், சிறு நிறுவனங்கள், மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழுக்களின் கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு வழங்கப்படுகின்றன.

8 எக்டேருக்கு கூடுதலான பரப்பளவு கொண்ட தரிசு நிலங்கள் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்தகைய தரிசு நிலங்கள் 30 ஆண்டு கால குத்தகைக்கு விட அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.







மக்கள் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் இத்திட்டத்தின் கீழ் மேய்ச்சல் பகுதி பொது பயன்பாட்டில் உள்ள அரசு நிலங்கள், நீர் நிலைப் புறம்போக்கு நிலங்கள் மற்றும் வனங்கள் முதலிய வகைப்படுத்தப்பட்ட அரசு நிலங்கள் ஒதுக்கப்படமாட்டாது என்று அறிவித்துள்ளார்கள்.இந்த அடிப்படையில், **2002–**ஆம் ஆண்டு சூலைத் திங்கள் **5–**ஆம் நாள் தரிசு நிலங்கள் குறித்த விவரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வெளியிடப்பட்டது.

விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலம் ஒதுக்கக் கோரி சிறு நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து **1,373** விண்ணப்பங்களும் கூட்டாண்மை நிறுவனங்களிடமிருந்து **224** விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைந்துள்ள குழுக்களால் ஆய்வு செய்யயப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் அமைந்துள்ள மாநில அளவிலான உயர் மட்டக்குழு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்து அனுப்பிய விண்ணப்பங்களை பரிசீலனை செய்து அரசாணை பிறப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை **5** நிறுவனங்களுக்கு **624.77** எக்டேர் பரப்புள்ள நிலத்தினை குத்தகைக்கு வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், கூட்டாண்மை நிறுவனங்களுக்கு நிலம் குத்தகை விடுவது குறித்து அந்த நிறுவனங்களோடு அரசு சார்பாக ஒப்பந்தம் (Memorandum of Understanding) செய்து கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விரிவான தரிசு நில மேம்பாட்டு திட்டம் சிறப்பாக செயல்படுத்தபட வேண்டும் என்பதில் அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தில் பல விதிமுறைகளை இணைத்து அரசாணை பிறப்பித்துள்ளார்கள்.

நிலத்தை பெற்றவர்கள் **3** ஆண்டு காலத்திற்குள் திட்டமிட்டப்படி பயிரிட வேண்டும் என்றும், ஐந்தாண்டுகளுக்குள் தொழில் அலகுகள் உற்பத்தியை துவங்க வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப் பட்டுள்ளது. இந்த நிபந்தனையை நிறைவேற்றாதவர்களின் குத்தகை ரத்து செய்யப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

“நிலையான வேளாண்மை என்பது உணவு பாதுகாப்பின் அடிப்படை அம்சமாகும். நிலையான வேளாண்மை என்பது தற்போதைய தேவைகளை ஈடுசெய்யக்கூடிய வகையில் உற்பத்தி செய்வது மாத்திரமல்ல. எதிர்கால தலைமுறையினரும் பயனடையும் வகையில் விளைச்சலை உருவாக்குவது ஆகும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் விழைவாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு இணைந்த இந்த இலட்சியத்திற்கு செயல்வடிவம் தரும் வகையில், விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் படுகின்றது.

இத்திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் முழுமையாக நிறைவேற்றப்படும் வேளையில், எங்கும் பசுமை, எல்லா இடங்களிலும் சாகுபடி, மக்களுக்கு பயன் தரும் வகையில் விளைச்சல் பெருக்கம் என்கிற சூழ்நிலை உருவாவது திண்ணம். ★

# முதியோர் - குழந்தைகள் - ஊனமுற்றோர் ஏறும் வகையில் புதிய வடிவமைக்கப்பட்ட தாழ்தளப் பேருந்துகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.8.2003 அன்று சென்னை மாநகரப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும் முதியோர், குழந்தைகள், பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்றோர்கள் எளிதாகவும், பாதுகாப்பாகவும் ஏறி இறங்கும் வகையில், படிக்கட்டுகள் தரையில் இருந்து குறைந்த உயரம் உடையதாக அமைக்கப்பட்டுள்ளதும், வழக்கத்தை விட குறைந்த உயரத்தில் தளம் அமைக்கப் பட்டுள்ளதுமான, தாழ்தளப் பேருந்துகளை (Low Floor Bus) தொடங்கி வைத்தார்கள்.

இந்த தாழ்தளப் பேருந்தில் படிக்கட்டுகள் தரையிலிருந்து குறைந்த உயரம் உடையதாக அமைக்கப்பட்டிருப்பதுடன், உடல் நலிந்தவர்களும் வசதியாக ஏறும் வகையில் படிக்கட்டுகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. சாதாரணப் பேருந்துகளில், முன்புறம் மூன்று படிக்கட்டுகளும், பின்புறம் மூன்று படிக்கட்டுகளும் அமைக்கப் பட்டுள்ளன. ஆனால், இந்த தாழ்தளப் பேருந்து முன்புறம் ஒரு படிக்கட்டுடனும், பின்புறம் இரண்டு படிக்கட்டுகளுடனும் வடிவமைக்கப் பட்டுள்ளது.

சாதாரணப் பேருந்துகளில் பேருந்தின் தளம் தரையில் இருந்து 102 செண்டி மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. ஆனால், தாழ்தளப் பேருந்தில் முன் பகுதியின் உயரம் 63 செண்டி மீட்டராகவும், பின்பகுதி 78 செண்டி மீட்டராகவும் குறைத்து அமைக்கப் பட்டுள்ளது. மேலும், பயணிகள் வசதியாக அமரும் வகையில், பயணிகளின் இருக்கைகளின் எண்ணிக்கை 48–லிருந்து 43ஆக குறைக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், 25–8–2003 அன்று 9 தாழ்தளப் பேருந்துகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இப்பேருந்துகள் தடம் எண் 70–ல் தாம்பரம் – ஆவடிக்கு இடையேயும், 18 வெட்டுத் தடத்தில் தாம்பரம் – பிராட்வேக்கு இடையேயும் இயக்கப்பட உள்ளது.




இந்த நிகழ்வின்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆர். விஸ்வநாதன், போக்குவரத்துத் துறை செயலாளர் இரா. கற்பூர சுந்தரபாண்டியன் இ.ஆ.ப., சென்னை மாநகர போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. மெய்யப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

மாத சந்தா செலுத்துவீர்!

# 10வது மாத சந்தா இலவசம்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!



ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!**

| மாதச் சந்தா ரூ. 1 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. 2 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 3 | கூடுதல் தொகை (2+3) ரூ. 4 | அரசு தள்ளுபடி ரூ. 5 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 6 |
|---|---|---|---|---|---|
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at: www.cooptex.com

Visit us at: www.tn.gov.com

**பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை**


தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-518
நீலகிரி மாவட்டம்
மாண்புமிகு தமிழ்நாடு